# கிராமவாழ்வே
# தேசவாழ்வு.

எழுதியது

டாக்டர் சவரிராயன் ஏசுதாசன், F. R. C. S.

கிறிஸ்துகுல ஆசிரமம்

திருப்பத்தூர்—வடஆர்காடு.

திருப்பத்தூர் விக்டோரியா அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1936.

விலை அணா 6.

# குறிப்பு

இப்புத்தகம் "கிராம வாழ்வு" என்று 1930-ம் வருஷத்தில் வெளியிட்ட புத்தகத்தை திருத்தியும் அநேக விஷயங்களைக் கூட்டியும் விஸ்தரித்தும் திரும்பி அச்சிடப்பட்டிருக்கிறது. மாணவருக்கும் பாமரமக்கள் முன்னேற்றத்திற்கென்று தொண்டுசெய்வோருக்கும் இது மிக உபயோகமாயிருக்கவேண்டுமென்பது என் பேரவா. பலப் புதுப்படங்களும் சேர்த்திருக்கிறேன். ஒருவாராக இதை ஒரு புதுப் புத்தகமென்றே சொல்லவேண்டும்.

இப்புத்தகத்தில் வெளியிட்டிருக்கும் அபிப்பிராய முதலிய வற்றிற்கு நானே தனிப் பொறுப்பாளி. அவை யெல்லாம் திருப்பத் தூர் கிறிஸ்துகுல ஆசிரம அபிப்பிராயங்களாக ஒருவரும் எண்ண வேண்டாம்.

இப்புத்தக மெழுதுவதற்கு எனக்குதவியாகவிருந்த தமிழ் நாட்டுச் சரித்திர புத்தகங்கள் பலவுண்டு. அவற்றை யெல்லாம் பெயர் கூற ஆரம்பித்தால் புத்தகம் விரிவாய்ப் போய்விடும். ஆனாலும் சரித்திர நூலாசிரியர் பலருக்கு நான் இவ்விஷயத்தில் கடமைப் பட்டவனென்று நன்றியோடு உணருகிறேன். விசேஷமாக இந்தியாவின் பொருளாதார நிலையைக் குறித்து விஸ்வேஸ்வரையா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் புத்தகத்தினுடைய கணக்குகள் எனக்கு வெகு உதவியாயிருந்தன. இந்தியா முழுவதையும் பார்த்து தமிழ் மக்களாகிய நாம் இப்பெரிய தேசத்தை முன்னேற்ற மடையச்செய்துவிடுவது நம்மாலாகுமா வென்று திகைத்து மயங்க வேண்டாம். நமது தமிழ் நாடு முதலாவதாக சீர்திருத்தமடைய நம் மாலியன்றதை முழு பலத்தோடும், உற்சாகத்தோடும், தியாக சிந்தை யோடும் செய்வோம். தமிழராகிய நாம் ஐக்கியமாக ஒன்றுபட்டு நின்று முன்னேறிச்சென்றால், நமது நல்ல மாதிரியும், உற்சாகமும், ஐக்கியத்தினால் நமக்கு வரும் பலமும் அகில இந்திய முன்னேற்றத்திற்கு ஒரு பேருதவியாயிருக்கும். நமது தேசத்தையும்விட பெரியதாகிய சீன தேச முன்னேற்றமடைய அதன் தென்கோடியிலிருக்கும் கன்ரோன் மாகாணம் பேருதவிசெய்திருக்கிறது. 200 லக்ஷத்திற்கு மிகுந்த தொகையான தமிழ் மக்களே, உங்கள் ஐக்கியத்தினால் வரும் சக்தியை உணருங்கள். சுய இகழ்ச்சியையும், மந்த புத்தியையும் உதறிவிட்டு தேச மீட்பிற்கென்று எழுந்து முன் செல்லுங்கள்.

கிறிஸ்துகுல ஆசிரமம்,
திருப்பத்தூர் (வட ஆற்காடு)
14—10—1936.

சவரிராயன் ஏசுதாசன்.

# கிராமவாழ்வே தேசவாழ்வு.

## பொருளடக்கம்.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| நம்பிக்கையற்ற மனநிலை | .... | .... | 1 |
| விவசாயம் | .... | .... | 4 |
| கைத்தொழில்கள் | .... | .... | 16 |
| குடியேற்று | .... | .... | 25 |
| சுகாதாரமும், வைத்தியமும் | .... | .... | 38 |
| உணவு | .... | .... | 53 |
| கல்வி | .... | .... | 55 |
| வியாபாரம் | .... | .... | 81 |
| ஐக்கியமும், கூட்டுறவும் | .... | .... | 96 |
| முடிவுரை. | .... | .... | 119 |

# தேசவாழ்த்து.

## கண்ணிகள்.

1. உள்ளங்கனிந்துபாடி ஓயாது நாடித்தேடி
வெள்ளம் பெருகவானந்த—கண்ணீர், மாதாவே
பிள்ளையான் போற்றி யூற்றுவேன்.

2. உன்வாழ்வை முன்கருதி என்வாழ்வைத் தத்தஞ்செய்து
பொன்னும் பொருளாய் நாடிடேன்—சுகம் செல்வமும்
அன்னையுன் பாதம் படைப்பேன்.

3. எத்தனைமூதோர்முக்தர் எல்லாம்துறந்தபக்தர்
சத்தியவிரதம்பூண்டோரை—பெற்றவென்மாதா
உத்தமியுன்னைப்போற்றுவேன்.

4. குன்றுமலையருவிகோவில் குளம் நதிகள்
என்றும்கவறும்காட்சிகள்—நந்தவனத்தில்
நன்று பாடும் பறவைகள்.

5. வாழ்க நம்இந்தியாவே வாழ்கசெந்தமிழ்நாடே
வாழ்ககிராம வாசிகளே—சிறியோர் பெரியோர்
வாழ்க என்றென்றும் வாழ்கவே.



கிராமவாசிகள் தங்கி வைத்தியம் பெறும்
திருப்பத்தூர் ஆசிரம வைத்தியசாலை.



திருப்பத்தூர் ஊரார் தண்ணீர் எடுக்கும் குளம்.
சரியானபடி பாதுகாப்பில்லாவிட்டால் இப்படிப்பட்ட
திறப்புக் குளம் விஷபேதி முதலிய தொத்துவியாதி
பரவச் செய்யும்.



திருப்பத்தூர் ஆசிரம விவசாயவேலை—தானியத்தை
களத்தில் கூட்டிச் சேர்ப்பது.

# முகவுரை

இப்புத்தகத்தில் நான் எழுதுபவைகளைக் குறித்து நீங்கள் கவனிக்கும்படி கேட்க எனக்கு ஒரே ஒரு பாத்தியந்தான். கடந்த பதினைந்து வருஷத்திற்கு மேலாக நான் கிராம வாசிகளுடன் புழுங்கிப் பழக வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூரில் இருக்கும். கிறிஸ்துகுல ஆச்சிரமத்தின் மூலமாய் பல நற் சமயங்கள் வாய்த்துள்ளன. கிராம விஷயங்களைக் குறித்து நன்கு அறிய கிராமவாசிகளோடு நெருங்கி சிநேகஞ் செய்ய வைத்தியம், பள்ளிக்கூடம், விவசாயம் முதலிய இவ்வாச்சிரம வேலைகளின் மூலமாய்ப் பல நல்ல ஏதுக்கள் இருந்திருக்கின்றன. இதுவுமல்லாமல், இந்த ஆச்சிரமமிருக்கும் திருப்பத்தூர் தாலுக்காவின் பற்பல கிராமங்களுக்கு இந்த ஆச்சிரமத் தொண்டர்களாகிய நாங்கள் சமயம் வாய்க்கும்போதெல்லாம் போய்த் தங்கி, கிராமச் சீரமைப்புக்கு ஆதாரமாக பற்பல ஊழியங்களைச் செய்து வந்திருக்கின்றோம். நாமெல்லோரும் நமது தாய் நாடாகிய இந்தியாவைச் சிநேகிக்கிறோமல்லவா? நமது இந்தியாவில் தொன்று தொட்டு இச்செந்தமிழ்நாடு குன்றிலிட்ட விளக்கேபோல் பிரகாசித்ததில்லையோ? தஞ்சாவூரிலிருந்து பர்மா தேசம் வரையில் தமிழ்க்கீர்த்தி விளங்கும்படி படைக்கப்பல்களோடு சென்று செங்கோல் செலுத்தி வந்த இராஜ இராஜ சோழன் முதலிய தமிழ் மன்னர்களின் மேன்மையையும், அந்நியநாட்டாரும் புகழ்ந்து பேசும் அரிய பெரிய சிற்ப சாஸ்திர விதிப்படி யமைந்த கோயில்கள், மண்டபங்கள், அரண்மனைகள் முதலியவைகளின் காட்சியையும், மேல்

நாட்டோடு பூர்வீக காலத்தில் செய்து வந்த சிறந்த வியாபார சம்பந்தத்தையும், தற்காலத்தில் உயர்கலை கற்றுவிட்டோம் என்று இறுமாப்படைந்திருக்கும் தமிழ்மக்களில் எத்தனைபேர் அறிவார்கள். அந்தோ! தற்காலத்தில் நமது நாட்டின் ஸ்திதி என்ன? இந்தியாவைச் சிநேகிக்கிறோம் என்னும் நண்பர்களே, இந்த இந்தியா என்பது என்ன? இந்திய மக்களானால் இவர்கள் யாவர்? பெரும் நகரவாசிகளோ? நம் தேசத்தில் பட்டணங்கள் என்று வர்ணிக்கத்தக்க அதாவது குறைந்தது ஒரு லக்ஷம் ஜனங்களடங்கிய நகரங்கள் முப்பதே யுள்ளனவாம். ஆனால் ஏழரை லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய இவைகளில் $31\frac{1}{2}$ கோடி ஜனங்கள் வசிக்கின்றார்கள். இந்தியாவில் மொத்த ஜனத் தொகை $35\frac{1}{4}$ கோடி. இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குமேல் கிராமவாசிகள்தான். உலக ஜனத்தொகை $202\frac{1}{2}$ கோடி. இப்புவியின் மனு மக்களில் ஆறில் ஒருபங்கு இந்தியாவில் வசிக்கிறார்கள்.

(1931 வருஷத்தில்)

| தேசம். | கிராமம். | நகரம். |
|---|---|---|
| இந்தியா | $31\frac{1}{4}$ கோடி<br>89% | 4 கோடி<br>11% |
| இங்கிலாந்து | 20% | 80% |
| ஜெர்மனி | 38% | 62% |
| பிரன்சு | 50% | 49% |
| அமெரிக்கா | 44% | 56% |
| கன்னடா | 46% | 54% |
| ஜப்பான் | 44% | 56% |

இந்தியாவின் ஜனத்தொகை பிரிட்டனுக்கு 8-மடங் கதிகம். கைத்தொழிலுக்காக வேண்டிய வசதிகளும், உப கரணங்களுமாத்திரம் கிடைத்துவிட்டால் இயற்கையிலேயே உள்ள மூலப் பொருள்களைக்கொண்டு எவ்வளவோ அதிக கடைப் பொருட்களை தாங்களே செய்துக் கொள்ளக்கூடிய வர்கள் நமது இந்திய மக்கள்.

நமக்கு தேசபக்தி யென்றால் கிராமபக்தியென்றே இருக்க வேண்டும். இல்லாவிடில் அது உத்தம பக்தியல்ல. கிராம வாசிகள் வாழாவிட்டால் இந்தியா வாழாது. இப்படியிருக்க, தற்காலத்தில் நமது கிராமவாசிகளின் ஸ்திதி என்ன? இவை களை ஒவ்வொன்றாக கவனிப்போம்.

---

# கிராம வாழ்வே தேச வாழ்வு.

## நம்பிக்கையற்ற மன நிலை.

ஓர் மனிதன் மிகுந்த பரிதாபமான ஸ்திதியிலிருக்கலாம்; ஆனால் அவனிடத்தில் நல்ல காலம் வருமென்று ஓரணுவாவது நம்பிக்கை தங்கி நிலைகொள்ளுமானால், அவன் காரியமும் பிற்கால சம்பவங்களுங் கைகூடி வரும். நம்பிக்கை அடியோடு போய்விட்டால் அதற்குப்பின் என்ன உண்டு? இந்த மன நிலைக்குப் பல காரணங்களுண்டு. கிராம வாசிகளுக்குத் திடீரென்று பல நஷ்டங்களுந் துன்பங்களும் வருவதுண்டு. கால மழை இல்லாமை; தங்கள் நஞ்சைக்கும் கிணறுகளுக்கும் ஆதாரமான ஏரிகள் வறண்டு போதல், சாதாரண வீட்டுச் செலவுக்குவேண்டிய தண்ணீர்கூட கோடை காலங்களில் கிடைக்காமல் போதல்; விவசாயத் திற்கு இன்றியமையாத அவன் மாடுகளோ, புல் முதலிய ஆகாராதிகளில்லாமல் நலிந்து, மெலிந்து தவித்தல்; இப்படி மெலிந்து இளைத்த மாடுகளைக் கொண்டு அவன் உழும்போது, பின்னே இவன் காட்சியும், முன்னே தள்ளாடிக்கொண்டு செல்லும் மாடுகளின் காக்ஷியும், தண்ணீர்ப் பசையில்லாத வறண்ட நிலத்தைச் சுரண்டிக் கொண்டு போகும் ஏரின் காட்சியும் நான் எவ்விதமாய் வர்ணிப்பேன்? குடியான வன் கண்கள் மழை மறந்த வெண்கலம் போன்ற வானத்தை உயர நோக்கி, ஐயோ! ஏமாந்து போகின்றன. குடியான வனின் பேச்செல்லாம் மழையைப் பற்றியே.

கிராமக் கடன் கொஞ்சங்குறைய 950 கோடி ரூபாய். அதாவது விவசாயத்தால் பிழைக்கும் ஒவ்வொருவனுக்கும் சராசரி ரூ. 50 வீதம் கடன். ஒவ்வொருவனுக்கும் ஆளுக்கு சராசரி ரூ. 50 வரும்படியாகுமாதலால் வருகிற வரும்படியெல்லாம் கடன் தீர்க்கத்தான் போகவேண்டும். ஆனால் தற்சமயத்தில் விவசாயப்பொருள் விலை மிகக்குறைந்துவிட்டதால் விவசாயம் பொதுவாக நஷ்டமே என்று சொல்லவேண்டும். தங்களை நாகரீகமுள்ளவர்களென்று எண்ணுகிற மேல் நாட்டார் இதனால் விவசாயத்தை விட்டுவிட்டு கைத்தொழிலையே பிரதானமாகக் கையாடுகிறார்கள்.

நெருக்கி ஆழ்த்தும் பணக் கஷ்டமும், கடனும் விவசாயியை நசுக்குகின்றன. கடன் கொடுத்தவனோ சாமர்த்தியமாய் முதலைத்திரும்பிக் கொடுக்க அவனை அவசரப்படுத்தாமல் காத்துக் கொண்டிருக்கிறான். கடைசியில் கச்சேரி சென்று அந்த ஏழைக் குடியானவன் நிலத்தைக் கடனுக்கும் வட்டிக்கும் பதிலாகப் பறித்துக்கொள்ளுகிறான். இப்படிக் கவலை ஆழ்த்தும் கடனிலிருந்து மீட்கப்படாவிட்டால் கிராமத்தாரின் பாடு கொடூரமே.

இதுவெல்லாம் போதாதது போல் காலாகாலங்களில் வாந்தி பேதி, வைசூரி, பிளேக் என்று சொல்லப்படுகிற கொள்ளை நோய், கொக்கிப் புழுநோய், முறைக் காய்ச்சல் முதலிய பற்பல பயங்கர தொத்து வியாதிகள் கிளம்பி பரவுகின்றன. இவைகளினால் அவ்வேழைக் குடியானவனின் மக்கள், நெருங்கிய பந்துக்கள் ஏராளமாய் மாண்டு போகிறார்கள். அவனை ஆழ்த்தும் தரித்திரமும் அவனை வருத்தி

நசுக்குகிறது. எந்நேரமும் பஞ்சமும் பட்டினியுந்தான். ஏதோ உயிரும் உடலும் ஒன்றாயிருக்கும் படி வழி பார்த்துக் கொள்ளுகிறானேயல்லாமல், மெய்யாக மானிட ஜீவியத்தின் பாக்கிய அனுபவங்கள் அவனுக்குக் கிடையாது. இது எப்போதாவது மாறுகிறதுண்டோ வென்றால், ஒரேவொரு மாறுதல்தான் அவனறிவான். அரைப் பஞ்சம் முழுப் பஞ்சமாகிவிடுகிறது. அதாவது, பொறிக்கும் சட்டியின்மேல் விழுந்த பூச்சி தவறி அடுப்பிலே விழுந்தாற்போல் அவன் காரியம். 1871-லிருந்து 1921-மட்டும், அதாவது 50 வருஷங்களில் நமது தேசத்தில் பஞ்சத்தினால் மாத்திரம் மடிந்தவர்கள் கொஞ்சம் குறைய 3 கோடி. பட்டாளத்திற்காக வருஷம் 55 கோடி ரூபாய் சர்க்கார் செலவு. ஆனால் பஞ்ச நிவர்த்திக்காக 41 லட்ச ரூபாய், அதாவது பட்டாளச் செலவில் 137ல் ஒரு பங்கு போல்தான் செலவு செய்கிறார்கள். தடுக்கக்கூடிய கொள்ளைநோய் முதலியவற்றால் பத்து வருஷத்தில் மாண்ட ஆறேகால் கோடி ஜனங்களைக் குறித்து, இன்னொரு இடத்தில் எழுதுகிறேன்.

ஓர் குடியானவனின் தினசரி வருமான மென்ன? நான் தொண்டுசெய்து வரும் இப்பாகங்களில் சாதாரண சமுசாரிகளின் நில வருமானத்தைக்குறித்து நான் சற்று நுட்பமாய் விசாரித்து வருகிறேன். அவனுக்கு மாதம் இரண்டு ரூபா வருகிறது கஷ்டம். அதாவது, ஒரு நாளைக்கு ஏறக்குறைய ஒரு அணா வீதம் வரும்படி யாகிறது. போதுமான மழை பல வருஷங்களாக இல்லாததால் ஏரிகள் வறண்டுபோய்க் கிடக்கின்றன. வாய்க்குங் கைக்குஞ் செலவு கிட்டாததால்

கூலி வேலை செய்து குடியானவன் தன் குடும்பத்தை ஆதரிக்க முயலுகின்றான். கிராமங்களில் ஒரு கூலிக்காரனுக்குச் சாதாரணமாக நாலணாவும், ஒரு பெண்ணுக்கு இரண்டணாவுந் தினக்கூலி. இதில் வேலைக்கிடையாத காலங்களுமுண்டு. சரி, புருஷனும் மனைவியுமாகச் சேர்ந்து ஆறணா சம்பாத்தியஞ் செய்கிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். ஒரு குடியானவனுக்கு சராசரி நான்கு பிள்ளைகளிருந்தால் ஆளுக்கு ஒரு அணாதானே ஆகிறது.

எல்லாம் "விதிவசம், தலையிலெழுத்து" இதற்கு எதிர்த்து என்ன செய்தாலும் உபயோகமில்லை என்று கிராமத்தார் கைவிரித்துவிட இடங்கொடுத்துவிடக் கூடாது. "தன் கை தனக்குத் துணை" மானிடர் பரிபூரண சுதந்திரமடைந்து வாழ்வதே கடவுளின் சித்தம் என்ற நம்பிக்கையும் உற்சாகமும் அவர்களுக்கு வரச் செய்யவேண்டும்.

---

# விவசாயம்.

இந்தியாவின் பரப்பளவு 18-லட்சம் சதுரமைல்கள் விவசாயம் செய்யப்பட்ட நிலம் 2619-லட்சம் ஏக்கர் அதாவது ஏறக்குறைய 4 லக்ஷம் சதுர மைல்கள். தண்ணீர் பாய்ச்சப்பட்ட நிலம் 497-லட்சம் ஏக்கர், இவற்றுள் 260 லட்சம் ஏக்கர் கால்வாய்கள் மூலமாகவும், 68 லட்சம் ஏக்கர் ஏரிகளாலும், 117-லட்சம் ஏக்கர் கிணறுகளாலும், 53-லட்சம் இதரவாயிலாகவும், நீர் பாய்ச்சப்படுகின்றன. 22-லட்சம் ஏக்கர் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட பாய்ச்சல் பெறுகின்றன. நிலத்தீர்வை வசூல் 12-கோடி 9 லக்ஷம்

ரூபாய். கீழ்க்கண்ட ஜாபிதா விவசாயப் பொருட்களின் பெயர், அவை பயிரிடப்பட்ட பரப்பளவு விளைவைக் காட்டுகிறது.

| பெயர். | பரப்பளவு (ஏக்கர்.) | விளைவு (டன்.) |
|---|---|---|
| அரிசி | 806-லட்சம் | 332-லட்சம் |
| கோதுமை | 248 ,, | 93 ,, |
| எண்ணெய்வித்து | 164 ,, | 20 ,, |
| கரும்பு | 29 ,, | 32 ,, |
| பருத்தி | 142 ,, | 68 ,, (பொதிகள்) |
| சணல் | 34 ,, | 112 ,, (பொதிகள்) |
| தேயிலை காப்பி ரப்பபர் | 104 ,, | 4480 ,, லட்சம் பவுண்டு |

இந்தியருக்கு அவசியமான தானிய அளவு வருஷத்திற்கு 850-லட்சம் அல்லது 900-லட்சம் டன் நிறையாம். ஆனால் பயிரிடப்படும் தானிய அளவு (வித்துக்கும், கால் நடைகளுக்கும் போக மீதி) 600-அல்லது 700-லட்சம் டன் தான். இந்தியாவின் விளைவு அதன்மக்களுக்கே வேண்டிய ஆகாரத்திற்கு போதாது.

விவசாயம் மூலமாக பிரிட்டிஷ் இந்தியாவில் வரும் வருஷ வருமானம் 1568-கோடி ரூபாய். இது ஒரு ஏக்கருக்கு 60 ரூ. வீதம் (மொத்த ஜனத்தொகையில்) ஆளுக்கு 59 ரூ. வீதம் விழுகிறது. இதை சில அந்நியநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1931-ல் | ஸ்வீடனில் | வருடத்துக்கு ஆளுக்கு | 102 ரூ. |
| ,, | அமெரிக்காவில் | ,, | 175 ரூ. |
| ,, | கனடாவில் | ,, | 213 ரூ. |

நமது நாட்டில் 100-க்கு 73பேர் வேளாண்மை செய்ப வர்கள். இதனால் விவசாயம் எவ்வளவு விசேஷமானதென்று நாம் நன்குணரலாம். குடியானவர்கள் தங்கள் பாரம்பரிய அறிவின்படி சாமர்த்தியமாய் விவசாயம் செய்து கொண்டு வருவது பல விஷயங்களில் மெச்சிக் கொள்ளத் தகுந்ததே. விவசாயத்தில் அநுபவ அறிவும் நமது குடியானவர்களுக்கு அதிகமுண்டு. ஆனால் இது மாத்திரம் போதாது. தற் காலத்தில் விவசாய அபிவிருத்திக்கென்றும், ஆடுமாடுகள் பருத்து விருத்தியடையவும் பலவிதநூதன விஷயங்கள் மேல் நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நிலங்களில் வித்து வேரூன்றி நல்ல மேனியுண்டாகும்படி ஆழமாக உழுது, புழுதியைத் திருப்பிப் புரட்டிக் குவிக்கும் புதுவித கலப்பைகளும், வரிவரியாய்ப் பயிர் விதைக்க யந்திரங்களும், துரிதமாய் வயல்களில் ஓட்டி பயிர் அறுத்துச் சேகரிக்கும் யந்திர வண்டிகளும், போரடிக்கும் கருவிகளும், நெல் குத்தும் யந்திரங்களும், மாவரைக்கும் காற்றூடி யந்திரங்களும், இப் படி எத்தனையோ விதமான புது விவசாயக் கருவிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். தண்ணீர் இறைத்து குழாய்கள் மூல மாய் வயல்களுக்குப் பாய்ச்ச காற்றூடி யந்திரங்கள், மின் சாரம், எண்ணெய் முதலியனவற்றால் ஓடும் யந்திரங்கள் இப்படிப் பல உண்டு.

ஏர், கவலையோட்டும் மாடுகள் விருத்தியாகப் பலவித நூதன சாஸ்திர முறைமைப்படி அவைகளைப் பருத்துப் பெருகச் செய்வதுமுண்டு. நமது கிராமங்களில் இங்குமங்கும் கேள்வி கேட்பாரில்லாமல் அலைந்துதிரிகின்ற பொலி எருதுகள் அவ்வளவு பிரயோஜன முள்ளவைகளல்ல. மேல்நாடுகளில்

இவைகளை கவனமாய்ப் பாதுகாத்து, கன்றுகள் விருத்தியடையும்படி உபயோகிக்கிறார்கள். அந்நாட்டுப்பசுக்களும் பலமுள்ளவைகளும், ஏராளமான பால் கொடுக்கக்கூடியவைகளுமாயிருக்கின்றன. நாம் வீடுகளில் தண்ணீர்வைக்க உபயோகிக்கிறோமே, அவ்வளவுள்ள பாத்திரங்களில் (வாளிகளில்) பால் கறப்பார்கள். அமெரிக்காவில் ரப்பர் குழாய்களைப் பசுக்களின் மடிகளில் மாட்டி யந்திரம் வைத்துப் பால் கறப்பதைப் பார்த்திருக்கிறேன். ஒரு பசு ஓரே நாளில் கொஞ்சம் குறைய 16 படி பால் கொடுக்கும். கறக்கிற பாலும் திண்ணமாயும் சாரமுள்ள தாயுமிருக்கும். மாடுகள் கட்டுகிற இடங்களும் நல்ல ஒழுங்கின்படி கட்டப்பட்டிருக்கும். இரை போடத் தொட்டி, மாட்டு எரு, கோமியம் முதலிய நிலத்துக்கு எருவாக உபயோகப்படுத்தத் தக்கவைகளைச்சேகரிக்கும்படி ஒழுங்குண்டு. எருக்குழிகளும், கோமியம் சேர்க்கக் கால்வாய்த் தொட்டிகளும் கட்டப்பட்டிருக்கும். ஒழுங்கீனமாய், ஏனோதானோவென்று மாடுகளுக்கு புல் முதலிய தீனிகொடுக்காமல், ஒழுங்கின்படியும் மாட்டின் தேவை அவசியம் என்னவென்பதைக் கவனித்தும், ஆகாரங் கொடுப்பார்கள். ஐரோப்பாவில் சிறந்த பசுக்களுக்குப் பெயர் பெற்ற தேசங்கள் டென்மார்க்கு, ஸ்வீடன் என்னும் தேசங்களே. அங்கே பல இடங்களில் விவசாய வேலைக்குக் குதிரைகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் ஏராளமான வயல்களுள்ள ஜெர்மனிதேசத்தின் தென் பாகங்களிலோ நமது நாட்டைப்போல் காளைகளை உபயோகிக்கிறார்கள். நமது குடியானவர்கள் ஏாடிக்கப் பசுக்களை உபயோகப் படுத்துவது இரக்கமற்ற கெட்ட வழக்கமென்பது என் அபிப்பிராயம். பசுவை மேன்மையாகக் கொண்டாடும்

இத்தேசத்தில் இப்படிச் செய்வது தர்மமோ? மேல் நாட்டு சமுசாரிகள் விஸ்தீரணமான நூற்றுக்கணக்காக பல ஏக்காடங்கிய நிலமுள்ளவர்கள். கொஞ்சம் நிலமுள்ளவர்கள் கூலியாள் வைத்துப் பயிரிட்டால் வாழமாட்டார்கள். அவர்களுக்கு வரவு செலவு கட்டாது. குறைந்தது ஐம்பது ஏக்கர் நிலமாவது சொந்தமாக இல்லாதவன் கூலியாள் வைத்துப் பயிர்செய்தால் அவனுக்கு நஷ்டமுண்டாகுமென்று கிராம அநுபவமுள்ள ஒருவர் சொல்லுகிறார். அமெரிக்காவில் ஒரு சமுசாரிக்கு ஆயிரம் ஏக்காவிற்கு மேலே உண்டு.

நான் பலவிதமான மேல்நாட்டு நூதன விவசாய முறைமைகளைக் குறித்து விவரமாய்ப் பேசினேன். குடியானவர்கள் தற்காலத்திலிருக்கும் தரித்திர நிலைமையை யுணர்ந்தால், இப்பேர்பட்ட மேல் நாட்டு முறைமைகள், யந்திரங்கள் முதலியன உபயோகித்து சாகுபடி செய்வதற்கு யாரால் முடியுமென்று பலர் ஆக்ஷேபிக்கலாம். இதின் உண்மையை யார் மறுக்கக் கூடும்? தனித்தனியே சமுசாரிகள் இவைகளை யெல்லாம் அனுசரிக்க முடியாமற் போனாலும், கிராமக் கூட்டுறவினால் இது முடியுமென்று வேண்டுகிறேன். சர்க்கார் தூண்டுதலும் ஆதாவும் இதற்கெல்லாம் அவசியம். இப்பொழுது சர்க்கார் செய்கிறபடி பற்பல விவசாய உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி கிராமங்களில் இங்கு சில நாளும், அங்கு சில நாளுமாகத் திரிந்து, வெறும் பிரசுரம் செய்வதினால் மாத்திரம் விவசாய விருத்திக்கு நிலையான அநுகூல முண்டாகுமென்று எனக்குத் தோன்றவில்லை. எவ்வளவோ பணத்தைச் செலவழித்து விவசாயக் கல்லூரி ஏற்படுத்தி, படிப்பித்துக் கொடுத்த தங்கள் மாணவர்களுக்குச் சம்பளங் கொடுத்து

உத்தியோகஸ்தர்களாக மாத்திரம் பல இடங்களில் அவர்களை நியமிப்பதினால், சர்க்கார் செலவழிக்கிற பணத்துக்குத் தகுந்த பலன் உண்டாகிறதோ என்பது சந்தேகம். முதலாவது கிராமத்திற்குத் தற்கால சாஸ்திர முறைமைப்படி சாகுபடி செய்வதினால் எவ்வளவு அதிகபலன் உண்டாகிறதென்பதை அவர்கள் கண்டறியும்படி, அவர்கள் முன்னிலையில், அவர்கள் நிலங்களிலேயே மாதிரியாகப் பயிர் செய்து திருஷ்டாந்தமாகக் காட்டவேண்டும். இரண்டாவது, இந்த உத்தியோகஸ்தர்கள் தாங்களே விவசாயத்தில் மிகுந்த அபிமானமுள்ளவர்களாய்க் குடியானவர்கள் தங்களுக்கு வேண்டிய நல்ல வித்து, உரம், இவைகளைச் சுதாரித்துக் கொள்ள சிரத்தையெடுத்து உதவி செய்யவேண்டும். இதனால் மெய்யாகக் குடியானவர்களுக்கு உதவி புரிகிறவர்கள், தாங்களே நல்லமாதிரி காட்டும் சமுசாரி களாயிருக்கவேண்டும். கடைசியாக, எல்லாவற்றிலும் முக்கிய மான ஒரு காரியமுண்டு. சாதாரண சமுசாரியின் தரித்திரம் தற்காலத்தில் இருக்கிறபடி இருந்து கொண்டே போகுமட்டும் மிகுந்த பணம் செலவழித்தாலொழிய முடியாத நூதன விவசாய முறைமைகளை அவன் எப்படித் தழுவி அனுசரிக்க முடியும்? இதனால் சர்க்கார் முன்னின்று, பண உதவி, விவசாய யந்திரம் முதலிய உதவி செய்வதும், கிராமக் கூட்டுறவும் இன்றியமையா அவசியம்.

விவசாய அபிவிருத்தியினால் மாத்திரம் நமது தேசமெல் லாம் முன்னேற்றமடைந்துவிடுமென்று நினைப்போர் ஒரு உண்மையைக் கவனித்தறிய வேண்டும். பூலோகத்திலெங் கும் சாதாரணமாக நடக்கிறபடி நமது தேசத்திலும் ஜனத்

தொகை அதிகரித்து வருகிறது. மேல் நாட்டார்போல் விஸ்தீரண பூமியுள்ள ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு அவர்கள் போல் நம் ஜனங்கள் குடியேறப்போகிறதற்கு ஐரோப்பியர் செய்கிற தடையைக் குறித்துப் பின்னே விவரித்துக் கூறியிருக்கிறேன். ஜனத் தொகை அதிகரித்தாலும் நமது வயல்களும், அவற்றில் விளைகிற பயிர்களும் பெருகப் போவதில்லை. சில இடங்களில் புதுக் கால்வாய்கள் வெட்டி விவசாய விருத்தி செய்திருந் தாலும் பல இடங்களில் ஏரிகள் வறண்டு மழையில்லாமல் ஜனங்களுக்குக் கஷ்டமதிகம். ஒரே குடும்பத்தின் பிள்ளை களுக்குள்ளே ஒரு தகப்பனின் நிலம் தலைமுறை தலைமுறை யாகப் பாகம் பிரிக்கப்படுவதனால், ஒவ்வொரு குடியான வனுக்கும் வருகிற பங்காகிய நிலம் குறுகிக்கொண்டே போகிறது. இதினாலே பிழைப்புக்குக் கஷ்டம் அதிகரித்துக் கொண்டே போகிறது. சாகுபடி செய்து விவசாயத்தையே சார்ந்து பிழைக்கிறவர்களின் தொகை வருஷந்தோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது.

இதுமட்டுமன்று இந்தியாவின் ஜனத்திரளில் $\frac{3}{4}$ பாகம் விவசாயத்திலேயே முனைந்திருக்கின்றது. பிறதேசங்களோ அப்படியல்ல. விவசாய வரும்படியைவிடக் கைத்தொழில் வரும்படியே அன்னாருக்கதிகம்.

முன்னேறுகிற தேசங்களெல்லாம் கைத்தொழிலையே பிரதானமாகக் கொள்கின்றன. இந்தியாவிலோ எவரும் விவசாயத்தை அடைக்கலமாகக் கொள்கின்றனர். மொத்த ஜனத் தொகையில் விவசாயத்தைச் சார்ந்து பிழைத்தவர்

| | | |
|---|---|---|
| 1891ல் | 100-க்கு 60 பேர் |
| 1911ல் | 100-க்கு 71 பேர் |
| 1931ல் | 100-க்கு 73 பேர் |

விவசாயத்தைச் சார்ந்துள்ளவர் இதர தேசங்களில்
(மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு விகிதம்)

| | | |
|---|---|---|
| இங்கிலாந்து | 1921ல் | 7% வீதம் |
| அமெரிக்கா | 1930ல் | 22% ,, |
| கனடா | 1931ல் | 31% ,, |
| ஜெர்மனி | 1925ல் | 30½% ,, |
| பிரான்சு | 1926ல் | 38% ,, |
| ஜப்பான் | 1930ல் | 50% ,, |
| இந்தியா | 1931ல் | 73% ,, |

இந்தியாவின் விவசாயம் அபிவிருத்தியடையவேயில்லை. கல்வியின்மையால் நவீன சாதனங்களைக் குறித்தறிவுமில்லை, அவற்றை உபயோகிப்பதுமில்லை.

ஜனத்தொகை பெருகப் பெருக விவசாய நிலம் பாகிக்கப் பட்டுக் கொண்டே வருகிறது. இப்படி ஆள் ஒருவருக்குரிய நிலபரப்பு சிறிதாவதால், அச்சிறிய நிலத்தில் யந்திர வேலை நடத்துவது நஷ்டமே. பிழைப்புக்கான வேறு வேலைகள் இல்லாததே இதற்கெல்லாம் ஒரு காரணம்.

நாட்டுப்புறத்தார் அதாவது விவசாயிகள் வருஷத்திற்கு 4 அல்லது 6 மாதம்தான் வேலையுடையவராயிருக்கின்றனர். சரியான நவீன் கருவிகளிருப்பின் 90 நாட்களிற்குளே இந்த நமது தேச விவசாய வேலையை எல்லாம் முடித்துவிடக்கூடும் என்று மதிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயத்துக்கு முட்டுக்கட்டையாயிருப்பது இன்னும் ஒன்று, விவசாயிகளின் கடன்; பயிரிடப்படும் நிலங்களுள் ஏக்கருக்கு 36 ரூ. கடன் இருக்கிறது.

நாணயமாற்று விவகாரங்களும் விவசாயிகளின் வருமானத்தைக் குறைக்கின்றன. இதன் விபரத்தைச் சிக்கன நிபுணர்கள் வாயிலாக அறிக.

விவசாய விருத்திக்குக் கவனிக்கவேண்டிய முக்ய விஷயங்கள்.

1. நல்ல விதை.
2. எரு. (இயற்கை அல்லது செயற்கை)
3. புழு பூச்சிகளினின்று பாதுகாப்பு.
4. நவீன ரசாயன கருவிகளின் உபயோகம்.
5. புஷ்டியான கால் நடைகள்.
6. மூலதனம். (கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்கள்.)
7. போக்குவரத்து சௌகரியங்கள்.
8. விற்பனையாவதற்குரிய வசதிகள்.

விவசாயி, தனக்கு வேண்டிய மூலதனத்தை நாட்டுச் செட்டிகளிடம் அல்லது மார்வாரிகளிடமே தற்சமயம் பெறுகிறான். கூட்டுறவுச் சங்கங்கள் இவ்விஷயத்தில் பிரமாதமாக ஒன்றும் சாதிப்பதில்லை. விவசாயிகள் நன்மையை பிரதானமாகக் கருதும் பண நிதிகள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இதற்கும் சர்க்காரே பொறுப்பெடுப்பதுமல்லாமல் விவசாயிகளை ஆழ்த்தும் கடன் ஒழிய சீக்கிரம் வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும்.



திருப்பத்தூர் ஆசிரமத்தில் விவசாயவேலை.
கரும்பு ஆலை ஓடுவது.



ஸ்வீடன் தேச பசுக்கள். எவ்வளவு பெரிய பாத்திரங்களில் இந்தப் பெண்கள் பால் கறக்கிறார்கள்! பசுக்கள் நன்றாகப் பலுகி ஒரே வருணமாய் இருப்பதைக் கவனியுங்கள் இது நானே பார்த்த காக்ஷி.

நிலத்தின் கூறுபாடுகள் விஷயமாக விவசாயிகளுக்குப் போதிய அறிவு ஊட்டப்படவேண்டும். நம் நாட்டிலேயே நவீன விவசாய கருவிகள் செய்யப்படவேண்டும். விவசாய விஷயங்கள், விவசாய முறைகள், விளைபொருட்களின் விலை ஏற்றத் தாழ்வு இவைகளைக்காட்டும் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படவேண்டும். விவசாயிக்குக் கல்வி யறிவு வேண்டுமன்றோ! ஒலிபரப்பும் கருவிகள், பொருட் காட்சிசாலைகள் இருப்பதும் அதிக பயனளிக்கும்.

மழை அதிகமாயில்லாத நம் நாட்டில், நாம் விவசாயத் தையே சார்ந்திருப்போமாயின் எவ்வளவு ஆபத்துக்கிடமாகும். திடீரென மாரி நின்று, கருப்பு உண்டாயின் உணவின்றி எத்தனை உயிர்கள் நசிக்கும். 1901-ல் எத்தனை கோடிபேர் மாண்டனர்! வேறு கைத்தொழில்களும் ஏற்படவேண்டும் என்பதை இவ்வுண்மை மறுபடியும் வலியுறுத்துகிறது.

சர்க்கார் ஒவ்வொரு மாகாணத்திலும் நிலக் கூறுகளைச் சோதித்து, இவ்வளவுதான் விவசாயம் நடைபெறலாம் எனத் தீர்மானித்து, கைத்தொழில்களை நிருமாணிக்கவேண்டும்.

கையாடக்கூடிய சில தொழில்களாவன :—

(1) கருமான் வேலை (2) கால்நடை உற்பத்தி, பால், வெண்ணெய் உற்பத்தி (3) பழங்களைப் பாதுகாத்தல் (4) சர்க்கரை செய்தல் (5) மீன் பிடித்தல் (6) தச்சுவேலைகள் (7) நூல் நூற்றல்—நெசவு (8) பட்டு உற்பத்தி (9) செங்கல், ஓடுகள்வேலை (10) தீப்பெட்டிகள் செய்தல் (11) தோல்வேலை (12) கயிறுகள், தையல் விசித்திரம் (13) காப்பு வளையல்

செய்தல் (14) தின்பண்டங்கள், விளையாட்டுக் கருவிகள் செய்தல் (15) காகிதம் செய்தல்.

தேயிலை, அசாம், சென்னை, பீகார், ஒரிசா மாகாணங்களில் பயிரிடப்படுகிறது. பயிரிடப்பட்ட நிலம் (1930-31-ல்) 774,683 ஏக்கரா. இதில் 100-க்கு 80 பாகம் இங்கிலாந்துக்கு (3910 லட்சம் பவுண்டு) ஏற்றுமதியாகிறது. அதன் மதிப்பு 19 கோடி ரூபாய். காப்பியும் ரப்பரும் தென் இந்தியாவில் தான் பயிரிடப்படுகின்றன. 1929-30-ல் காப்பி 163000 ஏக்கரா பயிரானது. விளைந்தது 360 லட்சம் பவுண்டு. ஏற்றுமதியான காப்பியின் மதிப்பு 2 கோடி ரூபாய். அநேகமாக தேயிலை காப்பி தோட்டங்கள் ஆங்கிலேயர் வசமே இருக்கின்றன.

காடுகள் பிரிட்டிஷ் இந்தியா பர்மா இவ்விரண்டிலும் 249710 சதுரமைல்கள். பர்மாமட்டும் 147033 சதுரமைல்கள். அதிகமாய் வியாபாரமே இதன் மூலமாய் நடக்கிறது. மூங்கில்கள் இங்கு அதிகம். நமது தேச மூங்கில் சோற்றினால் உலகத்தின் பெரும் பாகத்துக்குரிய காகிதம் செய்யக்கூடும் என்று கணிக்கப்படுகிறது.

தேக்குமர ஏற்றுமதி பூர்வீக காலமுதல் உண்டு. மீன் பிடித்தல் அதிக லாபத்தைத் தரும். கடற்கரைப் பிரதேசங்களிலுள்ளோர் இதனால் நன்மை பெறலாம்.

## விவசாய வேலைத்திட்டம்.

(1) ஒரு விவசாய ஆராய்ச்சியாளர் போர்டு வேண்டும். (2) விவசாயக் கல்லூரிகள். (3) பரிசோதனைக் கழனிகள்.

விவசாய மத்திய போர்டு ஒன்றும், விவசாய மாகாண போர்டுகள் பலவும், நிறுமாணிக்கப்படவேண்டும். இவற்றிற்கு மாகாணம் முதல் கிராமம் வரையில் பிரதிநிதிகள் அனுப்பப் படவேண்டும். நகர சபைகளிலும் மாகாண சபைகளிலும் இவர்கள் அங்கத்தினர்களாகவேண்டும். எல்லாச் சங்கங்களும் ஒத்துழைக்கவேண்டும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் ஒழுங்கு கள் நமக்கு ஒரு முன் மாதிரியாகும்.

விவசாய போர்டு இருவிதமான வேலைகளைச் செய் கிறது. விவசாயப் பயிற்சி, விவசாய ஆராய்ச்சி இவ் விரண்டுமே.

4 அல்லது 5 கிராமங்களுக்கு ஒரு விவசாயப் போதனு சாலை இருந்தால் நல்லது. அவை போதனுசாலைகளாகவும் வியாபார சாலைகளாகவும் இருக்கவேண்டும். கல்வி மிக்க அவசியம். கற்கும்போதே மாணவர்கள் சம்பாதிக்கவும் பயில வேண்டும்.

இந்திய விவசாயியின் மேல் அனுதாபம் காட்டுவோரும், அனுதாபம் கொள்ளும் சங்கங்களும் நம் நாட்டில் கிடையா. கிராமங்களில் கல்வியும், வேலை ஒழுங்குகளும் சர்க்காரால் அவ்வளவுக்கு நடத்தப்படவில்லை.

இவையிருந்தால் இந்திய விவசாயி ஏன் முன்னேற முடியாது.

1891-ம் வருஷத்தில் விவசாயத்தினுல் ஜீவனம் செய்கிற வர்கள் 100-க்கு 61-பேர். 1931-ம் வருஷத்தில், அதாவது

30 வருஷத்துக்குப்பின் விவசாயத்தினுல் மாத்திரமே ஜீவனம் செய்தவர்கள் 100-க்கு 73. இதனுல் விவசாய அபிவிருத்தியினுல் மாத்திரமே நமது நாடு வாழ்ந்துவிடுமென்று கூறுவது சரியல்ல. எத்தனையோ பாகங்களில் மழையும் நீர்வளமும் மிகக் குறைவானதினுல், குடியானவர்கள் மிகுந்த கஷ்டத்தோடும் இராப் பகல் விழிப்போடும் பாடுபட்டு, நன்ருய் சுரக்கும் ஊற்றுகளில்லாத ஆழ்ந்த கிணறுகளிலிருந்து வெகு பிரயாசத்தோடு தண்ணீர் இறைத்து, நெற்றியின் வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு வருந்துகிருர்கள்.

---

## கைத்தொழில்கள்.

இந்தியாவின் மொத்த கைத்தொழில் சாலைகள் 9422. பிரிட்டனில் (1928-ல்) 107500 சாலைகள் (ஆனுல் பிரிட்டனின் ஜனத்தொகை இந்தியாவின் ஜனத்தொகையில் 100-க்கு 13 தான்.)

அமெரிக்க ஐக்கியநாடுகளில் 174136 சாலைகள் (இதன் ஜனத்தொகை இந்தியாவின் ஜனத்தொகையில் 100-க்கு 35.)

| | | | |
|---|---|---|---|
| கனடாவில் | (1929-ல்) | 24,020 சாலைகள் | 3% ஜனங்கள். |
| ஜப்பானில் | | 13,711 சாலைகள் | 19% ஜனங்கள். |

| | | |
|---|---|---|
| செலவழிக்கப்பட்டதொகை | (மூலதனம்) | |
| இந்தியாவில் | 700 கோடி ரூபாய் | |
| ஆனுல் இதில் இந்தியர்களின் மூலதனம் | 300 கோடிதான். | |
| பிரிட்டனில் | 7067 கோடி ரூபாய் | |
| ஐக்யநாடுகளில் | 23000 | ,, |
| கனடாவில் | 1445 | ,, |
| ஜப்பானில் | 1009 | ,, |

மொத்தத் தொழிலாளிகளில் கைத்தொழிலில் ஈடுபட்டவர்களின் நூற்றுக்கு விகிதம்

| | | |
|---|---|---|
| இந்தியா | 100-க்கு | 10 |
| பிரிட்டன் | ,, | 47 |
| அமெரிக்க ஐக்கியநாடுகள் | ,, | 32 |
| கனடா | ,, | 25 |
| ஜெர்மனி | ,, | 41 |
| பிரான்ஸ் | ,, | 33 |
| ஜப்பான் | ,, | 19 |

விவசாயத்திலும் கைத்தொழிலிலுமிருந்து ஒவ்வொருவருக்கு வருமானம்.

| தேசங்கள். | விவசாயம். | கைத்தொழில். |
|---|---|---|
| இந்தியா | 50 ரூ. | 12 ரூ. |
| ஜப்பான் | 57 ரூ. | 158 ரூ. |
| ஸ்வீடன் | 129 ரூ. | 384 ரூ. |
| பிரிட்டன் | 62 ரூ. | 412 ரூ. |
| கனடா | 213 ரூ. | 470 ரூ. |
| அமெரிக்க ஐக்கியநாடுகள் | 175 ரூ. | 721 ரூ. |

இந்தியாவின் ஜனத்தொகையில் கைத்தொழிலாளர் 100-க்கு வீதம் பின்வருமாறு :—

| வருஷம் 1911 | 1921 | 1931 |
|---|---|---|
| $5\frac{1}{2}\%$ | 5% | $4\frac{1}{2}\%$ |

விவசாயத்தையே சார்ந்து பிழைக்கிற ஜனங்களின் சதவீதம் வரவர அதிகரித்துக்கொண்டுபோக கைத்தொழிலாளிகளோ வரவரக் குறைந்துகொண்டே போகிறார்கள்.

## இந்தியாவில் இறக்குமதியான வெளிச் சரக்குகள் விவரம்.

## 1931—'32ல்

| | | |
|---|---|---|
| பஞ்சும் பஞ்சுப் பொருட்களும் | 26·19 | கோடி ரூபாய். |
| இருப்புப்பாதை சாமான்கள் | 14·89 | ,, |
| யந்திரங்கள் | 12·06 | ,, |
| உலோகங்கள் | 9·78 | ,, |
| எண்ணெய் | 9·72 | ,, |
| வாகனங்கள் | 4·48 | ,, |
| சர்க்கரை | 6·18 | ,, |
| கருவிகள் | 3·69 | ,, |
| பட்டு | 2·73 | ,, |
| சாயங்கள் | 2·68 | ,, |
| ரசாயன வஸ்துக்கள் | 2·57 | ,, |
| கடிதம், அட்டை | 2·50 | ,, |
| சாராயம் | 2·27 | ,, |
| ரப்பர் | 2·22 | ,, |
| வாசனைச்சரக்குகள் | 2·08 | ,, |
| மருந்துவகைகள் | 1·91 | ,, |
| கம்பளி | 1·62 | ,, |
| காய், கனிகள் | 1·34 | ,, |
| கண்ணாடிச்சாமான்கள் | 1·22 | ,, |
| தானியங்கள் | 1·18 | ,, |

இறக்குமதியான சாமான்களின் மொத்த மதிப்பு $142\frac{3}{4}$ கோடி ரூபாய். இதில் நூற்றுக்கு 80 பங்கு இந்தியாவிலேயே செய்யக்கூடியவை.

## ஏற்றுமதியான சாமான்கள் மதிப்பு விபரம்.

| | | |
|---|---|---|
| சணல் | 33 | கோடி ரூபாய். |
| பருத்தி | 28·50 | ,, |
| தேயிலை | 19·50 | ,, |
| பதனிட்டதும், பதனிடாததுமான தோல் | 11·75 | ,, |
| கம்பளி | 3·25 | ,, |
| அரக்கு (Lac) | 1·88 | ,, |
| தானியம் | 20·25 | ,, |
| வித்துக்கள் | 14·50 | ,, |
| உலோகங்கள் | 5·50 | ,, |
| மெழுகு | 2·25 | ,, |
| மொத்த ஏற்றுமதி மதிப்பு | 155·88 | ,, |

சணலைத்தவிர மற்றப் பொருட்களெல்லாம் இவ்வளவு ஏற்றுமதியாவது சரியல்ல, நமக்கு நஷ்டமே. ஏனெனில் நமக்கு வேண்டியதுபோக மீதம் மாத்திரம் ஏற்றுமதியானல் பரவாயில்லை. நமக்குத் தேவையானதையே கொடுத்துவிட்டால் நாம் பிறகு திண்டாடவேண்டியதுதான். நமக்கு வேண்டிய பருத்தி நம் நாட்டிலேயே விளைகிறது. அதைப் பிறதேசங்களுக்கு அனுப்பிவிட்டு பிறதேசங்களிலிருந்து துணி வாங்குவது எவ்வளவு மதியீனம்!

கைத்தொழில் அபிவிருத்தி பொதுஜனத்தைச் சார்ந்தது. இதன் விஷயமாக இருவகையான சங்கங்கள் வேண்டும். ஒன்று சர்க்காரின் பிரதிநிதியாகவும் மற்றென்று ஜனசமுதாயப் பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும்.

கைத்தொழில் நிர்வாக சங்கத்தின் வேலைகளாவன :—

1. புது கைத்தொழில்சாலைகளைத் தொடங்க திராணியுள்ளவர்களைப் பலவகையில் உற்சாகப்படுத்தல்.

2. அவசியமானபோது சர்க்காருக்கு மனு அனுப்புவதும், பொது ஜனங்களுக்குள் பிரசாரம் செய்வதும்.

3. சாலைகளில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்ய வசதி தேடல்.

4. உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை, மதிப்பு லாபம் முதலிய அடங்கிய ஜாபிதா தயாரித்தல்.

5. உலகத்தின் கைத்தொழில் போக்கைக் கவனித்தல். அதனால் பாதிக்கப்படக்கூடிய விஷயங்களை வரையறுத்தல்.

6. தொழிற்சாலைகளுக்கு வேண்டிய பணநிதி நிருமாணம்.

7. உபந்நியாசங்கள், பிரசாரம், மகாநாடுகள், பொருட்காட்சி சாலைகள் முதலியவைகளை ஏற்பாடுசெய்தல்.

பணநிதி ஏற்பாடுகள்.

இந்தியாவில் தொழிற்சாலை முதலாளிகளுக்கு அதிக பணநிதிகள் (பாங்கிகள்) கிடையாது. பணநிதிக் கிளைகள் இந்தியாவில் 659-தான் இருக்கின்றன. பிரிட்டனிலோ 13000 இருக்கின்றன.

440000 பேருக்கு ஒரு நிதி (இந்தியாவில்.)
3500 பேருக்கு ஒரு நிதி (பிரிட்டனில்.)

கஜானுக்காருக்கும் தொழிலாளிகளுக்கும் ஒத்துழைப்பு இல்லை. ஜப்பானும் ஜெர்மனியும், கஜானுக்களைத் தொழிலாளிகள் அதிகமாய்ப் பயன்படுத்தக்கூடிய வசதிகளைச் செய்ததினுல்தான் கைத்தொழிலில் அபரிமிதமான முன்னேற்ற மடைந்துவிட்டன. கஜானுக்கள் நம் நாட்டின் தொழிற்சாலைகளுக்கு முதுகெலும்பாக உதவினுலொழிய, முன்னேற்றத்தைக் காண்பது கஷ்டம்.

இன்னும் வேண்டியவை பொருட்காட்சிகள். ஒவ்வொரு நகரிலும், ஜில்லாவிலும், இவ்விதப் பொருட்காட்சி சாலைகளும், வருடாந்தர விழாக்களும் நடைபெறவேண்டும். இவைகளுக்கு நகரசபைகளும் ஜில்லா சங்கங்களும், பண உதவி புரியவேண்டும்.

கைத்தொழில் முன்னேற்றத்தால் தொழிலாளிகளின் வருமானம் அதிகமாகும். வருமானத்தால் வயிறுபிழைக்க முடிந்தால்தான் உயர்ந்த கலை அறிவு பாவ வழி வகைகளும் ஏற்படும்.

மனிதனுக்கு சரீரப்பிரகாரமான தேவைகள் போதுமானபடி இல்லாத நமது தேசத்தில், சர்வகலாசாலையின் உயர் பட்டங்களும், மேல்நாட்டு நவீன நாகரீக விளையாட்டு விநோதங்களும், மிகவும் கண்டிக்கதக்கவைகளான வீண் டம்பங்களே.

கலாசாலைகளில் வெறும் கல்விமட்டுமல்ல, தொழில் கல்வி, ஒரு முக்கிய அம்சமாக இருக்கவேண்டும்.

கைத்தொழில் உன்னதமாக நடைபெறவேண்டுமெனில் ஏழு விஷயங்கள் முக்கியம்.

1. பணம் :–இதன் விஷயமாக 'நிதிகள்' (கஜானுக்கள்) வேண்டுமென்று முன்னமே சொன்னேம்.

2. விற்பனைவசதி :— இது அதிக முக்கியமான அம்சம். ஆனுல் சுமார் 20 வருஷங்களுக்கு, உற்பத்தியாகும் பொருட்களெல்லாம் நம் தேசத்திலேயே விலையாகிவிடும்.

3. மேற்பார்வை :— தகுந்த நிபுணர்கள் (பல துறைகளில் தேர்ந்த) அவசியம். மேனுடுகளில் பட்டதாரிகளான பலர் நம்முள் உளர்.

4. யந்திரங்கள் :— மிகவும் அவசியமான யந்திரங்களை இதர நாடுகளிலிருந்து தருவித்துக்கொள்ளவேண்டும். ஆனுலும் அவைகளை நாமே செய்துக்கொள்ளும் நாள் கிட்ட பிரயாசப் படவேண்டும்.

5. ஓட்டும் சக்தி (பொறியியக்கும் பொருட்கள்) :— நிலக்கரி, எண்ணெய், மின்சாரம் இவற்றையும் சுதாரித்துக் கொள்ளவேண்டும்.

6. மூலப்பொருட்கள் :— இவற்றிற்குப்பஞ்சமேயில்லை. ஏராளமான பஞ்சு, கடலைக்காய், தோல், முத்துக்கொட்டை (ஆமணக்கு) முதலிய மூலப் பொருட்கள் அந்நிய நாடுகளுக்கு நமது நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது. இவைகளை நாமே, வஸ்திரம், சவுக்காரம், பிஸ்கோத்து, நிலஎருவு, தோல் சாமான்கள், மோட்டார் எண்ணெ, முதலிய கடைப் பொருட்களாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

7. ஆட்கள் :— கலாசாலைமாணவர்கள் திரளாக உளர். அவர்களுக்கு கைத்தொழில் காரியாலயங்களில் ஏற்ற வேலைகளைக் கொடுக்கலாம்.

### போக்குவரத்துச் சாதனங்கள்.

வியாபாரம், சுகாதாரம் ஜனங்களுக்கு அவசியமான தற்கால சௌகர்யங்கள் இவற்றில் பாமர மக்கள் முன்னேற்றமடைய சரியாகப் போடப்பட்ட ரஸ்தாக்கள் வெகு அவசியம்.

இதர தேசங்களோடு ஒப்பிட்டால் நமது தேசம் மிகப் பெரியது. ஆனாலும் ஆயிரக்கணக்கான கிராமங்களுக்குப் போக்குவரத்துக்குச் சௌகரியமான ரஸ்தாக்களில்லை. மிகக் கேவலமான பாதைகளால் மனிதருக்கும் வண்டி மாடுகளின் உயிருக்கும் ஆபத்தோடு, பலவித கஷ்ட நஷ்டங்களுண்டு.

முதல்தரமான கப்பிபோட்ட ரஸ்தாக்கள் 74000 மைல்கள் நீளம்தான் உள்ளன. இமாலயம், பர்மா, பாலைவனம் நீங்கலாக மற்ற இடங்களுக்கு பிரிட்டனில் இருக்கிறதுபோல் நம்தேசத்திலும் போட்டால் ரஸ்தாக்கள் சுமார் 30 லட்சம் மைல் நீளம் வேண்டும். இரண்டாந்தரமான ரஸ்தாக்கள் 160000 மைல்கள் உள்ளன. (அவைகளை ரஸ்தாக்கள் என்று கூறுவது மேல் பூச்சுதான்) ரஸ்தாக்கள் விஷயமாக இந்தியாவில் செலவிடப்பட்ட தொகை 1926-27ல் 26 கோடி ரூபாய்கள்தான். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1100 கோடி ரூபாய்.

உலகத்தின் மொத்த மோட்டார்கள் 390 லட்சம்.

| | | |
|---|---|---|
| அதில் இந்தியாவில் உபயோகப்படும் மோட்டார்கள் | | 2 லட்சம் |
| அமெரிக்க ஐக்கிய நாடுகளில் | ,, | 268 லட்சம் |
| பிரிட்டனில் | ,, | 23 லட்சம் |

இந்தியாவில் உபயோகப்படும் 2 லட்சம் மோட்டார்களும் அந்நியநாட்டிலிருந்தே வருகின்றன. இவற்றை இந்தியாவி லேயே செய்ய பெரியார் சிலர் பிரயாசை எடுத்துவருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 5 பேரில் ஒருவருக்கு 1 மோட்டார். | | |
| பிரிட்டனில் | 20 பேரில் | ,, |
| இந்தியாவில் | 1300 பேரில் | ,, |

1930-ல் இந்தியாவில் இறக்குமதியான மோட்டார்கள் 32,700. மதிப்பு 7½ கோடி ரூபாய். மோட்டார் ரஸ்தாக் கள் இந்தியாவில் இருப்புப்பாதைகளோடு சேர்ந்து செல்லுகின்றன. இப்படிப்பட்ட பாட்டைகளுக்காகச் செல விடும் தொகையை, கிராமங்களிலிருந்து இருப்புப்பாதை களுக்குப் போக உதவும் ரஸ்தாக்கள் போட உபயோகித்தால் மிகவும் நலமாயிருக்கும். இப்படி ரஸ்தாக்கள் போட்டால் கிராம விவசாயப் பொருட்கள் முதலியன இருப்புப் பாதைகள் மூல மாய் தூர இடங்களுக்கு அனுப்பப்படவும், வியாபாரம், பொது அறிவு, போக்குவரத்து சௌகர்யங்கள் முதலியன விர்த்தி யடையவும் உதவியாயிருக்கும். இருப்புப்பாதைகளை ஒட்டி ரஸ்தாக்கள் போட்டது பொதுஜன நன்மையைக்கருதியல்ல, சைனிய சவுகரியத்திற்காகவே என்க.

இருப்புப்பாதைகளின் முன்னேற்றமும் அவ்வளவு உசிதமாக இல்லை. நம் நாட்டில் தற்சமயம் நால்வகையான அகலங்களுள்ள இருப்புப்பாதைகள் இருக்கின்றன. இது சாமான்கள் போக்குவரத்துக்கு எவ்வளவு அசௌகரியம்! இந்தியா பிரிட்டனைவிட 20 மடங்கு அதிக பரப்பளவுள்ளதா யினும் இந்தியாவின் இருப்புப்பாதை நீளம் பிரிட்டனைவிட

இருமடங்காகவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு ஒப்பிடில் ஆறில் ஒரு பங்குதானிருக்கிறது.

நமது தேசத்தில் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலிய பஞ்ச உலோகமும், நிலக்கரி, எண்ணெய் முதலிய வஸ்துக்களுமுள்ள பற்பல கேணிகளுண்டு. இவற்றைக் கண்டுபிடிக்க ஏன் அக்கரை எடுக்கவில்லை? ஏன் நமது வாலிபரை இவ்வித காரியங்களில் நிபுணர்களாகும்படி, அயல் நாடுகளுக்கனுப்பிப் பயிற்றுவித்து, நமது தேசத்தில் இந்தியர்களான வியாபார சங்கத்தார் கூட்டுறவாக இப்பேர்ப்பட்ட காரியங்களைக் கையாட சர்க்கார் ஏவித் தூண்டி உதவி செய்யக்கூடாது? இப்படிச் செய்தால் இப்பொழுது தரித்திரத்தில் வருந்தும் நமது நாட்டுப் பெருந்திரள்களுக்குப் பிழைக்க வழியுண்டாகும். நமக்கு அவசியமான வஸ்துக்களையும் நமது தேசத்திலேயே செய்து கொள்ளுவோம்.

## குடியேற்று.

இக்காலங்களில் மேல்நாட்டு ஜனங்கள் தங்கள் சுய தேசங்களில் பிழைப்புக்கு வழி இல்லாவிட்டால், அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, முதலிய அந்நிய தேசங்களுக்குப் போய்க் குடியேறி, பலுகிப்பெருகி வாழ்கிறார்கள். பூர்வகாலங்களில் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்ற முதுமொழிப்படி நமது நாட்டினரும் அயல்நாடுகள் சென்று வியாபாரஞ் செய்தும், குடியேறியும், வாழ்ந்து வந்தார்கள். ஆப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பூர்வீகத்தில் நெருங்கிய சம்பந்தம் இருந்ததாகச் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். ஆப்பிரிக்காவில் அழிந்துபோன சில பூர்வீக நகரங்

களைத் தோண்டிப்பார்க்கையில் இந்திய சிற்பசாஸ்திர விதிக ளுக்கு அமைந்த கட்டடங்களைத் தற்காலத்தில் கண்டு பிடிக் கிறார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள சோமாலி நாட்டுக்கு லவங் கம் இந்தியர் கப்பல்களில் கொண்டு போனார்கள். எகிப்து தேசத்திற்கு நீலம் முதலிய வர்ண வஸ்துக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆப்பிரிக்காவுக்குத் தாங்கள் கொண்டு போன பொருள்களுக்குப் பதிலாக இந்தியர்கள் தங்கம், வெள்ளைப்போளம், தூபவர்க்கம் முதலிய வஸ்துக்களை நமது நாட்டுக்கு இறக்குமதியாகக் கொண்டு வந்தார்கள். அரேபி யாவில் ஏடன் என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிற இடம் ஆப்பிரிக்காவோடு நடந்த வியாபார சம்பந்தத்திற்கு மத்திய துறைமுகமாயிருந்தது. இயேசுகிறிஸ்து நாதரின் சுய நாடா கிய பலஸ்தீன தேசத்தோடும், அவர் பிறப்பதற்குப் பல நூற் றாண்டுகளுக்கு முன்னமே இந்தியாவுக்கு வியாபார சம்பந்த மிருந்தது. யூதராஜ்யம் விஸ்தீரணமும் மகிமையும் பொருந்தி, சாலமோன் அரசன் வடக்கே தாண் முதல் தெற்கே பர் ஸீபா மட்டும் செங்கோல் செலுத்திய காலத்தில் தீரு சீதோன் என்ற பேனீக்கியா நாட்டின் துறைமுகங்களுக் குத் தென் இந்தியாவிலிருந்து பல வஸ்துக்கள் ஏற்றுமதியாக சென்றன. எபிரேயு பாஷையில் தந்தம், கடுகு, வெள்ளைப் போளம், மயில், குரங்கு முதலியனவற்றுக்கு நம் பாஷைப் பதங்களே வழங்குவதாக எபிரேயு பாஷையில் தேர்ந்த பண் டிதர்கள் கூறுகிறார்கள். சந்தனமரமும், தங்கமும் நம் நாட்டி லிருந்துபோனதாகச் சாஸ்திரிகள் கூறுகிறார்கள். பழையஏற் பாட்டில் 1 ராசாக்கள், 10ம் அதிகாரத்தை வாசித்தறியவும். கிறிஸ்து பிறந்தகாலத்தில், மேல்நாட்டில் மிக்கவல்லமையோடு

மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகள்மேலெல்லாம் ஆதீனம்செலுத்திப் பெயர்பெற்ற அரசு ரோம ராச்சியமே. ரோமாபுரியோடும் தென்னிந்தியாவுக்குச் சம்பந்தமிருந்தது. மெல்லிய மஸ்லின் வஸ்திரம், முத்துக்கள், ஆபரணங்கள், எருமை, யானைகள், கிளிகள், மயில்கள் முதலியன ரோமாபுரிக்கு ஏற்றுமதியாகச் சென்றதாகச் சரித்திரத்தில் பார்க்கிறோம். விசேஷமாகப் பாண்டிய நாட்டிலிருந்து முத்துக்கள் ஏற்றுமதியாயின. இவற்றினால் ரோம நாணயங்கள் ஏராளமாய் இந்தியாவுக்கு வந்தன. இதைக்குறித்து ரோம ராயனாகிய ·தி பேரியு சக்கிரவர்த்தி, "சீர்திருத்தத்தை எங்கே தொடங்கலாம்? நமது பெண்களின் டம்பத்தைக் குறித்து ஏது சொல்வேன்? முக்கியமாக, பொன் ஆபரணங்கள், நகைகளுக்காக நம்முடைய ரோமர் பணம் அந்நியநாட்டுக்கு ஏராளமாய்ச் செல்வதினால் நாம் நஷ்டமடைகிறோம்" என்று தனது சொந்தச் சட்டசபைக்கு எழுதி முறையிடுகிறான். பிளினி என்ற ரோம தேசாதிபதி, வியாபாரத்தின் மூலமாய் ரோமரிடத்திலிருந்து இந்தியாவுக்கு ஒன்றறைக்கோடி ரூபாய் போய்விடுவதாகச் சொல்லுகிறார். மெல்லிய பட்டும், பஞ்சு வஸ்திரங்களும் மேல் நாட்டிற்கு ஏற்றுமதியாயின. காலம் எவ்வளவாய் மாறிப்போயிற்று! இப்போ பஞ்சு நம் நாட்டில் உண்டானாலும், மேல் நாட்டிற் கனுப்பி அவர்கள் வஸ்திரமாக்கி நமக்குத் திரும்ப அனுப்ப, பெற்றுக் கொள்ளுகிறோம். நமக்கு எவ்வளவு நஷ்டம்; தென் இந்தியாவில், பூர்வீகத்தில், பாண்டிய நாட்டின் பிரதான நகரங்களாகிய கொற்கை, மதுரை என்னும் இடங்களிலும், பின்னும் தமிழ் நாட்டில் மற்ற இடங்களிலும், ரோம நாணயங்கள் கண்டு

பிடிக்கப்பட்டிருக்கின்றன. பாண்டிய அரசன் ஒருவன், ரோம சக்கிரவர்த்தியாகிய அகஸ்துராயனுக்குத் தமது ஸ்தானாதிபதிகளை அனுப்பினதாகச் சரித்திரம் கூறுகிறது. தென் இந்தியாவில், தமிழ் நாட்டில், ரோம வியாபாரிகளும் கிரேக்க வியாபாரிகளும் உத்தேசம் கி. பி. 60-ம் ஆண்டில், வியாபாரம் செய்து வந்தார்கள். கிரேக்கருக்கு யவனர் என்று பெயர். தென் இந்தியாவைக் குறித்து எழுதப்பட்ட பெரிப்ளஸ் என்ற புத்தகமுண்டு. இதன் நூலாசிரியர் தமிழகத்தை "தமரிக்க" என்றழைக்கிறார். கன்னியாகுமரிக்கு யாத்திரை செய்து தீர்த்தம் ஆட வந்த சாது சந்நியாசிகளைக் குறித்தும், பாண்டிய நாட்டில் கொற்கை நகரத்திற்குச் சமீபமாய்க் கடலில் முத்துக்கள் பொறுக்குவதைக் குறித்தும், சோழ நாட்டைக்குறித்தும், தமிழ் நாட்டிலிருந்து கங்கை முகத் துவாரத்திற்கும், பர்மாவுக்கும் சென்ற பெருங் கப்பல்களைக் குறித்தும் வர்ணிக்கிறார். யவனர்கள் (கிரேக்கர்) திராக்ஷாரசத்தை நம் நாட்டிற்கு இறக்குமதி செய்ததாகத் தோன்றுகிறது.

"யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன் செய் புனை கலத்தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப"

(புறநானூறு)

இவர்கள் தங்கள் நாட்டிற்கு ஏராளமான மிளகு, அரிசி, கருவாப் பட்டை, இஞ்சி, வயிரம் முதலியன. கொண்டுபோனார்கள். பூர்வீக கிரேக்கு நூலாசிரியர்கள் இந்திய தமிழ்பதங்களின் திரிபுகளான பதங்களையே தங்கள் கிரேக்க பாஷையாக மேற்கூறியவற்றிற்கு உபயோகிக்கிறார்கள்.



ஸ்வீடன் தேசத்தில் மாவரைக்கும் காற்றாடி யந்திரம்.
இந்த யந்திரத்தால் கிணற்றிலிருந்து தண்ணீரும்
இறைக்கலாம்.



அமெரிக்காவில் உழவு செய்யும் விதம். உழவிற்கு மோட்டார்களும் உபயோகப்படுத்துகிறார்கள். அமெரிக்கா வட பாகங்களில் ஒரு விவசாயிக்கு 1000 முதல் 2000 ஏக்கரா நிலங்களுண்டு.



அமெரிக்காவில் ஆரஞ்சுபழத் தோட்டங்கள். பழவர்க்கங்களை தகரடப்பாவில் அடைத்து பாதுகாத்து ஏற்றுமதி செய்கிறார்கள்.

தமிழரசர்கள் தங்கள் கோட்டை வாசலில் நிற்கும் பாது காவல் சேவகர்களாக யவனரை ஏற்படுத்தி யிருந்தார்கள்.

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர்"

(சிலப்பதிகாரம்)

வெள்ளை மனிதருடைய சேவகர்களாகத் தற்காலத்தில் அவர்கள் குற்றேவலுக்குக் காத்திருக்கும் தமிழ் மக்களின் அடிமைத்தனத்தை இதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

தமிழரசருக்கிருந்த பற்பல யுத்தாயுதங்களும், யந்திரங் களும், கோட்டைகளின் மதில்களில் இவைகள் எவ்வளவு நெருக்கமாய் அமைக்கப்பட்டிருந்தன என்பதும், பழங்காவிய மாகிய சிலப்பதிகாரத்தில் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

திங்களு•நுழையாவெந்திர படுபுழை.

வில்களும், வில்களிலிருந்து புறப்பட்டு எதிரிகள் உடம்பு களுக்குள் செல்லும் அம்புகளும், அவர்களைக் கடிக்கும் குரங்குகளுருவமான யந்திரங்களும், கற்களைச் சொரியும் கவண்களும், கொதிக்கும் எண்ணெயைப்பொழியும் யந்திரங் களும், எதிரிகள் மேற்செல்லும் கொதித்து இளகிய செம்பு, எக்கு அடங்கிய பாத்திரங்களும், பின்னும், எதிரிகளை ஊனப்படுத்தி தோற்கச்செய்யும் பற்பல யுத்தாயுதங்களும் இந்தச் சிலப்பதிகாரத்தில் வருணிக்கப்பட்டிருக்கின்றன.

வளைவிற் பொறியும்
கருவிர லூகமுங் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயுங் பாகடு குழிசியுங்
காய்பொன் னுலையுங் கல்லிடு கூடையுங்

துண்டிலுந் தொடக்கு மாண்டலை யடுப்புங்
கவையுங் கழுவும் புதையும் புழையு
மையவித் துலாமும் கைபெய ரூசியுஞ்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையு
மெழுவுஞ் சீப்பு முழுவிறற் கணையமுங்
கோலுங் குந்தமும் வேலும் பிறவும்.

(சிலப்பதிகாரம்)

கி. பி. 150-ம் ஆண்டில், டோலிமி எழுதிய பூமி சாஸ்திரத்தில், தமிழ் நாட்டை வர்ணிக்கிறார். சேர சோழ பாண்டிய ராஜ்ஜியங்களைக்குறித்துப் பேசுகிறார். ஆனால், இவருக்கு முன்காலத்தில் தமிழ் நாடு, அதாவது வடக்கே திருப்பதி முதல், தெற்கே கன்னியாகுமரி, மேற்கே அரபிக் கடலிலிருந்து கிழக்கே வங்காளக் குடாக்கடல் மட்டும், ஒரே அரசியல் ஆதீனத்திலிருந்ததாகவும், இதற்குப் பின்னரே ஓர் தமிழரசன் மக்கள் சேரன், சோழன், பாண்டியன் மூவருக்கும் பாகம் பிரிக்கப்பட்டதாகவும் சில சாஸ்திரிகள் கூறுகிறார்கள். தமிழ்ப்பாஷையே தென் இந்தியாவில் பூர்வீக பாஷை. பூர்வீகத்தில் தமிழ் வட்டெழுத்தில் எழுதப்பட்டது. அக்காலத்தில் மலையாளம் என்று ஒரு பாஷையில்லை. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பூர்வீக சாசனங்களெல்லாம் இந்த வட்டெழுத்திலேயே எழுதப்பட்டிருக்கின்றன. பிற்காலங்களில் வடமொழிக்கலப்பு அதிகரித்துவிட்டதினாலும், வெவ்வேறு அக்ஷரங்களில் எழுத ஆரம்பித்துவிட்டதினாலும், மலையாளம் தமிழிலிருந்து வேறாகிப் பிரிந்து போயிற்று. தற்காலத்தில், படித்த மலையாளிகள் வடமொழியை நிரம்ப உபயோகிக்கின்றார்கள்.

இது நிற்க, நமது பூர்வீகக் குடியேற்று விஷயத்தில், இன்னொரு பெரிய விசேஷமுண்டு. கிழக்கே சவகம் (ஜாவா) என்ற ஓர் பெரிய தீவோடு தென் இந்தியாவுக்குப் பூர்வீகத்தில் நெருங்கிய சம்பந்தமிருந்ததாகத் தெரிகிறது. அங்குள்ள ஜனங்கள் தற்காலத்தில் முகம்மதியராயிருந்தாலும், அவர்கள் பூர்வீகத்தில் தென்னிந்தியாவிலிருந்து சென்ற இந்துக்களின் சந்ததியார்தான் என்பதற்குப் பல அத்தாக்ஷிகளிருக்கின்றன. ஹிந்துப் பெயர்கள், தென்இந்திய சிற்பசாஸ்திரங்கள், கலை, காவியங்கள் முதலிய பல இதற்குச் சாட்சி பகருகின்றன.

இதுமட்டும் பூர்வீக காரியங்களை மாத்திரம் விவரித்தேன். ஆனால், கிறிஸ்து பிறந்த சில நூற்றுண்டுகளுக்குப் பின் தமிழகத்தின் செல்வாக்கைக் குறித்துச் சற்றுப் பேச விரும்புகிறேன். பல்லவ மன்னர்கள் சிறப்புடன் ஆண்ட காலத்தில், சோழ நாட்டின் பிரதான நகரமாயிருந்த காஞ்சிபுரத்திற்குச் சீனாவிலிருந்து வந்த அயூன்தசங் என்னும் பௌத்தமப் பிரயாணி தென் இந்தியாவைப் பற்றி எழுதி வைத்திருக்கிறார். இதற்குப்பின், தஞ்சாவூரில் 1000 வருஷத்துக்குமுன் அரசாண்ட ராஜ ராஜச்சோழ தேவனுக்கு அநேக கப்பல்களும், கப்பற் படைகளும் இருந்தன. இக் கப்பல் திரள்களைப் பார்த்தால் கடலிலோர் பெரிய வனம் தோன்றியதுபோலிருந்ததென்று பதின்மூன்றுவது நூற்றுண்டில் தென் இந்தியாவிற்கு வந்த மார்க்கப்போலோ என்ற ஓர் சரித்திர சாஸ்திரி கூறுகிறார். ராஜாராஜன் தன் கப்பல்களோடும் படைகளோடும் பூர்வீககாலத்தில் கடாரம் என்று சொல்லப்

பட்ட பர்மா சென்று பீகூ, ப்ரோம், என்ற நாடுகளை ஜெயித்து, அவைகளைச் சோழ ராஜ்ஜியத்தோடு சேர்த்துக் கொண்டான். தன் ஜெயத்திற்கு ஞாபகார்த்தமாக அவன் ஸ்தாபித்த ஸ்தம்பங்கள் இப்பொழுதும் அவ்விடங்களில் பார்க்கலாம். சமுத்திரத்தைத்தாண்டி, அதின்கொந்தளிக்கும் அலைகளை மரக்கலங்களினால் மேற்கொள்ளும் வீரியம், இப்போது பல நூற்றாண்டுகளாக அந்நிய அரசாங்கத் துக்கு ஆளாகி, நிலைகுலைந்து, வீரியம் குறைந்து, சீரழிந்தும் தமிழ் மக்களை விட்டு இந்நாட்களிலுங் கூட முற்றிலும் பறந்து விடவில்லை. கடந்த ஆண்டில், தூத்துக்குடியிலிருந்து ஒரு சிறிய கட்டு மரத்தில் கடலில் மிதந்து சென்று, வீரிய மாய்க் கொழும்பு சேர்ந்த சில மீன்பரதர்களைப் பற்றிப் பத்திரிகையில் வாசித்தேன். கடந்த நூற்றாண்டில் திருநெல் வேலி ஜில்லாவிலிருந்த பாஞ்சாலக்குரிச்சி சிற்றரசின் வீரிய சரித்திரத்தையும் மறந்துவிடக்கூடாது. காரியமிப்படியிருக்க பூர்வீகத்தில் தமிழ் மக்கள் தூரதேசங்களோடு கப்பல் வியா பாரஞ் செய்ததும், அதன் பின்னர் சோழ மன்னர்கள் படைக்கப்பல்களில் அந்நிய நாடுகளை ஜெயிக்கச் சென்று யுத்தம் செய்ததும் தெளிவாயிருக்க, சரித்திர சம்ப வங்களை யறியாத ஓர் ஆங்கிலேய தனவான் ஆங்கிலே யர் நம் தேசத்துக்கு வந்தபின்தான் இந்தியராகிய நாம் கப்பல் விஷயங்களைக் கற்றுக்கொண்டோமென்று தமது அறி வீனத்தினால் கௌரவமாகக் கூறுகிறார். ஐயோ! தற்காலத் தில் ஆங்கில உயர் கல்வி பெற்ற தமிழ் மக்களுக்குக் கூட தங்கள் நாட்டின் சரித்திரம் சரியாய்த் தெரியாது. அதில் மேன்மையானவைகளைத் தெரிந்தோ தெரியாமலோ விட்டு

விட்டு, நமக்கு அவமானமானவைகளையே தற்கால ஆங்கில சரித்திர நூலாசிரியர்கள் நமது கலாசாலை மாணவர்கள் படிக்க எழுதியிருக்கிறார்கள்.

மேற்கூறிய பூர்வீக சரித்திர காரியங்களைக் குறித்து ஏன் இவ்வளவு விஸ்தீரணமாய் வருணித்தேன்? நான் கூறியவையோடு தற்காலத்தில் அந்நியநாட்டுக்குச் செல்லுகிற நமது ஜனங்கள் வருந்தும்போது அயல் நாட்டுத் தோட்டங்களில் கூலி வேலை, அல்லது சற்றுப் படித்தவர்கள் மற்றும் ஏதாவது வேலை செய்து பிழைக்கும்படி தென் ஆப்பிரிக்கா, பீஜீ, பீனங்கு, மலேயா நாடு முதலிய அயல் தேசங்களுக்குச் செல்கின்றார்கள். சென்ற நாடுகளில் அவர்கள் கதி யென்ன? அவர்கள் வேலை செய்யும் தேயிலை, ரப்பர், கரும்பு முதலிய தோட்டங்களுக்கு முதலாளிகள் வெள்ளை மனிதரே. அத் தோட்டங்களில் இழிவானவையும், மிகக் கஷ்டமானவையுமான கூலி வேலைகளைச் செய்வதே நம்முடைய ஜனங்களின் பங்கு. சுகாதாரவிதிகளை அநுசரியாமல், வரிவரியாகவும், நெருக்கமாகவும் கட்டப்பட்ட குடிசைகளே இவர்கள் வசிக்கும்படி கொடுக்கப்பட்ட இருப்பிடம். கூலிக்காரரென்று இவர்களை இழிவாய்ப் பேசுவார்கள். அந்நாட்டு அரசியல் விஷயங்களிலாவது, ஜனசமுதாய நற்காரியங்களிலாவது இவர்களுக்கு யாதொரு வாக்குரிமையுங் கிடையாது. தென் ஆப்பிரிக்காவில் இவர்கள் வெள்ளைமனிதர் வசிக்கும் ஊருக்கு வெளியே தீண்டாச்சாதியார் போல் வசிக்கவேண்டும். ஊர்த் தெருக்களில் தாராளமாய் நடக்கக்கூடாது. வெள்ளை மனிதரோடுகூட புகைவண்டியிலாவது, மின்சாரவண்டியிலாவது

ஏறிப்பிரயாணம் செய்யக்கூடாது. இது மாத்திரமல்ல. இந்தியர்கள் கடினமான கூலிவேலை செய்யத் திராணியுள்ள மட்டுந்தான் வெள்ளை மனிதர் அவர்களைத் தங்கள் தோட்டங்களில் வேலைக்கு வைத்துக்கொள்ளுவார்கள். சுகம் கெட்டு, சரீரம் இளைத்தபின், அவர்களை இந்தியாவுக்குத் திரும்பி அனுப்பி விடுவதே வெள்ளை மனிதரின் பிரியம். அடிக்கடி தங்கள் மேலதிகாரிகளாகிய எஜமான்களாவது, அல்லது, தங்களை ஏமாற்றி அயல் நாட்டிற்குக் கூட்டிக் கொண்டுபோன கண்காணிகளாவது செய்கிற இம்சை பொறுக்கமாட்டாமல், இவர்கள் ஓடிப்போகிறதுண்டு. பிடிக்கப்பட்டால் சிறையிருப்பே அவர்கள் கதி. பிடிக்கப்படாவிட்டால், பக்கத்து நகரங்களில் போய், தெருக்களில் அநாதையாய் அலைந்து, பிச்சையெடுத்து, பற்பல நோய்களினால் பீடிக்கப்பட்டு, தர்ம வைத்திய சாலைகளிற் சாவதே அவர்கள் முடிவு. "இலங்கையில் சில வருஷங்களுக்குமுன் நான் சர்க்கார் வைத்தியனாய் வேலை செய்யும்போது என் கண்களினாலேயே இக்காட்சியைக் கண்டிருக்கிறேன். (இப்போது இலங்கையில் தோட்டங்களில் வேலைசெய்யும் தமிழ் கூலியாட்கள் விஷயங்களில் சீர்திருத்தங்கள் உண்டாயிருக்கிறதாயும், முந்தின காலங்களைவிட இப்போ தவர்கள் ஸ்திதி சற்று நன்றாயிருப்பதாயும் கேள்விப் படுகிறேன்). இக்கூலிகள் நமது தேசத்திற்குத் திரும்பி வந்தாலும், அவர்களுக்கு அவமானமே. தூரதேசம் போய் சுகங் கெட்டு, தரித்திரராகத் திரும்பிவரும் இக்கூலிகளை அவர்கள் சொந்த ஜனமாகிய கிராமத்தார் திரும்பிப் பார்க்கும்போது போய்த் திரும்பினவர்களுக்கு வெட்கமுந் துக்கமுமே. இது சம்பந்தமாக கப்பல் போக்குவரத்தை கவனிப்பது நன்று.

## கப்பல்கள்.

கப்பல் போக்குவரத்து ஒரு தேசத்தின் வியாபாரம் கைத்தொழிலுக்கு அதிக அவசியமானது. 150 வருடங்களாக, உலகில் கடல் ராணி எனப் புகழ்பெற்றிலங்கும் பிரிட்டனோடு சம்பந்தப்பட்டிருந்தும், இந்தியா ஒரு மூன்றாந்தரமான கப்பற்படை தேசமாகக்கூட இன்னும் ஆகவில்லை.

பெயருக்குக்கூட லாயக்குள்ள ஒரு கப்பலாவது இந்தியாவுக்குக்கிடையாது. இந்தியக் கப்பல் வியாபாரம், 100-க்கு 99-க்குமேல் அந்நிய நாட்டாருடைய கப்பல்களாலேதான் நடைபெறுகின்றன. 1894-ல் ஜப்பானின் அந்நியநாட்டு வியாபாரத்தில், ஜப்பானியக்கப்பல்கள் 100-க்கு 8-பங்குத்தான் நடத்திவந்தன. 1904-ல் 100-க்கு 37 பங்கு. 1928-ல் 100-க்கு 72 பங்கு. ஒரு சுதேசிய சர்க்கார் தங்கள் சுயதேச முன்னேற்றத்திற்காக எவ்வளவு செய்யக் கூடுமென்பதைக் காட்டுகிறது.

இந்தியாவின் கடற்கரை வியாபாரத்தையாகிலும் இந்தியருடைய கப்பல் வியாபாரத்திற்கென்று பிரத்தியேகப்படுத்த வேண்டுமென்ற இந்திய சட்டசபை பிரதிநிதிகள் பிரேரணை சர்க்காரால் தள்ளப்பட்டு விட்டது.

கப்பல் ஓட்டிகள், கப்பல்செய்யும் நிபுணர்கள் தேவை. ஜப்பானில் (1929-ம் வருஷம்) மாலுமிகளாகவும், கப்பல் தொழிலாளிகளாகவும் பட்டதாரியாயிருந்தவர் 71762. இதில் 132 பேர்தான் அந்நியர். இந்தியாவில் அவ்விதத் திறமை

வாய்ந்தவர் கிடைப்பது அரிது. இந்தியக் கப்பல் கம்பெனி ஒன்றுதான். அது தான் "சின்டியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி".

இதற்கு 10 கப்பல்கள் உள. நிறை 43076 டன். கப்பல்களுக்காக இந்தியா அந்நிய தேசங்களையே சார்ந்திருப்பது யுத்தகாலங்களில் அதிக அபாயகரமாகும். கனடாவைப் போலவாவது ஒரு கப்பற்படை இருக்கும்படி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

## ஆகாயவிமானம்.

எல்லா நவீனசாதனங்களிலும், ஆகாய விமானமே அதிக சீக்கிரத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறது. ஆனால் இந்தியாவில் அவை அதிகமாய்க் கையாளப்படவில்லை. ஏற்பட்டிருக்கிற சில சிறு சங்கங்கள் தனவந்தரான சிலருக்கு மட்டுமே. வாலிபர்கள் விமான ஓட்டிகளாக பயிற்றுவிக்கப் படவில்லை. மேலும் ஆகாய விமானப் போக்கு வரத்து வியாபாரத்துடன் சிறிதேனும் சம்பந்தப்படவில்லை.

நகரசபைகள், ஆகாய விமான நிலையங்களைக் கட்ட வேண்டும். பிரயாண கடிதப் போக்குவரத்துக்காகிலும், விமானங்களை ஜனங்கள் உபயோகிக்கச் செய்யவேண்டும்.

சர்க்கார் இதன் விஷயமாகச் செலவிடத் துணிந்திருக்கும் முதல் 9257000. ரூபாய் விமான நிலையங்களுக்கே 76,70,000 வேண்டும் கம்பியில்லாத் தந்தி சவுகரியங்களுக்கு ரூபாய் 10,21000 செலவாகும். "டாட்டா அன்டு சன்ஸ்" என்ற கம்பெனியார் காராச்சி, பாம்பே, சென்னைக்கு, விமானங்கள்

செல்ல ஒழுங்கு செய்திருக்கிறார்கள். இதை கொழும்புக்கும் நீட்ட ஒழுங்குகள் நடந்து வருகின்றன. கல்கத்தா, டக்கா, ஒருபாதை உண்டு. இது தினசரிப் போக்குவரத்து. வாரம் ஒருமுறை கல்கத்தாவுக்கும் ரங்கூனுக்கும் போகிறது.

இரவிலேயும் விமானங்கள் பறக்க, இறங்கக்கூடிய வசதிகள் இருந்தால்தான், விமான இலாகாவில் பூரண ஊதியமும் சௌகரியமும் பெறலாம். சர்க்கார், விமானப் பாதைகளை ஆரம்பிப்பவருக்கு பணஉதவியும், செய்யவேண்டும். அரசாங்கவேலைகளுக்கும் அவற்றை உபயோகித்து உற்சாகப் படுத்தவேண்டும்.

## தந்தி, தபால், ஒலிபரப்பும் கருவிகள்.

ஜனப்பெருக்கத்திற்கு ஏற்றபடி அதிக தபால் நிலயங்கள் இல்லாவிடினும், வர்த்தகம் கைத்தொழில் குறைவைக் கவனிக்குங்கால் அவற்றின் தொகை அதிகந்தான்.

| | | | |
|---|---|---|---|
| கனடாவில் | 10,000-பேருக்கு | 12-தபால் | நிலயங்கள். |
| பிரிட்டனில் | ,, | 5 | ,, |
| அமெரிக்க ஐக்கிய நாடுகளில் | ,, | 2 | ,, |
| ஜப்பானில் | ,, | 2 | ,, |

இந்தியாவில் 30,000-பேருக்குக் கூட 1 நிலயம் இல்லை.

| | | |
|---|---|---|
| டெலிபோன்கள் (பேசும் தந்திகள்) | 10,000-பேருக்கு | $1\frac{7}{10}$ |
| ஜப்பானில் | ,, | 105 |
| பிரிட்டனில் | ,, | 429 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகளில் | ,, | 1637 |

அமெரிக்க ஐக்ய நாடுகளில் 6பேர்களில் ஒருவருக்கு ஒரு டெலிபோன்!

# சுகாதாரமும் வைத்தியமும்.

இவ்விஷயத்தைக் குறித்துப் பேசுமுன் இதோடு சம்பந்தப்பட்ட ஒரு காரியத்தைப் பற்றி எழுதவேண்டும். நமது தேசத்தின் தரித்திரத்திற்கும், நோய் முதலிய துன்பங்களுக்கும், முக்கிய காரணம் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு போவதுதான் என்று, சில ஆங்கில வைத்தியர்கள் கூறுகிறார்கள். இந்த அபிப்பிராயம் சரியோ தப்பிதமோ வென்பதைக் குறித்து நாம் நிதானித்தறிய வேண்டும். ஆங்கில தேசத்திலும், மற்றுஞ் சில இதர ஐரோப்பிய நாடுகளிலும், கடந்த நூற்றுண்டில் ஜனத்தொகை எவ்வளவு பெருகியிருக்கிறதென்பதை இந்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

| தேசம் | ஜனத்தொகை 1800 | ஜனத்தொகை 1900 |
|---|---|---|
| ஆங்கில தேசம் | ஏறக்குறைய $1\frac{1}{2}$ கோடி | ஏறக்குறைய $4\frac{1}{2}$ கோடி |
| இத்தாலியா | ஏறக்குறைய $1\frac{3}{4}$ கோடி | ஏறக்குறைய $3\frac{1}{2}$ கோடி |
| சுவீடன் | 20 லட்சம் | 50 லட்சம் |

மேற்காட்டிய கணக்கைச் சற்று கவனித்துப் பாருங்கள். கடந்த 100 வருஷத்தில் ஆங்கில நாட்டில் ஜனத்தொகை ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. அதாவது 100-க்கு 275 பேர் அதிகமாய்ப் பெருகியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ கடந்த நூற்றுண்டில் ஏறக்குறைய 100-க்கு 30 பேர் தான் அதிகம். ஆங்கில நாட்டோடு ஒப்பிட்டால் நமது ஜனத்தொகைப்பெருக்கம் அரைக்கால் மடங்குகூட இல்லை. இப்படியிருக்க, 1800-ம் வருஷம் ஆங்கில தேசத்தின் ஸ்திதி என்ன? இப்போது

நூறு வருஷத்துக்குப் பின் அவர்கள் ஜனத்தொகை மூன்று மடங்கு அதிகரித்து விட்டாலுங் கூட, அவர்கள் தேச சம்பத்தும், பாக்கியமும், சுகாதார மேன்மையும், இப்பூலோக இன்ப வாழ்வும், சகல சாஸ்திரங்கள், கல்வி முதலியவற்றில் அபிவிருத்தி யடைந்திருப்பதும், எவ்வளவு பல மடங்காய்ப் பெருகித் துலங்குகின்றன. மற்ற ஐரோப்பிய நாட்டு ஜனங்களும் அப்படியே கடந்த நூற்றுண்டில் பலுகிப் பெருகி பாக்கிய மடைந்திருக்கிறுர்கள். ஆனுல் மேல் நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அந்தோ! இந்தியாவின் ஏழை ஜனத்திரள் கடந்த நூற்றுண்டில் ஆங்கில இராஜாங்கத்துக்குள் எவ்வளவு தூரம் அபிவிருத்தி யடைந்திருக்கிறுர்களென்பதைக் குறித்து நான் விவரிக்கவேண்டியதில்லை! நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள். நூறு வருஷத்துக்கு முன் கேவலமான ஸ்திதியிலிருந்த ஜப்பான் முதலிய நாடுகள் இப்பொழுது எவ்வளவு சீக்கிரத்தில் மேன்மையாகிவிட்டன.

இன்னொரு காரியத்தை இங்கே கவனிக்க வேண்டும். மேல் நாட்டார் தங்கள் தேசத்தில் பிழைப்பில்லாவிட்டால் அயல் நாடு சென்று நன்கு வாழும்படி விஸ்தீரணமான சில தேசங்களைத் தங்களுக்கு ஆதீனமாக்கிக் கொண்டிருக்கிறுர்கள். இந்த அயல் தேசங்கள் மிக விஸ்தீரணமாயிருந்தாலும் ஜனத்தொகை சொற்பந்தான். இவற்றில் ஆஸ்திரேலியா தேசத்தின் சில பாகங்களில் சீதோஷ்ண ஸ்திதி உஷ்ணமானதால், நமது இந்தியா தேசத்தாருக்கு ஒத்துப் போய்விடுமென்றுலும், மேல் நாட்டாருக்கு சரிவராது. அப்படியிருந்தும் அத்தேசங்களுக்கு நமது ஜனங்கள் குடியேறிப்

போகிறதற்கு அவர்கள் இடங்கொடுப்பதில்லை. மேற்கூறிய தேசங்களின் விஸ்தீரணத்தையும் ஜனத் தொகையையும் இங்கே விவரமாகக் காட்டுகிறேன்.

| தேசம். | சதுரமைல் விஸ்தீரணம். | ஜனத்தொகை. |
|---|---|---|
| இந்தியா | $17\frac{1}{4}$ லட்சம் சதுரமைல் | 35 கோடி |
| ஆப்பிரிக்கா | 110 லட்சம் சதுரமைல் (இந்தியாவை விட 6 மடங்கு விஸ்தீரணம்) | ஏறக்குறைய 11 கோடி (இந்தியாவில் மூன்றிலொரு பங்கு) |
| ஆங்கில அமெரிக்கா (கானடா) | $37\frac{1}{2}$ லட்சம் சதுரமைல் இத்தியாவுக்கு 2 மடங்கு | 90 லட்சம் (இந்தியாவில் 35-ல் ஒரு பங்கு) |
| ஆஸ்திரேலியா | 30 லட்சம் சதுரமைல் (இந்தியாவுக்கு 2 மடங்கு) | 60 லட்சம் (இந்தியாவில் 50-ல் ஒரு பங்கு) |

மேலே நான் ஒரு கணக்காக காட்டியதை கவனமாய்ப் படித்து யோசித்துப்பாருங்கள். இப்பூலோகத்திலே நாம் தரித்திரம், நோய் முதலிய கஷ்டங்களினால் வருந்துவது ஜனத்தொகைப் பெருக்கத்தினாலல்ல. சிலர் தற்காலத்தில் பற்பல மருந்து கருவிகள் முதலிய ஏதுக்களைக் கொண்டு கரு உண்டாகாமல் கர்ப்பத் தடைசெய்து ஜனத்தொகையைக் குறுக்கப் பிரயாசப்படுகிறார்கள். இவ்விதமாய்ச் செய்யவேண்டுமென்று போதிக்கிறவர்களும், ஐயோ! ஜனங்களின் சன்மார்க்கத்தைக் கெடுத்து, சுய வஞ்சனையினால் தங்களுக்கும் தங்கள் போதகத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கும் தீமையையே செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட தீய போதனையைப்

பிரசுரிப்பவர்களைக் குறித்து எச்சரிக்கை! மோசம் போகா திருங்கள்! இவர்கள் காட்டும் வழி ஜன சங்காரத்துக்கும் தேசீயத் தற்கொலைக்குமே கொண்டுபோய் விட்டு விடும். நமது தேசத்தினர் வருந்துவது பிரதானமாக ஜனத்தொகைப் பெருக் கத்தாலல்ல. விஸ்தீரணமானதும் நீர்வளம் நிலவளம் பொருந்தி யிருந்தாலும் ஜனத்தொகைக் குறைவினால் சரியானபடி அபி விருத்தி செய்யப்படாத பல தேசங்களிருக்கின்றன. இவற் றின் பல பாகங்கள் பண்படுத்தப்படாமல் காடாய்க் கிடக் கின்றன. இப்படிப்பட்ட தேசங்களுக்குச் சென்று காடு வெட்டி, நாடாக்கிக் குடியேறி நாம் வாழ, மேல்நாட்டார் செய்கிற தடையே நம் கஷ்டங்களுக்கு ஓர் முக்கிய காரணம்.

நமது பரம பிதா தாம் சிருஷ்டித்த சர்வபிராணிகளுக் கும் ஜீவனார்த்தத்திற்கு அவசியமான பொருள்களை சவாக்ஷணை செய்திருக்கிறார். "கருப்பைக்குள் முட்டைக் கும் கல்லினுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன்," என்ற அவர், ஆகாயத்தில் பறக்கும் பட்சிக்கும், காட்டில் மலரும் புஷ்பத்திற்கும் படியளக்கிற பகவான். தமது சொரூபமாகப் படைத்த தமது மானிட மக்களுக்கும் அவசியமானவைகளைச் சுதாரித்து வைக்காமல் இப்பூலோ கத்தில் அவர்களை உதிக்கச் செய்வாரோ? ஆனால், அந்தோ! இப்பூலோகத்தாரில் பல தேசத்தினர் சிற்றின்பத்தையும், டம்பத்தையும், தங்கள் பிழைப்பிற்கு அவசியமில்லாத பல வீண் பொருள்களையுந் தேடி நாடுவதால், உடன் சிருஷ்டி களாகிய இதர மானிடத் திரளை அவர்கள் ஒடுக்கி, தரித்திரத்துக்கும் கஷ்ட நஷ்டத்திற்கும் ஆளாக்கி விடுகி றார்கள். மகாத்மா காந்தி கூறுகிறபடி, நமக்கு இன்றி

மையா அவசியமான காரியங்கள் மாத்திரம் இருந்தால் போது மென்று திருப்தியடையாமல் அவசியமில்லா வீண் பொருள் களை நாம் சேர்த்துக் கொள்ளுவதுதான் திருட்டுத்தனம். இப்படிச் சொல்லுவதினால் கிரஹஸ்தரும் காமத்தையடக்கி தாங்கள் பாதுகாக்கும் திராணிக்கு மிஞ்சின குடும்பப் பெருக்கைத் தடுக்க முயல்வது அவசியமென்னும் சத்தியத்தை நான் மறுக்கவில்லை.

மானிடராய்ப் பிறந்தவருக்கு மரணம் ஓர் நாள் வரு மென்பதெல்லாருக்குந் தெரிந்த விஷயமே. ஆனால் இதர தேசங்களுக்குள், முக்கியமாக மேல் நாடுகளில், சாதாரண மாகக் காலாகாலங்களில் மனுஷருக்கு வரக்கூடிய அற்ப சொற்ப நோய்கள் தவிர, மற்றபடி ஜனங்கள் சுகதேகிகளாய் வாழ்ந்து வயோதிபராய் மரணமடைகிறார்கள். நமது தேசத் தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மேல் நாடுகளில் பாலியரும் சிசுக்களும் அதிகமாய் மரிக்கிறதில்லை. ஆனால் நம் தேசத் திலேயோ, சிசுக்களும், பாலியரும், சம்பாத்தியஞ் செய்யக் கூடிய நடுப் பிராயத்திலிருப்பவர்களும் பலகோடிக் கணக்கினர் கொள்ளை நோயால் மாண்டுபோகிறார்கள். கொள்ளை நோய் கள் நாம் முற்றிலுந் தடுத்துக் கொள்ளக்கூடியவைகள். மனுஷருடைய அறிவீனமும், தெரிந்துந் தெரியாமலும் ஒருவருக் கொருவர் செய்யும் அநியாயமும், தன்னைப்போல் பிறரை நேசித்து அயலகத்தாருக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யாது அசட்டை செய்தலும், இப்போர்ப் பட்ட காரணங்களினால்தான் கொள்ளை நோய் பரவுகிறது. விஷபேதியினால் பீடிக்கப்பட்டவர் வஸ்திரத்தை மற்றவர்கள் உபயோகிக்கிற தடாகம் கிணறுகளில் கழுவிச் சலவை

செய்தல், பிளேக், வைசூரி முதலிய கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டவர்களை மற்றவர்களோடு கலந்து ஜீவிக்கச் செய்தல், கொள்ளை நோயினால் யாரும் இறந்துவிடும்போது அதை ஒளித்துவிடல், இப்படி பற்பல மூடச் செய்கைகளினாலே நோய் பரவச் செய்துவிடுகிறார்கள். அல்லது சிலர் கொள்ளை நோய் ஏதோ "முனி" அல்லது "அம்மையினால்" உண்டாகிறதென்றெண்ணி நோயாளியைச் சரியாய் கவனிக்காதபடி அசட்டையாயிருந்து விடுகிறார்கள். அல்லது அந் நோயாளிக்கு முரட்டு விதமான பரிகாரம் செய்து கேடு செய்துவிடுகிறார்கள்.

இப்படியெல்லாம் செய்வதற்கு ஓர் முக்கிய காரணம் கல்வியின்மையினாலுண்டான அறிவீனம். நம் சாதாரண ஜனங்கள் இப்படிக் கல்வியில்லாமல் அறிவீனத்தில் மூழ்கி இருப்பதற்கு ஓர் முக்கிய காரணத்தை அடுத்த அதிகாரத்தில் விவரிக்கிறேன்.

இந்தியாவில் ஆங்கில இராஜ்ய அதிகாரத்துக்குட்பட்டிருக்கும் ஜனங்கள் 24 கோடிக்கு அதிகமாயிருக்கிறார்கள். இவர்களில் 10 வருஷங்களில், அதாவது 1915லிருந்து 1924 மட்டும், முற்றிலும் தடுக்கக்கூடிய பலவிதக் தொத்து நோய்களால் மரித்தவர்கள் $6\frac{1}{4}$ கோடி ஜனங்களுக்கு மேல்.

| நோயின் பெயர் | மரணமானவர்கள் |
|---|---|
| பிளேக் | $23\frac{3}{4}$ லட்சத்திற்கு மேல் |
| வாந்தி பேதி | ஏறக்குறைய 32 லட்சம் |
| முறைக்காய்ச்சல் முதலிய காய்ச்சலினால் | ($503\frac{1}{4}$ லட்சத்துக்கு மேல்) 5 கோடிக்கு மேல் |

| | |
|---|---|
| வயிற்றலேச்சல், வயிற்ருேட்டம் | கொஞ்சம்குறைய 24 லக்ஷம் |
| க்ஷயம் கபம் காய்ச்சல் | கொஞ்சம்குறைய $32\frac{1}{2}$ லக்ஷம் |

ஆக மொத்தம், $6\frac{1}{4}$ கோடி ஜனங்களுக்கு மேல் முற்றிலும் தடுக்கக்கூடிய நோய்களினுல் பத்து வருஷத்தில் மாண்டு போயிருக்கிருர்கள். அதாவது, இங்கிலாந்து (மகா பிரித்தானியா) தேசத்திலுள்ள ஜனத்தொகை மொத்தம் சேர்த்துக் கூட்டினுலும், அதைப் பார்க்கிலும் $1\frac{1}{2}$ மடங்கு ஜனங்கள் நமது தேசத்திலே பத்து வருஷத்தில் கொள்ளே நோயால் மாண்டு போயிருக்கிருர்கள். நமது தேசத்தில் பிறக்கிற குழந்தைகளின் மூன்றிலொரு பங்கு ஒரு வயதுக்குள்ளே மரித்துப் போகின்றன. இந்தியாவில் ஏழுலக்ஷம் கிராமங்களிருந்தாலும் இவற்றில் சரியான வைத்தியர்கள் வெகு சொற்பம். இருக்கிற வைத்தியர்களும் அநேகமாக பெரிய பட்டணங்களிலேயே இருக்கிருர்கள். கிராமங்களில் தான் வைத்தியர்கள் தேவை. ஆங்கில தேசத்திலிருந்து "லீ கமிஷன்" என்ற ஓர் விசாரணே பஞ்சாயத்தார் இந்தியாவுக்கு வந்தபோது, இங்குள்ள வெள்ளே மனிதர் தங்கள் ஸ்திரீகள் கருப்பு வைத்தியர்களிடத்தில் வைத்தியம் பெற்றுக்கொள்ளப் பிரியப்பட மாட்டார்களாதலால், வெள்ளே டாக்டர்களே தங்களுக்கு வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினுர்கள். ஆனுல், இந்தியாவில் சர்க்கார் வைத்தியர்கள் வாங்குகிற பெருஞ் சம்பளங்களெல்லாம் கிராமத்தார் கொடுக்கும் வரியிலே யிருந்துதான். இப்படியிருக்க, இந்தியாவின் ஜனங்களுள் மிகவும் அற்ப சொற்பத் தொகையுள்ள வெள்ளே ஸ்திரீகளுக்காக அவ்வளவு அக்கரை காட்டும் போது, எல்லா சர்க்கார் உத்தியோகங்களுக்கும் தங்கள் வரியின் மூலமாய்



திருப்பத்தூர் ஆசிரம கைத்தொழில் காட்சி சாலை திறப்புவிழா.
சென்னை சங்கீதசாஸ்திரி விசாலாக்ஷி அம்மாள் வீணை வாசித்து
"பெண் கல்வி" என்பதைப் பற்றி உபந்நியாசம் செய்வது.



ஆசிரமக் கைத்தொழில் காட்சிசாலை திறப்புவிழாவில் சேலம்
ஆதிநாராயண செட்டியாரின் அக்கிராசனத்தின் கீழ்
டாக்டர் ஏசுதாசன் கைத்தொழில் அபிவிர்த்தியைப்பற்றி
உபந்நியாசம் செய்வது.

சம்பளங் கொடுக்கிற கோடிக் கணக்கான கிராமவாசிகளுக்கு வேண்டிய வைத்திய அவசியங்களைக் குறித்தும் அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டாமா? மேல் நாட்டு வைத்தியத்தை கிராமவாசிகள் ஏற்றுக் கொள்ளுகிறதில்லையென்று சொல்வது மிகவும் பிசகான காரியம். கிராமவாசிகள் மிக ஏழைகள். மேல் நாட்டு வைத்தியர்கள் தங்கள் வைத்தியத்துக்குப் பதிலாகக் கேட்கிற சம்பளப் பணம் கிராமவாசிகள் சக்திக்கு மிஞ்சினது. மேலும் வைத்தியக் கல்லூரிகளில் அந்நிய பாஷையிலேயே இவர்கள் வைத்திய சாஸ்திரங்களைக் கற்றிருப்பதினால், சுய பாஷையிலேயே கிராமத்தாருக்கு வைத்திய விஷயங்களை விவரித்து அவர்களுக்கு நம்பிக்கையுண்டாகச் செய்ய ஏலாதவர்களாயிருக்கிறார்கள். பத்தியம் முதலியவைகளிலும் நமது நாட்டில் விளையும் உணவுப் பொருள்களின் கூறு பாடுகள் இவர்களுக்குத் தெரியாது. எங்கெங்கே ஓர் வைத்தியன் அன்போடும் சிரத்தையோடும் நோயாளிகளை கவனித்துப் பரிகாரஞ் செய்கிறானோ, அப்படிப் பட்ட வைத்தியனைக் கிராமத்தாரும் அன்போடும் விசுவாசத்தோடும் ஏற்றுக்கொண்டு அவனிடத்தில் ஏராளமாய் வருகிறார்கள். இதுவே என் அநுபவம்.

காரியமிப்படியிருக்க, சில மாதங்களுக்கு முன் சென்னை சர்க்காரால் ஏற்படுத்திய வைத்திய கல்வி விசாரணை பஞ்சாயத்தார் (Committee of Medical Education appointed by the Madras Government) வெளியிட்டிருக்கிறது எனக்கு பிரமிப்பும் விநோதமுமாயிருக்கிறது. இந்த பஞ்சாயத்து அங்கங்களுக்கு கிராம விஷயங்

களைப் பற்றி ஏதும் அநுபவமில்லையென்பதை அவர்கள் வெளியிட்டிருக்கிற தீர்மானங்களால் பட்டப் பகல் போல் கிராமத் தொண்டர் அறிந்து கொள்ளலாம். "கிராமத்திற்குத் தற்கால சாஸ்திரங்களின்படி தேறின வைத்தியர்கள் அதிகமாய் அவசியமில்லை. ஏனென்றால், கிராமத்தாருக்கு வேண்டிய நாட்டு வைத்தியர்கள் அங்கு ஏராளமாயிருக்கிறார்கள்," என்று இந்த பஞ்சாயத்தார் சர்க்காருக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள். பண்டைய நாட்டு வைத்தியர்கள், மூடர், மூடர், அவர்கள் வைத்தியத்தினால் ஜனங்களுக்குத் தீமையே விளையுமென்று கூறுமிந்த சர்க்கார் வைத்தியர்கள், பட்டணங்களில் மாத்திரம் வேலை செய்து, கிராம அநுபவ மில்லாததால், மேற்சொன்னபடி கூறுவது நாம் சிரிக்கத்தக்கதே! சென்னை ராஜதானியில் கொஞ்சங் குறைய 20,000 பேருக்கு ஒரு டாக்டர்தானிருக்கிறார். தற்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கிராம மருந்துசாலைகள் போதுமானவை பல இல்லாத குறைவுகளினாலும், சாமர்த்தியமும் உற்சாகமும் உள்ள வைத்தியர்கள் இங்கு ஏற்படாததினாலும், பிரயோஜன மற்றிருக்கின்றன.

கிராமங்களின் மத்தியஸ்தலமாகிய பிரதான ஊர் ஒவ்வொன்றிலும், தாலுக்கா தலைப்பட்டணங்களிலும் ஒவ்வொரு நல்ல வைத்தியசாலை இருக்கவேண்டும். கிராம அபிமானமுள்ளவரும், ஆயுத வேலையில் நிபுணரானவருமான ஒரு தலைமை வைத்தியரும், உதவி வைத்தியர், மருந்து கொடுப்பவர் முதலிய உதவியாட்களுமாக இங்கு இருக்க ஒழுங்கு செய்ய வேண்டும். சுற்று கிராமங்களின் மத்தியில் பற்பல இடங்களில் மருந்து கொடுக்குஞ் சிறிய வைத்தியஸ்தலங்கள் ஸ்தா

பிக்கப்படவேண்டும். தொத்து வியாதிகள் வாராதபடி தடுக்கும்படியாக, சுகாதார விளக்க சாஸ்திரங்களில் தேர்ந்த உத்தியோகஸ்தர்கள் மிக வைராக்கியத்தோடு ஜனசமூக சுகத்தை நாடி, தொத்து வியாதிகளைத் தடுக்கும்படி ஊழியஞ் செய்ய வேண்டும். ஜனங்களுக்கு இவர்கள் மேல் விசுவாசமில்லாவிட்டால் இவர்கள் செய்கிற வேலையெல்லாம் வீணாய்ப் போகும். ஒருதடவை சுகாதார விஷயமாக வேலை செய்யும் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் விஷபேதியால் பீடிக்கப்பட்ட ஓர் கிராமத்துக்குப் போய் வாந்திபேதிப் பூச்சியைக்கொல்லும் மருந்தை அவர்கள் கிணற்றில் போட்டார். அவர் போய்விட்டவுடன் அந்த ஜனங்கள் தண்ணீரை இறைத்து மருந்தை வெளியாக்கி விட்டார்கள். பின்பு எங்களிடம் வந்து கிணற்றிற்கு மருந்து போடும்படி கேட்டுக்கொண்டார்கள். நாங்களும் அதே மருந்தைத்தான் கிணற்றில் போட்டோம். ஆனால் அவர்கள் அதை சந்தோஷமாகக் கிணற்றில் விட்டுவிட்டார்கள்!

மேலும், ஸ்திரீகளின் பிரசவசமயத்தில் சரியாக மருத்துவம் பார்க்கத்தக்க பயிற்சி பெற்ற மருத்துவச்சிகள் அதிக அவசியம். இப்போது கிராமங்களில் மருத்துவம் பார்க்கிற அம்பட்டச்சி முதலிய குருட்டாட்டமான மருத்துவச்சிகள் தங்கள் அறிவீனத்தால் பிரசவ காலங்களில் தாய்க்கும் பிள்ளைக்கும் அதிகக் கெடுதி செய்துவிடுகிறார்கள். இப்படி மருத்துவச்சிகளின் மூடத்தனத்தினால் விஷக்காய்ச்சல் முதலியன வந்து எத்தனை தாய்மார் மாண்டு போகிறார்கள்! நான் முன்னேயே கூறியபடி எத்தனையோ சிசுக்களும் மாண்டு போகின்றன. பிரசவத்தில் தாயும் பிள்ளையும் மரித்துப் போகிறதற்கு ஒரு முக்கிய காரணம் சிசு விவாகம், என்

வைத்திய அநுபவத்தில் இதை நன்ருய் அறிவேன். இப்போ சிறிது காலத்துக்கு முன் பதின்மூன்று வயதில் குழந்தை பெற்று, பதினுன்கு வயதில் க்ஷய ரோகத்தால் இறந்துபோன ஒரு சிறு பெண்ணின் விஷயம் என் கண் முன் நிற்கிறது. அப்படி மரிக்காவிட்டாலும் கூட, சிசு விவாகம் தாய்க்கும் பிள்ளைக்கும் பலக்குறைவும், பலவீனத்தால் பலவித நோய் களும் இலகுவாயுண்டாகிறதற்கு ஏதுவாகும். வட ஆற்காடு ஜில்லாவில் வருஷத்திற்கு 81,000 குழந்தைகள் பிறக்கின்றன. ஆனல் தற்சமயத்தில் பயிற்சி பெறுகிற மருத்துவச்சிகள் கணக்கெடுத்தால், போதுமான பயிற்சி பெற்ற மருத்துவச்சி கள் கிடைக்க இன்னும் 150 வருஷமாகும்!

கிராமவாசிகளுக்கு அவசியமான வைத்தியர்களும், வைத்திய சாலைகளும் வெகு தீவிரமாய் ஏற்படுத்தாவிட்டால் அவர்களுக்கு மிகக் கொடுமை செய்வதாகும். பணமில்லை யென்று சாக்குப் போக்குச் சொல்லித் தாமதிப்பது நியாய மல்ல. இந்தியாவில் யுத்தாயுதங்கள், பட்டாளங்களுக்காக வருஷம் 55 கோடி ரூபாய் சர்க்கார் செலவு செய்கிருர்களே!

இந்தியாவில் கொஞ்சங்குறைய மூன்று லக்ஷம் பேர் இராணுவத்தில் உத்தியோகஸ்தர், சிப்பாய்கள். இவர்களுக் காக 749 உயர்தர டாக்டர்கள், 1,200 வைத்திய உதவி செய்வோர். மொத்தம் 20,000 கட்டில்களுள்ளனவும், சிகிச் சைக்கு வேண்டிய சர்வமருந்துகள், ரண வைத்திய ஆயுதங் கள், மின்சாரக் கருவிகள் முதலியன நன்கு சவரக்ஷணை செய்யப்பட்டனவுமான பல உயர்தர வைத்திய சாலை களுண்டு. இவர்களில், ஆங்கில உத்தியோகஸ்தர் சிப்பாய்

கள் அரையரைக்கால் லக்ஷம் பேர்தான். இச்சிறு தொகையினருக்கு மாத்திரம் 8000 கட்டில்களுள்ள உயர்தர ஆஸ்பத்திரிகளும், 320 பெரிய டாக்டர்களும், 346 உதவி டாக்டர்களும், 143 தாதி (நர்ஸ்) ஸ்திரீகளும் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 100பேருக்கு 13க்கு அதிகமான படுக்கைகள் ஆஸ்பத்திரியில் அவர்கள் தங்கி வைத்தியம் பெறக் கிடைக்கும். ஆனால் வடஆற்காடு ஜில்லா ஒன்றைமாத்திரம் உதாரணமாக கவனித்துப் பார்ப்போம். இந்த ஜில்லாவில் 20½ லக்ஷம் ஜனங்களுக்குமேலிருக்கிறார்கள். வேலூரில் ஒரு பெரிய டாக்டர், உதவிடாக்டர், சிற்சிலவைத்திய உதவியாட்கள், தாலுக்காக்களின் பிரதான ஊர்களில் ஒரு உதவி டாக்டரும் சில கீழ் வேலையாட்களும், ஆக எல்லாம் கூட்டிப் பார்க்கப்போனால் சர்க்கார் உத்தியோக டாக்டர்கள் மொத்த தொகையும் ஒருவர் விரல்களினால் எண்ணிப்போடலாம். இராணுவச் சிப்பாய்கள் சாதாரணமாகப் பலசாலிகள், சுகதேகிகள், வைத்திய அவசியமதிகமிராது. ஆனால் சாதாரண ஜனங்களுள் பல சிசுக்கள், பலவீனர், வயோதிபர் முதலியோரிருப்பார்கள். மேலும் தொத்துவியாதிகள் தீயென்று பரவும். அரையேயரைக்கால் லக்ஷம் மாத்திரமான ஆங்கில சிப்பாய்களுக்கு 8,000 கட்டில்களுள்ள பல ஆஸ்பத்திரிகள். ஆனால் 20½ லக்ஷத்திற்குமேல் ஜனங்களுள்ள ஒரு ஜில்லாவிற்கு எல்லாம் மொத்தம் 100 கட்டில்களுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகள்கூடவுண்டோ? நிதானியுங்கள்! அவர்களுக்கு 100-க்குப் 13-க்கு அதிகமாக வைத்தியத்திற்காக ஆஸ்பத்திரியில் தங்கும்படி கட்டில்கள். வைத்திய அவசியமில்லாததால் பாதிக்குமேல் அக்கட்டில்கள் வீணாய் காலிதான். ஆனால் நமக்கோ 20,000

பேருக்கு ஒரு கட்டில் வீதம் சர்க்கார் ஆஸ்பத்திரிகளுண்டோ வென்பது மிகச்சந்தேகம். இந்த இரண்டையும் கவனித்து ஒப்பிட்டுப் பார்த்தால் பட்டாளங்களுக்காக சர்க்கார் செய்கிற வைத்தியத்தில் பொது ஜனங்களின் நன்மைக்காகச் செய்வது நாற்பதிலொரு பங்குபோல்தானென்று சர்க்கார் உத்தியோகத்தில் வேலைப்பார்த்த ஓர் அநுபவசாலியான டாக்டர் போலநாதர் என்பவர் கூறுகிறார்.

இந்தியாவில் அரை லக்ஷம் ஜனங்களுக்கு மருந்து கொடுக்க மருந்து கொடுக்குமிடம் ஒன்று வீதம் தான் சர்க்கார் ஏற்படுத்தியதிருக்கலாம்.

மனிதரை யுத்தத்தில் கொன்றழிக்கும் வேலைக்காகக் காத்திருப்பவர்களை சவாக்ஷணை செய்யும்பொருட்டு 55 கோடி ரூபாய் இப்படி அழிப்பது நீதியோ? இந்தப் பெருந் தொகையும் கிராமத்தார் தங்கள் வரியிலிருந்துதானே கொடுத்துத் தீர்க்க வேண்டும். இந்தக் கோடிக் கணக்கான கிராமவாசிகளின் சுகவாழ்வு பெரியதா? இந்தியாவுக்கு அவசரமில்லாத இந்த ஏராளமான ஆங்கில ராணுவ உத்தியோகஸ்தர்களை பெரிய சம்பளங்கள் கொடுத்து ஏற்படுத்துவதும், சிப்பாய்க் கூட்டங்களைத் திரட்டிப் பணத்தை வீணுக்குவதும் பெரியதா? ஏன் மனுஷரைக் கொல்லும் பட்டாளங்களைக் குறைத்துவிட்டு பலவீதத்திலும் வருந்தும் கிராமவாசிகளை சுகதேகிகளாகப் பாதுகாக்கும் சுகாதார விஷயங்களுக்கும், வைத்தியத்திற்கும் அதிக பணம் செலவழிக்கக்கூடாது? சென்னை ராஜதானியில் $4\frac{1}{4}$ கோடி ஜனங்களுக்காக வைத்தியம் சுகாதாரத்திற்கென்று ஒருவருஷ சர்க்கார் செலவு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் மாத்திரந்தான்.

இதே சம்பந்தமாக மதுபானத்தினுல் நமது தேசத்திற்கு வந்திருக்கும் தீமைகளைக் குறித்தும் சற்று எழுத விரும்புகிறேன்.

மதுபானத்தினுல் ஈரல் வீங்கி, சில வருஷங்களுக்குப் பின் அது கடினமாகும். வயிற்றில் தண்ணீர் கட்டி வயிறு பெரிதாகப் போனுலும், சரீரம் மிகவும் மெலிந்து, கடைசியாக நடக்க முடியாமல், எந்த மருந்து கொடுத்தாலும் குணமாகாமல் சாவான். குடியினுல் உடம்பிலே யிருக்கிற இரத்தக் குழாய்கள் கடினமாகின்றன. அதனுல் சிலருக்கு மூத்திர ஈரல் வியாதி, கால் கை சக்தியில்லாமல் பாரிச வாய்வு முதலிய நோய்களுண்டாகும். மேற்சொல்லிய வியாதிகள் உண்டாகாவிட்டாலும், அவர்களுக்குக் கபக்காய்ச்சலாவது மற்ற கடும் வியாதியாவது வந்தால், இரத்த ஓட்டம் சரியில்லாததினுல் ஆயுசு குறையும். மது வஸ்துக்கள் மருந்தல்ல, விஷம்தான். அதனுல் வியாதி நீங்கு மென்று நோயாளிகளுக்கு அதைக் கொடுக்கக்கூடாது.

இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு, மதுபானத்தினுலே மாத்திரம் போகிற பணம் 70 கோடி ரூபாய். (எழாயிரம் லக்ஷம் ரூபாய்.) அதாவது இந்த ரூபாய்களை வரிசையாய் ஒன்றுக்குப்பின் ஒன்ருய் நெடுக வைத்தால், 13257 மைல் தூரம் நீளமாகும். ஒன்றுக்கு மேலொன்ருக அடுக்கினுல், 7900 மைல் உயரமாக, உச்சியைப் பார்க்கக் கூடாத வண்ணமாய் ஆகாயத்தை அளாவ உயரும். இதில் சர்க்கார் வரும்படி 25 கோடி ரூபாய். (250 லக்ஷம் ரூபாய்.) சென்னை இராஜதானியில் மாத்திரம், மதுபானத்திற்காகச் செலவாகிற

பணம் 16¾ கோடி ரூபாய். (1683 லக்ஷம் ரூபாய்.) சர்க்காருக்கு இதில் வரும்படி 5 கோடி ரூபாய். (500 லக்ஷம் ரூபாய்.) கோடானு கோடிக் கணக்கான ஜனங்களுக்குக் குடிக்கக் கூழ்கூட கிடையாமல் வருந்தும் இந்த தேசத்தில், மனுஷன் சரீரத்தையும் ஆத்துமாவையும் கெடுக்கும் மதுபானத்திற்காக இப்படிப் பணத்தைக் கொட்டுவது தர்மமோ? நிதானியுங்கள். இதினுல்தான் மகாத்மா காந்தி, ராஜகோபாலாச்சாரியார் முதலிய நம் தேச பக்தர், சர்க்கார், சாராயக் கடைகளை மூடி, அடியோடு குடி நின்றுபோகச் செய்துவிட வேண்டுமென்று பிரயாசிக்கிறுர்கள்.

என்னுடைய வைத்திய அநுபவத்தில் நான் கண்ட ஒரு விசனமான விஷயத்தைக் குறித்து ஒன்றும் ஒளிக்காமல் பேசவிரும்புகிறேன். விவாகஞ்செய்தவர்களுஞ் செய்யாதவர்களுமாகிய புருஷர்கள் ஸ்திரீகள் பலர் காமவிகாரத்திஞல் அக்கிரம ஜீவியம்செய்து சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் கேடு உண்டாகும்படி நடக்கிறுர்கள். இப்படி நான் சொல்லுவதிஞல் தேசத்திலே பெரும்பாலர் இப்படி நடக்கிறுர்களென்று சொல்லவில்லை. ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது இவர்கள் தொகை மிகச் சிறிதாயிருந்தாலும், இதனுல் பரவக்கூடிய தீமை எவ்வளவென்று யார் கணக்கிடக்கூடும்!

மனத்தூய்மை, ஜீவிய சுத்தம், தெய்வ பக்தி, தேசத் தொண்டருக்கு இன்றியமையா அவசியம். சுயத் தியாகஞ் செய்து பிறர்வாழத் தொண்டு செய்வதற்கு நம்மைத் தூண்டி ஏவுவது தெய்வன்பின் வல்ல சக்தியன்றோ? மகாத்மா காந்தியின் ஜீவியத்தில் விளங்கும் வல்லமையும் இவ்வாறன்றோ?

# உணவு.

சுகாதார விஷயங்களில் நாம் கவனிக்கவேண்டிய ஒரு பிரதானமான காரியம் நல் உணவு. வயிறுரா உண்ண அவசியமான உணவையே ஒருவிதமாக முக்கியப்படுத்தி கிராமத்தார் அல்லும் பகலும் அதற்காக கவலைகொண்டு உழைத்தாலும், தேகத்தை சரியாய் போஷித்து அதைப் பலப்படுத்தும் உணவின் தன்மைகளை தீர அறியவில்லை. கிடைக்கிற உணவுப்பதார்த்தங்களைக்கூட எவ்விதமாக உபயோகிக்கவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு கிராமத்தான் சரியாக சரீரத்தைப் போஷித்துப் பலப்படுத்தும் உணவு அருந்தவேண்டுமென்றால் ஒவ்வொரு குடும்பத்திலும் ஆகாரத்திற்கு மாத்திரம் ஆளுக்கு சராசரி ரூ. 5-க்கு குறையாத வரும்படி அவசியம். ஆனால் இதற்கு வழியில்லாததால் தற்காலத்தில் இது மிக கஷ்டம் தான். எனினும் கைக்கு வருகிற உணவுப் பொருட்களை யாவது புத்தியோடு உபயோகிக்கவேண்டும். உணவின் நோக்கம், இளம்பிராயத்தில் தேகத்தை வளரச்செய்யவும் அதை சுகபலமுடன் காப்பாற்றுவதும், வயது முற்றியபின் சரீரத்தை சுகமாயும் பலமாயுமிருக்கவும் செய்வதே. உணவின் நோக்கம் பசிபாற்றுவதுமட்டுமல்ல. நமது சரீர அமைப்பில் தசையும், எலும்பும், நரம்பு வஸ்துக்களும், இவற்றை இணைத்து சேர்க்கும் இணைவஸ்துவும்தான் முக்கியம். இவ்வொவ்வொன்றும் இளம் பிராயத்தில் வளரவும், முற்றியபின் ஆரோக்கியமாயிருக்கவும் நாம் உண்ணும் உணவில் சில அவசியமான சாராம்சங்கள் பொருந்தியிருக்கவேண்டும். இவ்வம்சங்களுக்கு ஊன் வஸ்து (புரோட்டீன்), உலோக உப்புகள், கொழுப்புகள், பசை வஸ்து (கார்போஹைடிரேட்ஸ்), பிராணசத்து (வைட்டா

மின்) என்று பெயர். நாம் புசிக்கிற ஆகாரத்தில் இவ்வம்சங்கள் போதுமான அளவு கலந்திருக்கவேண்டும். வளரும் பிள்ளைகளுக்கு பால் மிக அவசியம். பால், கோதுமை, பருப்பு, கேழ்வரகு, நிலக்கடலை (கடலைக்காய்), வீட்டில் குத்திய அரிசி, கம்பு, சோளம், கீரை, கமலாப்பழம் பப்பாளி பழம், மாம்பழம், ஆட்டு மாம்சம், முட்டை இவற்றில் நல்ல உணவு அம்சங்களிருக்கின்றன. கிராமத்தாருக்கு இவற்றில் கிடைக்கக்கூடியவை பால், நெய், பழங்கள், நிலக்கடலை (கடலைக்காய்) துவரைபருப்பு, கேழ்வரகு, கம்பு, சோளம், வீட்டில் குத்திய அரிசி, கீரை, கிழங்குகள் முதலியனவே. இவற்றை கலந்து உபயோகியுங்கள். வளரும் பிள்ளைகளுக்கு பால் மிக கொடுங்கள். இதோடு நல்ல சுத்தமான காற்றும், சூரிய கிரண வெளிச்சமும் அவசியம். கூடியவரை வெளியில் நல்ல திறப்பான காற்றோட்டமுள்ள இடத்திலேயே படுத்து தூங்குங்கள். வீட்டிற்கு காற்றோட்டமுள்ள ஜன்னல்கள் மிக அவசியம். தூங்கும்போது முகத்தை மூடிக்கொள்ள வேண்டாம். உணவை நாம் ஜீரணிப்பதற்கும், சரீரம் பலமாயும் ஆரோக்கியமாயுமிருப்பதற்கும் தேக அப்பியாசம் அவசியம். சூரிய கிரணமும் சுகத்திற்கு அவசியமே. பற்களை சுத்தமாய் தேய்த்து பல் ஈறல் சீழ் பிடிக்காமல் பாதுகாக்கவேண்டும். கிராம சுகாதார நூல் என்று நான் எழுதியிருக்கும் வேறொரு புத்தகத்தில் இவற்றையும் மற்றும் பல சுகாதார விஷயங்களையும் குறித்து மிக விஸ்தாரமாய் எழுதியிருக்கிறேன்.

கிராமத்தாருக்கு தற்சமயத்தில் கிடைக்கக்கூடிய உணவு பதார்த்தங்களில் எவை அதிக நன்மையாயிருக்கும் என்பதைப்

பற்றி இங்கு சற்று தெளிவாக்கி இதை முடிக்கிறேன்.

சாதாரணமாகச் சாப்பிடுகிற கம்பு, கேழ்வரகுடன் பின் வருபவைகளை சேர்த்து சாப்பிடுங்கள். கம்பு, கேழ்வரகில் நல்ல சத்துள்ள சில அம்சங்களிலிருந்தாலும் இவை மட்டும் உடலை போஷிக்கப் போதாது. இவற்றோடு நிலக்கடலை, பச்சைப் பயிறு, முளைக்கடலை, கீரை, தக்காளி, பப்பாளி, முருங்கை அகத்தி கொத்தமல்லி இலைகள் முதலியனவற்றில் எவை கிடைக்குமோ அவற்றையும் சேர்த்து சாப்பிடவும். ஆட்டு ஈரல், இரத்தம் ஊறுவதற்கு உதவியாயிருக்கும்.

நிலக்கடலையை ருசிகரமான பலவித தின்பண்டங்களாக பக்குவப் படுத்திக்கொள்ளலாம். வெல்லமும் நிலக்கடலையும் கலந்த பலகாரம், துவையல், வறுத்தக்கடலை இப்படி பலவித மாகச் செய்து சாப்பிடலாம்.

கோழி வளர்த்து முட்டை சாப்பிடுங்கள். பசும் பாலாவது ஆட்டுப்பாலாவது வளரும் பிள்ளைகளுக்கு அவசிய மானதால் இவற்றையும் எவ்வளவு கஷ்டப்பட்டாகிலும் சுதாரித்துக் கொள்ளுங்கள்.

## கல்வி.

ஓர் மனிதனுடைய மனக் கண்ணைத்திறந்து, அவன் புத்தியை விருத்தி செய்வது கல்வியே. மனக் கண் மூடி, அந்தகாரத்திலும் தரித்திரத்திலும் தரித்திருப்பவருக்கு ஆத்மீகநன்மையும், மனுஷத்வ பூரண வளர்ச்சியும் கிட்டுவது அரிது. தேச அபிவிருத்திக் கடுத்தவைகளை முன்னமே ஞான திருஷ்டியால் கண்டு, அதற்கேற்றபடி நடவாத ஜனம்

அழிந்து போகும், என்ற முதுமொழி உண்மையே. ஓர் தேசம் விருத்தியடைவது அதின் சிற்சில மனிதர் மாத்திரம் உயர் கல்வி யடைந்து வித்வான்களாவதாலல்ல; சர்வஜன பொதுக் கல்வியே தேசம் வாழச் செய்யும். மேல்நாடுகளில் சில சிறிய தேசங்கள் இதற்கு நல்ல உதாரணம். டென் மார்க்கு, நார்வே தேசங்களிலிருக்கிற ஜனத் தொகையைக் கவனித்தால் தமிழ் நாட்டின் ஒரே ஜில்லாவுக்குத்தான் ஒப் பாகும். ஆனால், இந்த சிறியதேசங்களின் அரசியல், கல்வி, வியாபாரம் முதலியவற்றின் விருத்தியையும், சமுதாய முன் னேற்றத்தையும் வைத்திய சாஸ்திரம், மின்சார யந்திரத் தொழில்கள் முதலியவற்றில் இவர்கள் முன்னேறி, நூதன மான காரியங்களைச் செய்வதையுங் கவனித்தால், அவர்களைப் பார்க்கிலும் நூறு மடங்கு மேலான முப்பத்தி மூன்று கோடி ஜனமுள்ள நம் தேசத்தின் ஸ்திதி எத்தனை பரிதா பம். ஏன்? மேற்கூறிய தேசங்களில் சாதாரண ஜனங்க ளாகிய சமுசாரி, தொழிலாளி, முதலியவர்கள் கூட பொதுக் கல்வியில் தேர்ந்தவர்கள். குப்பை வண்டி ஓட்டுகிறவன்கூட தினசரி பத்திரிகை வாசித்து, பல தேசீக காரியங்களிலும் உற்சாகத்தோடு பங்கெடுத்துக் கொள்ளுகிறான். நமது தேசத்தில் சுய பாஷை வாசிக்க எழுதத் தெரிந்தவர்கள் நூற் றுக்கு எட்டுபேர் மாத்திரந்தான், ஆண்கள் நூற்றுக்குப் பதின்மூன்று, பெண்கள் நூற்றுக்கு இரண்டு. சில மாகாணங் களில் இதைவிடக் குறைவு. ஆனால், உயர் கல்வி யெல்லாம் ஆங்கில பாஷையிலிருப்பதால், சுயபாஷை மாத்திரம் வாசிக்க எழுதத் தெரிவது, பெரிய கல்வி யாகிவிடுமோ? சுய பாஷை மாத்திரம் வாசிக்க எழுதக் கற்றவர்கள், பள்ளிக்

கூடம் விட்டு தங்கள் தொழில்களுக்குச் சென்றபின், அதை யும் மறந்து விடுகிறார்கள். வாசிப்பின்மேல் ஆசையுண்டாகச் சற்று உயர் கல்வி வேண்டும். மேலும் வாசிக்க எழுதத் தெரிவது மாத்திரம் கல்வியாகாது. மெய்க் கல்வி ஒருவனின் மனுஷத்வம் விருத்தியடைந்து பூரணமாகி, அவன் இந்திய சமுதாயத்துக்காகவும், பூலோகத்திலுள்ள தன் உடன் சிருஷ்டிகளுக்காகவும், எப்படி உழைத்துத் தன் பங்குக்கடமை நிறைவேற்ற வேண்டுமென்று கடவுள் சித்தங்கொண்டிருக் கிறாரோ, அது நிறைவேறவும் செய்யவேண்டும். ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள்கூட சொற்பந்தான். 1927-ஆல் சென்னை ராஜதானியில் உயர்தரப் பள்ளிக்கூடமாகிய ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தவர்கள் நூற்றுக்குக் காலே அரைக் கால்தான். இவர்களையெல்லாம் பெரிய கல்விமான்க ளென்று சொல்லிவிடலாமோ? சாதாரண ஜனங்கள் இப்ப டிக் கல்வி இல்லாமல் அறிவீனத்தில் மூழ்கியிருப்பதற்கு ஓர் முக்கிய காரண முண்டு. அதாவது, தாய்ப் பாஷையை அசட்டை செய்துவிட்டதே. இச்சத்தியம் கடந்த பதினைந்து வருஷங்களுக்குமேல் நமது கிராமவாசிகளுக்குள் வேலை செய் ததின் பலனாக எனக்குப் பிரத்தியக்ஷமாயிற்று. நான் மேலே கூறியபடி பாடசாலைகளில் மாத்திரம் தாய் பாஷையில் படித் துக் கொடுத்துவிடுவது யாதொரு உபயோகமுமில்லை. உயர் தரப் பாடசாலைகளில் பத்தாவது வகுப்புமட்டும் சுயபாஷை யில் சாஸ்திரங்களைக் கற்றுக்கொடுக்கலாமென்று உத்தரவு இருக்கிறது நிஜம்தான். ஆனால், இதனால் என்ன பிரயோ ஜனம்? அரசியல் பாஷை ஆங்கிலமாயிருக்கிறதே. இராஜாங் கத்தில் உத்தியோக வேலைக்கு, வைத்தியம், யந்திர சாஸ்

திரம், முதலியன படிக்க, சட்ட சபைகளிற் பேச கச்சேரி யில் வழக்கு முதலியவைகளை நியாயாதிபதி விசாரித்துத் தீர்ப்புகளை எழுத, இவை யெல்லாவற்றிற்கும் சர்க்கார் அந் நியபாஷையாகிய ஆங்கிலத்தைதயே ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதனால் சுய பாஷையில் உயர்கல்வி கற்றவன்பாடு மிகக் கஷ்டமே. பட்டினியும் பசியும், தொழிலில்லாமையும் அவன் பங்காகும். என்ன நோக்கங்கொண்டு அரசாங்கத்தார் தங்கள் சொந்த பாஷையாகிய ஆங்கிலத்தை இப்படி நமது தேசத்தில் பிரதான பாஷையாக்கி விட்டார்களென்பதற்குப் பல காரணங்களுண்டு. நமது தேசத்தைத் தங்கள் அதி காரத்துக்குள் எப்பொழுதும் வைத்துக்கொள்வதற்கு இது ஓர் பேருதவி. அவர்கள் முதலாவது இந்தியாவுக்கு வியாபாரத்துக்கே வந்தார்கள். அவர்கள் வியாபார சங்க மாகிய ஈஸ்ட் இந்தியா கம்பனிக்கு வெங்கடகிரி ராஜா, சென்னைப்பட்டணத்தில் கொஞ்சம் நிலம் கொடுத்தார். அதில் ஓர் கோட்டை கட்ட ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் நமது தமிழரசர் தங்கள் பிரிவினைகளினால் கீழாகவே, முகம் மதியர் நம் நாட்டைப் பிடித்து ஆண்டுக்கொண்டிருந்தார்கள். முகம்மதியருக்குள் பின்னாலே பிரிவினை யுண்டாயிற்று. ஆற்காடு நவாபாகிய சந்தா சாகிபுக்கும், திருச்சினாப்பள்ளி யிலிருந்த முகம்மதுஆலிக்கும் சண்டை யுண்டாயிற்று. இதைக் கவனித்த ஆங்கில வியாபாரிகள் நாட்டில் தங்களுக் குப் பங்குண்டாகவும், தங்கள் காரியம் க்ஷேமமாகவும் இது நற்சமயமென்று கண்டு பிடித்தார்கள். ஆங்கில வியாபாரி களைச் சேர்ந்த கிளைவ் என்றவனுக்கு ஓர் சமயோசிதமான யோசனை வந்தது. திருச்சினாப்பள்ளியில் ஆண்ட முகம்மது

ஆலியோடு உடன் படிக்கை செய்துகொண்டு, அவன் ஊரை முற்றுகைபோட்டுக்கொண்டிருந்த சந்தா சாகிபின் பிரதான நகராகிய ஆர்க்காட்டுக்கு விரோதமாகக் கிளேவ் பட்டாளத்தோடு போய், அவ்வூரைச் சூழ்ந்துகொண்டான். கிளேவ் கண்டுபிடித்த தந்திரம் இன்னென்றுமுண்டு. அதாவது நமது தேசத்து சுதேச சிப்பாய்களைக்கொண்டே நமது தேசத்தினரை அடக்கி வெற்றி கொள்வது. எப்படி நமது தேசத்தை அந்நியர் கைகொண்டார்கள் என்பதை விவரிக்கப் போனால் துக்கமும் வெட்கமுமே. என் நோக்கமும் சரித்திரம் எழுதுவதல்ல. ஆங்காங்கு யான் கூறுவதைத் தெளிவாக்கவேண்டிய சிற்சில சரித்திர சம்பவங்களை மாத்திரம் குறிப்பாக எடுத்துரைக்கிறேன்.

இந்த ஈஸ்ட் இண்டியா கம்பனிக்குத் தாழ்ந்துதொண்டு செய்ய குமாஸ்தர்க்கள் பலர் தேவையிருந்தது. இதற்கெல்லாம் இங்கிலாந்திலிருந்து ஆட்கள் கொண்டு வந்துமுடியுமா? அதிகத் தொகையான சம்பளமுள்ள வேலைக்கு மாத்திரம் சொந்த ஜனங்களை இங்கிலாந்திலிருந்து கொண்டு வந்தார்கள். இதுவுமல்லாமல், கிளேவ், வாரன்ஹேஸ்டிங்ஸ், என்ற முக்கிய ஆங்கில அதிகாரிகள் நமது தேச ஜமீன்கள், சிற்றரசர்களிடமிருந்து ஏராளமான லஞ்சமும் வாங்கி, பணத்தைத் திரட்டிக்கொண்டு, தங்கள் தேசம்போய்ச் சேர்ந்தார்கள். தங்களுக்குக் கிழமைந்து குமாஸ்தாக்களாய் ஏற்படுத்திய மனுஷருக்கும் ஆங்கிலக் கல்வி இல்லாவிட்டால் எப்படி தங்கள் ஆங்கில எஜமான்களின் குற்றேவல்களை இவர்கள் செய்ய முடியும்? பொது ஜனக் கல்வி அபிவிருத்தியைப் பிரதானமாகக் கருதியல்ல, தங்களுக்குக் குமாஸ்தாக்கள் வேண்டு

மென்றே ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் தொடங்கினார்கள். சுயநலத்தை நாடுவது வியாபாரிகளுக்கு இயல்புதானே எப்படித் தங்களுடைய இராஜ்ஜியத்தைப் பலமாய் இந்தியாவில் வேரூன்ற ஸ்தாபிக்கும்படி, பட்டாளங்களும், ஒரு முனே

---

*நான் சொல்வதைத் தப்பாய் அர்த்தம் செய்துகொள்ளவேண்டாம். மேல் நாட்டுப் பாஷை, சாஸ்திரங்களைப் படிக்கவேண்டாமென்று நான் சொல்லுகிறதில்லை. தற்காலங்களில் மேல்நாட்டிலும், பின்னும் மற்றதேசங்களிலும், கண்டுபிடித்திருக்கும் எல்லாவித நூதனமான சத்தியங்களையும், இயற்கைப் பொருள் அறிவையும், ஜட சாஸ்திரங்களையும், கவனத்தோடும் சிரத்தையோடும் நாம் கட்டாயம் படித்தறியவேண்டும். சத்தியம் எங்கே கண்டுபிடிக்கப் பட்டாலும் பூலோகத்தா ரெல்லாரும் அதையறிந்து அநுபவித்துக் கொள்ளும்படி எல்லாருக்கும் பொதுவே. நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறதாவது அந்நியநாட்டு வித்துவான்கள் பரிசோதனை செய்துகண்டுபிடித்த சாஸ்திர சத்தியங்களை நாம் நம்முடைய தாய் பாஷையில் மொழிபெயர்த்து, புஸ்தகங்களெழுதிக் கற்று, நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதினால்தான் கல்வி சாதாரணஜனங்களுக்குள் பரவி நாடு வாழச் செய்யும். ஆங்கிலம், ஹிந்தி பாஷைகளை இரண்டாவது பாஷைகளாகக் கற்றுக் கொள்ளலாம். தங்கள் பாஷை இந்தியாவில் உயர்தர கல்விக்குப் பிரதான சாதனமாயிருப்பதினால் முற்றிலும் நன்மையாகவேயிருக்கிறதென்று உண்மையாய் எண்ணுகிற சில ஆங்கில நண்பருமுண்டு. எனினும் கடந்த நூற்றாண்டில் பொது ஜனக் கல்வி விர்த்தியில்லாமல் ஜனங்கள் பரிதபிக்கப்பட்ட ஸ்திதியிலிருப்பதற்கு முக்கிய ஓர் காரணம் என்னவென்பதை கவனித்து உணராமல் இன்னும் கண்விழிக்காது சர்க்காரும் நமது தலைவரில் பலரும் அசட்டையாயிருப்பதுவே எனக்கு மிக வருத்தம்.



ஜவ்வாதுமலை வாசிகளுக்குள் தொண்டு செய்த ஆசிரமத் தொண்டர். இந்த மலைமேல் 32 கிராமங்கள். பள்ளிக்கூடம் கிடையாது. வைத்திய உதவியில்லை. "மலையாளிகள்" என்றழைக்கப்படும் இந்த ஏழை ஜனங்கள் உதவியின்று கஷ்ட ஜீவியம் செய்கிறார்கள்.



ஆசிரம பாடசாலை மாணவருடன் தொண்டர்கள்
வனபோஜனத்திற்காக செல்வது.



ஜப்பானில் ஒரு உயர்தரபாடசாலையிலுள்ள
1000 மாணவர்கள் தேகாப்பியாசம் செய்வது.
இங்கு கட்டாயப்படிப்பு.

யிலிருந்து இன்னெரு முனை துரிதமாகச் செல்ல புகைவண்டி களும், தங்கள் அரசியல் கடிதங்கள், சமாச்சாரங்கள் பரவ தபால் காரியாலயங்களும், மின்சார தந்திகளும் ஸ்தாபிக்க ஆரம்பித்தார்களோ, அப்படியே, சுயநலத்தை பிரதானமாக நாடியே, கம்பெனிக்காரர், ஆங்கில பாஷையில் படிப்பிக்க ஆரம்பித்தார்கள். மகாத்மா காந்தியின் பத்திரிகையாகிய "பாலிய இந்தியா"வில் 1929-ம் வருஷம், ஜனவரிமாதம், 17-ம் தேதி பிரசுரமான ஓர் கட்டுரையில் இவ்விஷயத்தைக் குறித்து நன்ருக விவரித்திருக்கிறது. அதாவது :—

1833-ம் வருஷம் ஜூன் மாதம், 15-ம் தேதி, ஆங்கில பிரபுக்களின் சட்ட சபை ஏற்படுத்தின ஓர் பஞ்சாயத்திற்கு முன் ஜே. சி. மார்ஷ்மன் என்பவர், இந்தியாவை தாங்கள் வசப்படுத்தின பின், ஈஸ்ட் இந்தியா கம்பனி தலைவருக்குள் இந்தியாவில் கல்வி விஷயத்தைக் குறித்து ஓர் தர்க்கம் நடந்ததைப்பற்றிப் பேசினர். அந்த கம்பனி தலைவரொருவர் சொன்னதாவது, "அமெரிக்கா தேசத்திலே நாம் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் உண்டாக இடங்கொடுத்த நமது மூடத்தனத்தினலே அமெரிக்காவை இழந்து போனேம். இப்படி நாம் இந்தியாவிலும், மூடத்தனமான காரியத்தைச் செய்துவிடக் கூடாது. இந்திய சுதேசிகள் ஏதாவது கல்வியை நாடினல், இங்கிலாந்து தேசத்துக்கு வரட்டும்."

1853-ம் வருஷம், ஜூன் மாதம், 23-ம் தேதி மக்காலேயின் மைத்துனராகிய சாள்ஸ் டிாவில்லியன் என்ற ஆங்கிலப் பிரபு ஆங்கிலப் பிரபுக்களின் சபை ஏற்படுத்திய பஞ்சாயத்தில், பின் வருமாறு சாக்ஷி பகர்ந்தார். அதாவது, "இந்திய

சுதேசிகளான இந்துக்களும் முகம்மதியரும் நம்மைத் தங்கள் தேசத்தைத் திருடிக்கொண்ட மிலேச்சர்களாக எண்ணுகிருர்கள். தங்கள் தேசத்தில் செல்வாக்கிலும் மேன்மையிலும் அவர்கள் முன்னேற அவர்களை நாம் தடுத்துவிட்டோமென்று எண்ணுகிருர்கள். ஆனல், நாம் சுதேசிகளை ஐரோப்பிய கல்வியில் பயிற்றுவித்தால் அவர்கள் மனமே மாறிப் போம். இந்திய சுதேசிகளில் இவ்விதமாக நாம் படிப்பித்தவர்கள் அவர்களின் பண்டையக்கால சுதேச முறைமைப்படி சுய ராஜ்ஜியம் வேண்டுமென்று விரும்பிப் பிரயாசமெடுக்க மாட்டார்கள். நமது மேல் நாட்டு அரசியல்களின் முறைமையையே மேலாக நாடி, நம்போல் குடியரசு முறைமையையே தாங்களும் கடைசியில் ஸ்தாபித்துவிட வேண்டுமென்று கருதி, தங்கள் சுயநாட்டு ஸ்தாபனங்களையும் மேல் நாட்டுமுறைமைக்கு ஒக்க மாற்றிவிட முயலுவார்கள். அப்போது சத்துருக்களாகவும், தேசத்தைப் பிடுங்கிக்கொள்ளுகிறவர்களாகவும், அல்ல; சிநேகிதர்களாகவும், ஆதரிக்கிறவர்களாகவும், தங்கள் நன்மையையே விரும்புகிற வல்லவர்களாகவும் நம்மை அவர்கள் நன்கு மதிப்பார்கள். அதாவது, சுதேசிகள் தங்கள் தேசம் முன்னேறிச் சீரடைய எவை நன்மையென்று எண்ணுகிருர்களோ, அவையெல்லாம் நம்முடைய அரசாட்சியின் ஆதீனத்திக்குள் படிப்படியாக நிறைவேறுமென்று அவர்கள் நம்புவார்கள். இந்துதேச பூர்வமுறைப்படி சுயராஜ்ஜியம் வந்தால் இவர்களுக்குப் பிரயோஜனமாயிராதென்று அவர்கள் அது நெடுங்காலம் தாமதிக்க வேண்டுமென்றே விரும்புவார்கள். அது வந்தால் அவர்களுக்குத்தான் (அதாவது ஆங்கிலக் கல்வி, நாகரீக

முறைப்படியே முற்றிலும் பயின்றவர்களுக்குத் தான்) துன் பம். சாதாரண ஜனங்கள் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களைக் கொள்ளை யிடுவார்கள். இதினுல் அவர்கள் நம் மையே சார்ந்துகொள்வது அவர்களுக்கு லாபமாயிருக்கும். இவ்விதமாக நம் ஆங்கிலக் கல்வியையும் நாகரீகத்தையும் தங் களுக்குச் சொந்தமாக்கிக்கொண்ட இந்த வகுப்பினரின் தொகை எவ்வளவுக்கு அதிகமாகிறதோ, அவ்வளவு அதிக மாக நம்மைச் சார்ந்து, நமது ஆங்கில அரசியல் கட்சியைச் சேருகிறவர்களும் அதிகமாவார்கள்.

1853-ம் வருஷத்தில் மேற்கூறிய சார்ள்ஸ் டிாவில்லியன் பிரபு, ஆங்கில சட்டசபைக்குச் செய்த மனுவில், இந்தியாவில் கல்வி விஷயங்கள் எவ்விதமாக அரசியல் விஷயங்களை மாற்றி விடும் என்பதைக் குறித்து பின்வருமாறு கூறுகிருர் :—

“ஆங்கில பிாஷையையும், அதில் எழுதிய சாஸ்திரங் களையும், நாம் இந்திய சுதேசிகளுக்குக் கற்றுக் கொடுப்பது இந்தியா இங்கிலாந்துக்குச் சொந்தமாயிருப்பதற்கு ஆதா வாயிருக்கும். நம்முடைய ஆங்கில சாஸ்திரங்களை யெல் லாம் கற்ற இந்திய வாலிபர் நம்மை அந்நியாாக எண்ணமாட் டார்கள். நாம் நம் ஆங்கில பெரியோரை எவ்வளவு அபி மானத்தோடு பாவிக்கிறேமோ, அப்படியே அவர்களும் பாவிப் பார்கள். நம்மைப்போலவே அவர்கள் படித்திருப்பதினுலும், நமக்கு எவ்விஷயங்களில் பிரியமிருக்கிறதோ, அதிலேயே அவர்களுக்கும் பிரியமுண்டாவதினுலும், நாம் எதை நாடித் தேடுகிறேமோ, அதையே அவர்கள் நாடித் தேடுவதினுலும், அவர்கள் இந்தியர்களாயிருப்பதைப் பார்க்கிலும் அதிகமாக நம்மைப் போல் ஆங்கிலராகவே ஆகிவிடுவார்கள். எப்படி

ரோம ராஜ்ஜியத்தின் கீழிருந்த அயல் நாட்டு ஜனங்கள் தங்கள் தேசீகக் கல்வி நாகரீகங்களை விட்டு விட்டு, ரோமர்போலானார்களோ, அப்படியே இந்த இந்திய சுதேசிகளும் நம்மைப்போலாவார்கள், நாம் ஏன் ஆங்கிலேயாயிருக்கிறோம்? ஆங்கிலேயரோடே ஜீவித்து, அவர்களோடேயே சம்பாஷணை செய்து, அவர்கள் அபிப்பிராயங்களையும், மனோபாவனை வழக்கங்களையும் எப்போதும் கிரகித்து, உட்கொள்ளுகிறதினாலல்லவா? அப்படியே தான் இந்த இந்திய சுதேசிகளும் செய்வார்கள். அவர்களும் நமது சிறந்த ஞானிகளான ஆங்கில வித்துவான்கள் எழுதின சாஸ்திரங்களின் மூலியமாக அவர்களோடு ஐக்கியப்பட்டு கலந்து வருவார்கள். இப்படிச் செய்வதினால் அவர்கள் நேராய் முக முகமா யறிந்தால் நம் தேசத்தாரைக் குறித்து அவர்களுக்குண்டாகும் அபிப்பிராயத்தைப் பார்க்கிலும், இப்படி நம்முடைய ஆங்கில சாஸ்திரத்தினால் நம் ஜாதியாரைக் குறித்து எண்ணும் எண்ணம் ஒரு வேளை அதிகமேன்மையாயிருக்கும். இந்தியாவில் நம்மைப்போல் கற்று, நமது அபிப்பிராயங்களையே உட்கொள்ளும் சுதேசிகளுக்குத் தான் மற்ற இந்திய பிரஜைகளைப் பார்க்கிலும் நாம் இன்றியமையாதவர்களாயிருப்போம். ஏனென்றால், சுய ராஜ்ஜியத்திற்கு அவர்கள் முற்றிலும் உதவாதவர்களாய்ப் போய்விடுவார்கள். சுதேசிகள் அரசாளுவதைக் குறித்து அவர்களுக்கு மிகுந்த பயமுண்டாகும். அவர்களின் ஆங்கிலக் கல்வியினால் அவர்களுக்குத் துன்பமே யுண்டாகும். இந்த வகுப்பினர் இப்போ சிறிய கூட்டந்தான். ஆனால் இப்போ ஆங்கில பாடசாலைகளில் படிக்கிற வாலிபர்கள் மூலியமாய் இவர்கள் தொகை அதிகரித்து வருகிறது.

கல்கத்தாவில் வேலை செய்த டாக்டர் டப் (Duff) என்கிற ஓர் பிரிட்டிஷ் மிஷனரி கல்லூரித் தலைவர் எழுதியதாவது :—

"ஓர் பாஷையானது ஜனங்களின் தேசீக மனக் கிளர்ச்சிகளையும் வழக்கங்களையும் மாற்றித் திருப்பி பக்குவப்படுத்துகிறதற்குப் பெரிய ஏது ? எவ்வளவுக்கு அந்த பாஷை அறிவு, ஞானம் முதலிய உயர் காரியங்களிற் சிறந்திருக்கின்றதோ, அவ்வளவுக்கதிகமாக இப்படிச் செய்யும். இப்படி பாஷைக்கிருக்கிற வல்லமையை நாம் அடிக்கடி கவனித்துக் கிரகித்துக் கொள்ளவில்லை. ரோமர்கள் ஓர் அயல் தேசத்தை வசமாக்கினபின், உடனே அதன் ஜனங்களை ரோமர்கள் போலாக்க சிரத்தையுடன் முயற்சி செய்வார்கள். அந்த அயல் நாட்டு ஜனங்கள் ரோமர்களாகிய தங்களின் சிறந்த பாஷையும் சாஸ்திரங்களையும் கற்றுக்கொள்ள ஆசிக்கும்படி வெகு பிரயாசம் எடுத்துக் கொள்ளுவார்கள். இப்படிச் செய்வதினால் தாங்கள் அடக்கிக் கீழாக்கின ஜனங்களின் மனதை முழுவதும் ரோமர் வசமாய்த் திருப்பி ஆதீனஞ் செய்து கொள்ளக் கருதி நோக்குவார்கள். இதனாலேயே ரோமர் காரியம் லாபமடைந்து விருத்தியாயிற்று."

இப்படியெல்லாம் ஆங்கில அதிகாரிகள் செய்து, ஆங்கில பாஷையை நமது தேசத்தில் பிரதான பாஷையாகத் திணித்து வெற்றியடைந்து விட்டார்கள்.

ஆங்கில பாஷையையே கல்விக்குப் பிரதான பாஷையாக்கும்படி ஆலோசனை சொல்லி மெக்காலே என்ற ஆங்கில சட்ட நிபுணர் எழுதினதாவது :—

"ஆங்கிலராகிய நமக்கும், இந்தியாவில் நம்முடைய அரசியலுக்குள் நமது பிரஜைகளாயிருக்கிற திரள் கூட்டத்திற்கும் மத்தியஸ்தராயிருந்து, நமது காரியங்களை யெல்லாம் அவர்களுக்கு விளக்கிக் காட்ட ஓர் வகுப்பினரை நாம் உண்டாக்க மிகச்சிரத்தையெடுக்க வேண்டும். இந்த வகுப்பினர் இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர்களாயிருந்தாலும், தங்களுடைய ஆசைகள் பாசங்களிலும், அபிப்பிராயங்களிலும், பேச்சிலும், புத்தியிலும், ஆங்கிலராகவே இருக்கச் செய்துவிட வேண்டும். ஓர் தேசத்தின் சுயபாஷையை அடியோடு ஒழித்துவிட்டால், அத்தேசத்தின் வம்சத்தையே அடியோடே அழித்துவிடலாம். ஏனென்றால், ஓர் தேச ஜனங்களின் தனித்தனி குணாதிசயங்கள், பேச்சு, எண்ணம், அவர்களுடைய உயிர் உய்தல் வாழ்க்கையுங்கூட, அவர்களுடைய பாஷையோடு வெகு ஐக்கியமாய் ஏக சம்பந்தப்பட்டிருக்கின்றன."

கடைசியாக, 1854-ம் வருஷம், இந்திய கல்வி விஷயமாக ஆங்கில அதிகாரிகளால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட ஓர் கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறதாவது :—

"நாம் இந்தியாவிற்குக் கற்றுக் கொடுக்கிற படிப்பின் மூலமாக இங்கிலாந்து தேசத்தில் யந்திர சாலைகளில் வேலைக்கு வேண்டிய பொருள்களும், நாம் செய்த வஸ்துக்களை ஏராளமாக விலைக்கு வாங்க ஜனங்களும், நம்முடைய சொந்த ஜனங்களின் ஆகாரத்துக்கு வேண்டிய தானியங்களும் நமக்குக் கிடைக்கும்," என்பது.

"வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததி நோக்கத்திற்கிசைய

நடந்து கொள்ளுவதில் யுக்தியுள்ளவர்களே" என்று வேத மொழி சொல்லுவதும் எவ்வளவு சத்தியமென்பது இதினால் தெளிவாய்ப் புலப்படுகிறது. ஆங்கில சக்கரவர்த்தாதீனத்தை இந்தியாவில் பலமாய் ஸ்தாபனஞ் செய்யவும், அவர்கள் அரசியல் நாகரீகங்களை உலகத்தில் பரவச் செய்யவும், எத்தனை சாமர்த்தியமாய், எவ்வளவு தந்திரமாய், ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னே இவர்கள் யூகமாய் ஆலோசித்திருக்கிறார்கள். அரசியல் தந்திரத்தில் தீர்க்கதரிசிகளாக விளங்கி, பின் நடக்குங் காரியங்களை முன்னேயே கண்டு விட்டார்களே. இவர்கள் வேதத்தில் கூறிய அநீதியுள்ள உக்கிராணக் காரனின் யூகத்திற் கொப்ப, லௌகீக விவேகிகளாய் நடந்து கொண்டது ஓர் வகை ஆச்சரியமும் பிரமிப்பும் நமக்குள்ளே உண்டாக்குகின்றது. இவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னே கூறியதெல்லாம் அவர்கள் சொன்னபடியே நிறைவேறலாயிற்றே. இவர்கள் தீர்க்கதரிசிகள் தான். ஆனால் பரலோக ராஜ்ஜிய தீர்க்கதரிசிகளல்ல. இந்த உலகத்தின் அதிபதியின் சக்கரவர்த்தாதீனத்தின் தீர்க்கதரிசிகளே. தங்கள் தங்கள் சொந்த இராஜாங்கத்தையே வேரூன்ற அஸ்திபாரம் போட்டு ஸ்தாபித்து விட்டார்கள். ஆனால் நமக்கோ அதிலுண்டான பலனென்ன? கோடிக்கணக்கான நமது ஜனங்கள், கடவுளுடைய மக்கள், மானிட தத்துவத்தையும், சுதந்திரத்தையும் இழந்து விட்டார்கள். அந்தோ! அவர்கள் ஏற்படுத்திய ஆங்கில பாஷையின் மூலமாய் கல்விகற்று நிறத்திலும் இரத்தத்திலும் இந்தியர்களாயிருந்தாலும், நினைவிலும், உணர்ச்சியிலும், பேச்சிலும், ஆசாபாசங்களிலும் "கறுப்பு ஆங்கிலேயர்" ஆகிய

நம்மில் சிலரை யுண்டு பண்ணிவிட்டது. உயர் கல்வி படித்த சொற்பப் பெயராகிய நாம் ஆங்கிலத்திலேயே எல்லாவற்றை யுங் கற்றிருப்பதால் நம்மைப்போல ஆங்கிலங் கற்றவர்க ளாகிய சொற்பப்பேரோடு மாத்திரந்தான் பேசவும், கலந்து சகவாசஞ் செய்யவும் விரும்புகிறோம். நம் தாய்ப் பாஷை யைப் பேசுகிற ஏராளமான ஜனத்திரளாகிய கிராமவாசிக ளோடு சகவாசஞ் செய்யக் கிஞ்சித்தேனும் வாஞ்சை யில்லை. அந்நிய பாஷையின் மூலமாய் நாமடைந்த உயர் கல்வி, லட்சக் கணக்கான நமது சுயஜனமாகிய கிராமத் தாருக்கும், ஆங்கிலக் கல்வி பெற்ற சொற்பப்பேராகிய நமக்கும், பெரிய பிரிவினை யுண்டாகச் செய்துவிட்டது. நாம் கற்றதை நமது ஜனங்களும் நாமும் சேர்ந்து அநுபவிக் கக்கூடாதவர்களாய்ப் போய் விட்டோம். மேலும், ஓர் அந்நிய பாஷையை முதலாவது சிரத்தையோடுங் கஷ்டத் தோடும் படித்து, அந்நிய பாஷையின் மூலமாய்ச் சகல சாஸ்திரங்களையுங் கற்றுக்கொள்வதினால் எவ்வளவு சரீர க்ஷீணிப்பும் மனக்களைப்பும் உண்டாகு மென்பதை இலகு வாய் நிதானித்துக் கொள்ளலாம். இதனால் நம்முடைய பாலியர்களும் தங்களுக்குத் தெளிவாகக் கருத்து விளங்காத பொருள்களைக் கிளிப்பிள்ளை போல மனப்பாடமாகப் பாரா மல் படிக்க நேரிடுகிறது. ஆங்கிலக் கல்வி கற்ற நாமும் அந் நிய பாஷையானதால் ஒரு நாளும் அதில் நிபுணர்களாக முடி யாது. "அதிகம் படித்துவிட்டோம், ஆங்கிலத்தில் தேறி விட்டோம்". என்று கௌரவமாக மகிழும் நாம் பேசுகிற ஆங்கிலப் பேச்சும், உண்டாக்குகிற காவியங்களும் வாசகங் களும் ஆங்கில சாஸ்திரிகள் முன் அரங்கேற மாட்டாது.

சுயபாஷையிலும் நமது சுதந்திரத்தை இழந்து விட்டோம். அந்தோ! நாம் அங்குமில்லை, இங்குமில்லையென்று இடை வழித் தட்டாய்ச் சீரழிந்தோம்.

என்றாலும் எப்படித் தங்கள் அரசியலுக்கு உதவியா யிருப்பதையே பிரதானமாய் சர்க்கார் கையாடி முதலில் ஏற் படுத்திய புகைவண்டி, தபால் முதலியவை நமக்கும் நன்மை யாய் திரும்பிற்றோ அவ்வாறே எல்லாம் வல்ல இறைவனின் கிருபையினாலே இந்த அந்நிய பாஷையுங்கூட நமக்கு ஒரு விஷயத்தில் உபயோகமாயிருந்திருக்கிறது. இந்தியாவின் மற்ற மாகாணங்களோடு போக்கு வரவு பேச்சுக்கு உதவியா யிருந்திருக்கிறது. இதினால் எவ்வாறு பகவான் பூலோக சம்பவங்களை தமது மக்களின் நன்மைக்கென்றே தடுத்தாண்டு நடத்தி வருகிறானென்பது தெளிவாகும்.

நமது அந்நிய அதிகாரிகளின் மேலேயே மாத்திரம் குறைகூறி விட்டுச் சும்மாயிருப்பதுந் தகுதியல்ல. உலக மக்கள் வியாபாரிகள் செய்வதுபோல, அவர்கள் நடந்து கொள்வது மானிடர் இயல்பே.

நமக்கு அதிகமாக வெட்கமுந் துக்கமுண்டாக்கத் தக்க வேறொரு காரியமுண்டு. ஆங்கிலம் நமது தேசக் கல் விக்குச் சாதனமான பாஷையாக விளங்க வேண்டுமென்று வைராக்கியமாய்க் கூறுகிற இந்திய மஹான்களைக் குறித்து நான் என்ன சொல்வேன்! ஓர் அடிமை கட்டுண்டு சுயா தீனத்தை இழந்த தன் ஸ்திதியை அறிந்து உணருமட்டும் அவனுக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் அவனுடைய எஜமான்

தன்னுடைய சாமர்த்தியத்தினால், அந்த அடிமையின் மேல் போட்டிருக்கும் விலங்கு, ஓர் அலங்காரமும், சுகந்த வாசனை யுமான பூமாலை யென்று அந்த அடிமை நம்பும்படி செய்து விடுவானானால், அந்தோ! அவன் கதி நாசமே. ஆனாலும், மேலே நான் விவரமாய்க் காட்டியபடி, இந்த ஸ்திதிக்கு நாம் வந்தது நம்முடைய சுயசித்தமல்ல. அந்நிய அரசியல் நம் மேல் அதிகாரஞ் செலுத்தி ஆளுமட்டும் அவர்களுடைய அந்நிய பாஷைதான் ராஜாங்க பாஷையாகவும் பெரியோர் கள் பாஷையாகவும் மேன்மையும் கௌரவமுமாகத் துலங் கும்படி செய்வார்கள். ஆனால், படித்த நம்மையும் படியாத கோடிக் கணக்கான நம் சுய ஜனங்களையும் பிரித்து, படித்த நாம் சுய ஜனங்களுக்கே நாம் அந்நியராகப் போகும்படி செய்துவிடுகிற இந்த ஏற்பாட்டை ஏதும் செய்ய ஏலாத நாதமற்றவர்கள் போல் தலை வணங்கி ஏற்றுக்கொண்டு சும்மா இருந்து விடுவது தகுதியோ? யோசித்துப் பாருங்கள். நான் எழுதுவதை விசேஷமாகக் கிராமவாசிகளாகிய கோடிக் கணக்கான என் சுய ஜனங்களாகிய உங்களுக்கே பிரதான மாக எழுதுகிறேன். நமது நாட்டின் முன்னேற்றமும், சீரமைப்பும், பூலோகத்தில் மகிமையாக வாழும் புறத் தேச ஜனங்கள் போல் நாமெல்லோரும் மேன்மையாக வாழச் செய்வதும், உங்களால் நடக்கப் போகிற காரியமே. கிராமவாசிகளான நீங்களெல்லாரும் தேச பக்தராகி, உங் கள் அற்ப சுயநலத்தை நாடாமல் பொது ஜன நன்மை யையே பிரதானமாகக் கையாடி, முன்னின்று காரியங்களை நடத்தும்போது தான் நமது நாடு பாக்கியமுஞ் செல்வாக் குரிமையும் அடையும். படித்த சொற்பத் தொகையுள்ள

நாங்கள் சிலர் மாத்திரம், ஓர் வனாந்தரத்திலே தனியே ஓலமிடுபவர் போல், தவித்துத் தியங்குவதினால் என்ன கை கூடும்? ஆங்கிலக் கல்வி பெற்ற எங்களில் அநேகர் தமக் கானதையே நாடுகிறோம். நீங்கள் வரி கொடாவிட்டால் நாங்கள் படிக்கிறதற்கு உயர்தரப் பாடசாலைகளும், கலா சாலைகளும், உயர்ந்த உத்தியோகங்களும் எங்கிருந்து உற்பத்தியாகும்? பலருக்கு மனச்சாட்சியே மழுங்கிப் போனது போல் தோன்றுகிறது. குடிக்கக்கூடக் கூழில்லாமல் வருந்திச் சர்க்கார் வரி கட்டுகிற ஜனங்களின் பணங்களைச் சேர்த்து, பெரிய பெரிய உத்தியோகங்களும் அதிக சம்பளங்களும் ஏற்படுத்த எப்படித்தான் மனம் வருகிறதோ. ஒரு மனிதனுக்கு தினசரி மூன்றணு வரும்படி வருஷ முழுவதும் தவறாமல் கிடைப்பது கஷ்டமாயிருக்கும் இந்த தேசத்தில் இப்படிப் பெரிய சம்பளம் சம்பாதிக்க விரும்புவது பாவமன்றோ? ஐயோ! இதையெல்லாம் நினைத்து மனம் உருகாதோ? நம்முடைய தேசத்தில் சென்னை இராஜதானி கவர்னருக்கும் அவர் பரிவாரத்துக்கும் மாத்திரம், ஒரு வருஷத்துக்குச் சம்பளம் மூன்றரை லக்ஷம் ரூபா. இந்தியாவில் இராணுவ உத்தியோகஸ்தர்கள் சிப்பாய்களுக்காக வருஷத்திற்கு 55 கோடி ரூபாய் செலவு. இந்தியா பெரிய தேசம். அதனால் பெரிய சம்பள மிருக்கவேண்டும் என்ற வெறும் பெருமைப் பேச்சினால் சமாதானஞ் சொல்ல ஆரம்பிப்பது நீதியல்ல. இந்தியா பெரிதாயிருந்து விட்டதினால் குடியானவன் நிலத்தில் அதிகப் பயிர் விளைந்து விடுகிறதோ? நாடு பெருத்தாலும் சிறுத்தாலும் குடியானவனின் தரித்திரமும் பட்டினியும் மாறாது நிற்கின்றன.

உத்தியோகஸ்தர்களுக்குப் பெருஞ் சம்பளங் கொடுத்தால் தான் லஞ்சம் வாங்க மாட்டார்களென்று சமாதானஞ் சொல்வது சரியல்ல. சம்பளம் உயர உயர பண ஆசையும் மிஞ்சி, அதிக லஞ்சம் வாங்குதலுமில்லையோ? பணம் வாங்குவதுதானு லஞ்சம். உயர்தரமான பரிசுகள் வாங்குகிருர்களே, அது லஞ்சமன்ருே? பரிசு, பண ஆசைக்கு ஆளாகக் கூடியவனை பெரிய சம்பளங் கொடுத்துத் தடுத்து உத்தமனுக்கிவிட முடியுமோ?*

இந்தியாவில் உத்தியோகம் செய்து பென்ஷன் எடுத்துக்கொண்டு இங்கிலாந்திற்கு திரும்பி போய்விட்ட ஆங்கில உத்தியோகஸ்தருக்கு பென்ஷனுக மாத்திரம் போகிற பணம் வருஷத்திற்கு கொஞ்சம் குறைய $2\frac{3}{4}$ கோடி ரூபாய் என்று இந்து பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறது. (8–11–1929)

கடுந்தரித்திரத்திலிருந்து குடியானவன் கொடுக்கிற வரியைச் சேர்த்துப் பெரிய சம்பளங்கள் ஏற்படுத்துவது அவன் இரத்தத்தை குடிப்பதற்குச் சமானமாகும். இந்தப் பெரிய சம்பளமெல்லாம் தினசரி மூன்றணுவுக்குக் கூட வழியில்லாத இந்தக் குடியானவன் வரியைச் சேர்த்துத் தானே கொடுத்துத் தீரவேண்டும். இதுவும் போதாதென்று சர்க்கார் தங்கள் சிலவுக்காக 900 கோடி ரூபாய் கடன் வாங்கியிருக்கிருர்கள். இதில் 400 கோடி ரூபாய்

---

* சர்க்கார் செலவுகள்—வருஷத்திற்கு பட்டாளத்திற்கு 55 கோடி. பொது உத்தியோகங்கள், போலீஸ் முதலியன (பென்ஷனைக் கூட்டாமல் $40\frac{1}{2}$ கோடி) கல்விக்காக 13 கோடி. (பட்டாளச் செலவில் கால் பங்கு)

ஆங்கில தேசத்திலிருந்து கடன் வாங்கி யிருக்கிறார்கள். இந்தக் கடன் வட்டியெல்லாம் கடைசியாகக் கொடுத்துத் தீர்க்க வேண்டியது குடியானவர்கள் தானே.

இது நிற்க, நான் இங்கு பொது ஜனக் கல்வியைக் குறித்து எழுதும்போது, மேற்கூறிய விஷயமும் ஞாபகத்திற்கு வந்ததால், நான் எழுதுகிற பொருளுக்குச் சம்பந்தப் படாவிட்டாலும், அதையும் சொல்லிவிட்டேன். இன்னுஞ் சில காரியங்களைக் கல்வி விஷயமாகக் கூறி, இந்த அதிகாரத்தை முடிக்க விரும்புகிறேன்.

இந்தியாவில் பல பாஷைகளுண்டு. அதனால் ஆங்கில பாஷையில்தான் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டுமென்று சிலர் ஆக்ஷேபிப்பார்கள். இந்தியாவுக்குள் மெய்யான ஐக்கியமுண்டாக வேண்டுமானால் சாதாரண ஜனங்கள் கல்வி கற்று முன்னேற்ற மடைவதினால்தான் மெய்யான ஐக்கியமுண்டாகும். நம்மில் பல மாகாணங்களிலுள்ள சிற்சிலர் மாத்திரம் பொது பாஷையாக ஓர் அந்நிய பாஷையில் சகல சாஸ்திரங்களையுங் கற்றுக் கொள்வதினால் அந்த தேசீக ஐக்கியம் ஏற்படாது. இந்த மாகாணத்தில் சொற்பப்பேரும் அந்த மாகாணத்தில் சொற்பப்பேரும், இப்படிச் சிலருக்குள் மாத்திரம் இருக்கும் ஐக்கியம் மெய் ஐக்கியமாகுமோ? அதுவுமல்லாமல், ஆங்கிலத்தில் படித்த நம்மை நமது தாய்ப்பாஷையைப் பேசுகிற கோடிக்கணக்கான ஜனங்களிலிருந்து பிரித்துவிடுகிற பாஷை எப்படித் தேசீக ஐக்கியத்தை உண்டுபண்ணும்? தமிழனாகிய நான் ஓர் வங்காள சகோதரனோடு ஐக்கியமாயிருப்பதையே பிரதானமாய் நாடி, என் உடன் தமிழருக்கு

என்னை முற்றிலும் அந்நியனுக்கும் பாஷையைப் பிரதானமாகத் தழுவினால் அதனால் எனக்கு என்ன லாபமுண்டு? தாய் பட்டினியாய்க் கிடக்க ஊராருக்கு அன்னதானம் பண்ணுவது போலாகுமல்லவா? இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பாகத்திற்கும் தத்தம் தாய்ப் பாஷையைத் தவிர எல்லாரும் ஒரு பொதுப் பாஷைக் கற்றுக்கொள்வது உசிதமே. ஆனால், அதற்காக 8000 மைல் தூரத்திலுள்ள ஓர் தேச ஜனங்கள் பேசுகிற ஒரு பாஷையைத்தானா தெரிந்து கொள்ள வேண்டும்? நமது சொந்த தேசத்திலேயே பத்துக்கோடிக்கு மேலாக ஏராளமான ஜனங்கள் பேசுகிற ஹிந்தி பாஷையை ஏன் பொதுப் பாஷையாகப் படிக்கக்கூடாது? ஒரு வேளை இதரதேசங்களோடு வியாபாரம், கல்வி முதலியனவற்றிற்காகப் பிரயாணஞ்செய்வோர் ஓர் ஐரோப்பிய பாஷையைக் கற்றுக் கொள்ளுவது பிரயோஜனமாயிருக்கலாம். அப்படி இதர நாடு செல்வோர் சொற்பப் போய்த்தான் இருக்குமாதலால், மேல் நாட்டுப் பாஷைகளைக் கற்பது எல்லாருக்கும் அவசியமிருக்காது. ஆனால் ஹிந்தியோ மற்றும் ஏது இதர பாஷையோ கற்றாலுங் கற்காவிட்டாலும், எல்லாவற்றிற்கும் மேலாக தாய்ப் பாஷையிலேயே சகல சாஸ்திரங்களையுங் கற்று முன்னேற்றமடைவதே பொதுவாகச் சாதாரண ஜனங்களுக்கு நன்மையாகும்.

சிலர் இன்னொரு விதமாய் ஆக்ஷேபிக்கலாம். தற்காலத்தில் மேல் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு, வித்துவான்களால் பரிசோதனை செய்து விருத்தி செய்யப்பட்டிருக்கின்ற சகல விஞ்ஞான சாஸ்திரங்களையும் நம் தேச பாஷைகளில் மொழி பெயர்ப்பது கஷ்டம் என்று கூறலாம். ஏன் மொழி

பெயர்க்க முடியாது? கடந்த ஐம்பது வருஷங்களில் ஜப்பான் தேசம் எவ்விதத்தில் மேல் நாட்டு சாஸ்திரங்கள், யந்திரங்களெல்லாம் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டு விருத்தியடைந்திருக்கிறது? கடந்த பத்து வருஷங்களில் சீன தேசமும் மேல் நாட்டு வைத்தியம் முதலிய சகல சாஸ்திரங்களையும் சுய பாஷையிலேயே அத்தேச மாணவர் கற்கும்படிச் செய்துவிட்டதே. யூதர்களின் வேதமாகிய பழைய ஏற்பாடு முற்றும் வித்தியாசமான எபிரெயு பாஷையில் ஆதியிலெழுதப்பட்டிருந்தாலும், பூலோகத்திலுள்ள பாஷைகளிளெல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு, சர்வ தேசத்தாருக்கும் சொந்தமாகிவிட்டதே. அப்படியே இயேசு நாதர் பலஸ்தீன நாட்டின் பூர்வ பாஷையாகிய அரமேய்க் பாஷையில் பிரசங்கித்த சத்தியங்களை இப்பூலோகத்தினர் தங்கள் தங்கள் பாஷைகளிலே மொழி பெயர்த்து, அநுசரித்து வாழ்கிறார்களே. அழியாத நித்திய பரம சத்தியங்களை இப்படிச் சகல பாஷைகளுக்குள்ளும் மொழி பெயர்க்கக் கூடுமானால், அழிந்துபோகிற அநித்தியமான இப்பூலோக ஜடப் பொருள் சாஸ்திரங்களைத்தானா அப்படிச்செய்ய முடியாது? கடவுள் சிருஷ்டித்த இயற்கையின் இரகசியங்களையும் மகிமையையும் அதிசய காரியங்களையும் கற்றறிந்து, மானிடர் தங்கள் தங்கள் சுய பாஷையிலேயே பகவானின் திரு நாமத்தை பூசித்துப் போற்ற வேண்டும் என்பது அவர் அன்பின் சித்தமன்றோ? மேல் நாட்டுப் பாஷைகளினால் மாத்திரந்தானா அவ்வறிவு உண்டாக வேண்டுமென்று எல்லாம் படைத்த இறைவன் தீர்ப்பிட்டிருக்கிறார்?

தற்காலத்தில் அவசியமாக நடக்க வேண்டிய காரியம் ஒன்றுண்டு. நம் இந்திய தேசம் இப்பொழுது பிரிக்கப்பட்

டிருக்கிற முறை சரியல்ல. இன்னொரு விதமாய், தமிழ் நாடு, ஆந்திரம் (தெலுங்கு நாடு), கர்நாடகம் (கன்னட மாகாணம்), கேரளம், மஹாராஷ்டிரம், முதலியனவாகப் பாஷை மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும். தாய் பாஷையே இம்மாகாணங்களின் அரசியல், உயர்தரக்கல்வி, முதலியனவற்றுக்கு உபயோகிக்கவேண்டும். இந்தியா கொஞ்சங்குறைய ஐரோப்பா அவ்வளவு விஸ்தீரணமுள்ளதென்ற சத்தியத்தை மறந்துவிடக்கூடாது. இவ்வளவு விஸ்தாரமுள்ள ஓர் கண்டம் போன்ற இத்தேசத்து 35 கோடி ஜனங்கள் ஒரே பாஷையைத் தாய் பாஷையாகப் பேசும் நாள் வரைக்குங் காத்திருக்கவேண்டுமென்பது பைத்தியம். மேலும் இந்தியாவில் ஒவ்வொரு பிரதான பாஷையைப் பேசுகிறவர்கள் ஐரோப்பாவின் பல நாடுகளிலுள்ள ஜனங்களைப்பார்க்கிலும் அதிகத்தொகையினர். தமிழ் பேசுகிறவர்கள் மாத்திரம் இரண்டு கோடிக்குமேல் தமிழ் நாட்டிலிருக்கிறார்கள். இதர தேசம் குடியேறிப் போனவர்களையுஞ் சேர்த்தால் இரண்டரைக்கோடி போலிருப்பார்கள். வங்காள பாஷை பேசுகிறவர்கள் ஏறக்குறைய ஐந்து கோடி பேரிருக்கிறார்கள். இதனால் பாஷை மாகாணங்களாக இந்தியாவைப் பிரிப்பது பற்பல சிறிய நாடுகளாய்ப் பிரித்துவிடுவதாகாது என்றறியலாம். உயர்தரக் கல்வி ஆண்கள் பெண்களெல்லாருக்கும் அவசியம். கைத்தொழில், விவசாய வேலை முதலியன செய்பவருக்கும் பொது அறிவு, கல்வி, இருக்கவேண்டும். வயிற்றுப் பிழைப்புக்காக அல்ல. மனுஷீக அபிவிருத்தியைப் பிரதானமாக நாடியே கல்வியைக் கையாடவேண்டும். உயர்தரப் பாடசாலைகளில் படிக்கிற படிப்பு இதற்கு ஆதரவாயிருக்கும்படி மாற்றப்பட வேண்டும். சகல சாஸ்திரங்



ஜவ்வாதுமலையில் ஒரு தூரகிராமத்தில் தொண்டுசெய்ய ஆசிரமத் தொண்டர் புறப்படுகிறது.



"அதிர்ச்சிப்படை"த் தொண்டர். ஆசிரமத் தொண்டர்களும், கிராமச் சிறுவரும் ஊர் சாக்கடை சுத்தம் செய்ய ஆயத்தமாய்ச் செல்வது. படித்தவர்கள் சாக்கடை சுத்தம் செய்வது கிராமத்தாருக்கு அதிர்ச்சியுண்டாக்குவதால் இப்பெயர் வழங்கியது.



ஆசிரம வைத்தியசாலையில் குஷ்டரோகிகளுக்கு ஊசி மருந்தேற்றுவது. இந்தியாவில் 10 லட்சம் குஷ்டவியாதிகாரர் போலிருக்கிறார்கள்.



சம்பளமில்லாமல் சுயேட்சையாக கிராமத் தொண்டு புரியும் திருப்பத்தூர் ஆசிரமத் தொண்டர்களும், பார்க்கவந்த மேல்நாட்டு நண்பர்களும்.

களேயும் சுய பாஷையிலேயே படிக்கிறதுமல்லாமல் ஐரோப்பா வில் உயர்தர பாடசாலேகளில் (ஹை ஸ்கூல்) ஏற்படுத்தியிருக் கிறபடி, சாதாரணமாய் எழுதப் பேச தெரியும்படி இதர பாஷைகளில் இரண்டொன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, ஓர் தமிழ் மாணவன் தெலுங்கு அல் லது மலேயாளம் படித்துக் கொள்ளலாம். இந்தியாவுக்குப் பொது பாஷையாக ஹிந்தியுங் கற்றுக்கொள்ள வேண்டும். மேல் நாட்டுக்குப் படிக்க போகிறவர்களும் ஆங்கிலம் பேசு கிற தேசங்களுக்கு மாத்திரம் போய் வருவது நன்கன்று. ஏனென்றால், ஜெர்மெனி, பிரான்ஸ், முதலிய இதர ஐரோப்பிய நாடுகள் சிற்சில சாஸ்திரங்களில் ஆங்கில நாட்டைப் பார்க் கிலும் சிறந்திருக்கின்றன. முன் கூறியபடி, இப்படி அயல் நாடு சென்று படிப்பது அவசியமேயாயினும் மிக சொற்பப் பேர்தான் அப்படிப் போகக்கூடும்.

தமிழ் பாஷையை தமிழ்நாட்டு அரசியல் பாஷையாக்கி விடுவதே இப்போது அவசியமான காரியம். தேசம் சுதந்திர மடைய முயற்சி செய்யவேண்டும். மேற் கூறியவைகளெல் லாம் ஓர் க்ஷணத்திலே ஆகிவிடுமென்று கூற நான் மூட னல்ல. மிகுந்த பிரயாசத்தோடும், கஷ்டத்தோடும், பொறுமை யோடும் இதற்காக அதைரியப்படாமல் உழைக்க வேண்டும். ஐயோ ! இது யாரால் முடியுமென்று திகைத்து, கஷ்டங்களி னிமித்தம் அதைரியப்பட்டு, தளர்ந்து நழுவிப் போகிற வர்கள் இக்காலத்தில் நமது தேசத்தின் மெய்த்தொண்டர்கள் ஆகமாட்டார்கள். "ஊக்கமது கைவிடேல்." கடவுளின்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு, சத்தியம் ஜெயங்கொள்ளும் என்

கிற விசுவாசத்தால் என்ன நேர்ந்தாலும் அசையாமல் உற்சாகமாய் ஊழியஞ் செய்கிறவர்களே கடைசியில் வெற்றி வீராக விளங்குவார்கள். ஒரு வேளை நம் காலத்தில் நமது ஊழியத்தின் பலனைக் கண்ணாரக்கண்டு மகிழ நமக்குக் கிடையாமற் போகலாம்; என்றாலும் என்ன? நமது மக்கள் பாக்கியம் நமது பாக்கியமன்றோ? நாம் கஷ்டம் அநுபவிக்கவும் நமது மக்களாகிய பின் வருஞ்சந்ததியார் தேசீய சுதந்தரம், பாக்கியமடைந்து வாழும்படியும் பகவான் சித்தங்கொண்டால் அதற்காக நாம் வருத்தமடையலாமோ? பிள்ளைகளுக்காக வல்லவோ பெற்றோர் பிழைக்கிறார்கள்? என்றாலும் பலனைக் கண்ணாரக் காணாமல் தேசத்திற்காக உழைப்பவர்களின் பெயர் ஒருக்காலும் மங்காது. இச்சடலத்தை நாம் களைந்து ஈஸ்வரனின் மோட்சபதியடைந்த பின்னரும் கூட ஆத்மீகப் பிரகாரமாக நமது மக்களோடு ஐக்கியப்பட்டு அவர்கள் சந்தோஷத்தில் நாம் பங்கு பெறுவோமென்பது சத்தியம். அவர்களும் தங்களின் முற்பிதாக்கள் சுயநலத்தை நாடாமல் தேச வாழ்வுக்கென்று செய்த தியாகத்திற்காக ஆண்டவனைப் புகழ்ந்து போற்றுவார்கள்.

1930—31-ல்

| | |
|---|---|
| கல்வி ஸ்தாபனங்கள் மொத்தம் | 262,068 |
| படிக்க வருபவர் | 12,689,086 |

1036 பேருக்கு 1 ஸ்தாபனமாகிறது.

| | |
|---|---|
| ஆரம்பக் கல்விச் சாலைகள் | 204,384 |
| கல்வி பெறுபவர் | 9,362,748 |

1329 பேருக்கு 1 ஸ்தாபனம்.

கல்வி பெறுபவரின் 100க்கு விகிதம் (மொத்த ஜனத்தொகையில்)

| | | |
|---|---|---|
| இந்தியாவில் | 4½% | 22 ஆளுக்கு ஒருவர் |
| பிரிட்டனில் | 18% | |
| ஜப்பானில் | 19% | |
| அமெரிக்காவில் | 24% | 4 ஆளுக்கு ஒருவர் |
| ரஷியாவில் | | 6 „ |

## கல்விக்காகச் செலவு 1930—31-ல்

பிரிட்டிஷ் இந்தியாவில் 28¼ கோடி ரூபாய்.

(இதில் பரோபகார சிந்தையாய் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்தவ மிஷன்கள், பெரியோர்கள் ஸ்தாபித்த பள்ளிக்கூடச் செலவுகளும் அடங்கியிருக்கும். எல்லாம் சர்க்கார் செலவல்ல.)

மாணவர் ஒருவருக்கு இவ்விகிதப்படி 22 ரூபாய் விழுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஜப்பானில் | ஒருமாணவனுக்கு | 58 | „ |
| பிரிட்டனில் | „ | 172 | „ |
| கனடாவில் | „ | 199 | „ |
| அமெரிக்காவில் | „ | 275 | „ |
| ரஷியாவில் (5 வருடத் திட்ட முடிவிற்குப்பின்) | „ | 158 | „ |

## 1930—31-ல் இந்தியாவில்

| | |
|---|---|
| விவசாயக் கல்லூரிகள் | 8 |
| யந்திரக் கல்லூரிகள் | 7 |
| வியாபாரக் கல்லூரிகள் | 7 |

வியாபார, கைத்தொழில் துறைகளில் படிப்புப் பெறுபவர்

| | |
|---|---|
| இந்தியாவில் (1931-ல்) | 94,610 |
| ஜப்பானில் | 1,586,062 |

ஆனால் ஜப்பானின் ஜனத்தொகை எங்கே?
இந்தியாவின் ஜனத்தொகை எங்கே?

| பத்திரிகைகள் | லட்சம் பேருக்கு |
|---|---|
| இந்தியாவில் | 126 |
| அமெரிக்காவில் | 172 |
| ஜப்பானில் | 155 |
| கனடாவில் | 158 |

| | |
|---|---|
| வெளியான இதரப் பாஷைப் புத்தகங்கள் | 2553 |
| தாய்ப் பாஷையில் | 14084 |

10 வருஷத்திற்குமுன் ரஷியா தேசத்தில் 100-க்கு 17 பேர்தான் எழுத்து வாசிப்பறிந்தவர்கள். இப்போது 100-க்கு 83 பேருக்கு எழுத்து வாசிப்பறிவுண்டு. ரஷியா 1584 கோடி ரூபாய் கல்விக்காக செலவழிக்கிறது. அதாவது ஜனத்தொகையில் ஆளுக்கு ரூபாய் 158 வீதம். ஆனால் இந்தியாவிலோ ஆளுக்கு ரூபாய் 1 வீதம்தான்.

## ஒலி பரப்பும் கருவிகள்.

ஒலி பரப்பும் கருவிகள் (ரேடியோ) இந்தியாவில் ஏற்படின், எவ்வளவோ அறிவு பரவச்செய்யலாம். கல்வி, வியாபாரம், விவசாயம் முதலியவற்றைப் பொருத்த விஷயங்களை ஒரு மத்திய நகரினின்று சுற்றியிருக்கும் கிராமங்கள், நகர்களுக்கு அறிவிப்பது அதிக அவசியம். ஆங்கிலத்திலல்ல சுய பாஷைகளில் இவை ஏற்படவேண்டும்.

400 பேர்களடங்கிய 500 கிராமங்களுக்கு ஒரு மத்திய ஒலிபரப்பும் (ரேடியோ) ஸ்தாபனம் வேண்டும். அதற்கு

வருடம் 150 ரூபாய்க்கு மேல் செலவாகாது. எழுத்து வாசிப்பு அறியாத ஜனங்களுக்கு ஒளிச் சித்திரப் படங்களைக் காட்டி கண்கள் மூலமாயும், ஒலி பரப்பச்செய்யும் கருவிகளைக் கொண்டு காதுகளின் மூலமாயும், பொது அறிவை விருத்தி செய்யலாம்.

கிராமங்களின் பெருக்கத்தில் சோவியத் ரஷியா நம் தேசத்தை ஒத்தது. அங்கே இந்த ஒலிபரப்பும் கருவிகள் கையாளப்படுவதுபோல் இங்கும் பயன் படுத்தப்படவேண்டும். ஒன்றுமேயில்லாத நம் தேசத்தில் இதை குடிகள் ஆரம்பிப்பது இயலாத காரியம். சர்க்காருடைய வேலை இது. ஒலிபரப்பும் கருவிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு, ஒலிபரப்பு நிலையங்கள் 500 கிராமங்களுக்கு ஒன்று வீதமாகிலும் ஏற்படுத்த வேண்டும்.

## வியாபாரம்.

உலகத்தின் மொத்த வியாபாரம் ஐரோப்பிய யுத்தத்துக்கு முன் (1911–13) 11000 கோடி ரூபாய். 1929-ல் 19000 கோடி ரூபாய். 1929-க்குப்பின் வர்த்தகக்குறைவு ஏற்பட்டு விட்டது. 1933-ம் வருட வியாபாரம் 1932-ம் வருட வியா பாரத்தில் 100-ல் 41 பங்குதான். யுத்த சமயத்தில் கடன் கொடுத்த தேசங்கள், தங்களுக்குத் தங்கமே வேண்டும் என்றன. கடன் வாங்கினவை இதற்காக கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தன. வியாபார பொருளாதார யுக்தியை நாடிய சில தேசங்கள், தங்கள் நாட்டில் ஏராளமாய் விளைந்த தானியத்தை அழித்தன. மற்றத் தேசங்களில் பட்டினியால் மாந்தர் தவிக்கையில், கையாடப்பட்ட இப்படிப்

பட்ட அழிச்சாட்டங்கள் எத்துணை கொடூரமானது! நாணய மாற்று விகிதமாறுபாடுகள், ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்தல் முதலிய யுக்திகளும் அதிக பயனளிக்கவில்லை. இந்திய சர்க்கார் நமது ரூபாயை ஆங்கில பவுண்டுடன் இணைத்திருப்பதால் நமது நாட்டு சாமான்கள் ஏற்றுமதியாவதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டு நமக்கு நஷ்டமுண்டாயிருக்கிறது.

வியாபாரக் குறைவு பிரிட்டனையும் பாதித்தது. உலக வியாபாரத்திற்கு நடு நிலையமாக விளங்கிய லண்டன் தன் அயல்நாட்டுப் பங்காளிகளை இழந்தது. பிரிட்டனே தன் தங்கத் திட்டத்தை ரத்து செய்து வேறு யுக்தி செய்தது. இதன் பயனாக நம் தேசத்திலிருந்து 200 கோடி ரூபாய் பெறுமான தங்கம் ஏற்றுமதியாய்விட்டது.

(1932–33-ல்) இந்தியாவில்

| | | |
|---|---|---|
| இறக்குமதியான சரக்குகளின் மதிப்பு | 133 | கோடி ரூபாய். |
| ஏற்றுமதியான ,, | 136 | ,, |

(1929–30-ல்) இந்தியாவில்

| | | |
|---|---|---|
| இறக்குமதியான சரக்குகளின் மதிப்பு | 241 | கோடி ரூபாய். |
| ஏற்றுமதியான ,, | 318 | ,, |

வியாபார மூலமாய் வருமானம் இந்தியாவில் தலைக்கு 18 ரூ. இது எல்லாத் தேசங்களைப் பார்க்கிலும் மிகக் குறைந்தது.

30 வருடங்களுக்கு முன் இந்தியாவின் வியாபாரம் கனடாவைவிட இரு மடங்காகவும், ஜப்பானைவிட மும்மடங்காகவும் இருந்தது. 1913–14-ல் இந்திய வியாபாரம் கனடாவிற்கு 100-க்கு 63 மடங்கு அதிகமாக இருந்தது. 1929-30-ல்

கனடா வியாபாரம் இந்தியாவுக்கு 100-க்கு 15 பங்கு அதிக மாகி இந்தியாவைவிட முன்னேறிவிட்டது.

இந்தியாவின் வியாபார விருத்திக்கு அவசியமான மூன்று அம்சங்கள் பின்வருபவை.

(1) மூலப்பொருட்கள். (2) பணம். (3) வேலையாட்கள். மேலும் விற்பனைக்கேற்ற வசதிகள் இவ்விடம்போல் எங்கும் கிடையாது. என்றாலும் இந்திய வியாபாரம் தனிப்பட்ட ஆட்களாலும், சுயநலத்தை நாடுகிற வியாபார கம்பெனிகளா லும் நடத்தப் பெறுவதால் இப்படிப் பின்னணியில் நிற்கிறது.

ஏற்றுமதி (1932–33)

| | | |
|---|---|---|
| சணலும் அதன் பொருட்களும் | 31 | கோடி ரூபாய். |
| பஞ்சும் வஸ்திரங்களும் | 24 | ,, |
| தானிய வகையுறுக்கள் | 16 | ,, |
| தேயிலை | 17 | ,, |
| வித்துக்கள் | 11 | ,, |

மேற்கூறியவை மொத்த ஏற்றுமதியில் $\frac{3}{4}$ பாகம். மீதம் ஏற்றுமதிச் சாக்குகள் தோல்கள், ரப்பர், வாசனைச் சாக்குகள், மரம், அரக்கு (லாக்) முதலியன. இவையன்றி பிரத்தியேக மாக $70\frac{1}{2}$ கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கமும் வெள்ளியும் ஏற்றுமதியாகியிருக்கின்றன.

பூர்வீக காலங்களில் நமது தமிழ் நாட்டிலிருந்தே அரிசி மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியானதால் "அரிசி" என்ற பதத்தின் திரிபே அவர்கள் பாஷையிலும் விளங்குகிறது.

அரிசியும் கோதுமையும் தற்சமயம் மொத்த தானிய ஏற்றுமதியில் 100-க்கு 93 பங்காக இருக்கிறது. ஆனால

இனி இது குறையும். ஏனெனில் தென் அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி, ஆப்பிரிக்காவில் இவற்றைப் பயிரிட ஆரம்பித்து விட்டனர்.

அரிசி 1924—26-ல் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு 418 லட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதியானது. 1928-29-ல் 10 லட்சம் ரூபாய்க்குதான் ஏற்றுமதியானது. ஜப்பான் இந்தியப் பருத்தியில்லாமலே, அமெரிக்காவிலுள்ளதைக் கொண்டு வேலை நடத்தும். தேயிலையும் சணலும் மொத்த ஏற்றுமதியில் 13%ம் 23%. அவ்வளவு அதிகம்.

மூன்று விஷயங்கள் செய்யவேண்டியவை :—

1. இறக்குமதியைவிட ஏற்றுமதி இன்னும் அதிகமாய் இருக்கப் பிரயாசப்படவேண்டும்.
2. மூலப்பொருட்களில் அநேகம் இங்கேயே கடைப் பொருட்களாக மாற்றப்பட்டு உபயோகிக்கப்பட வேண்டும். ஏற்றுமதி செய்யவேண்டாம்.
3. நவீன முறைகளைக் கையாடி விவசாயம் நடத்தவேண்டும்.

## இறக்குமதி.

பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு முன் பருத்தியும் சர்க்கரையும் இங்கிருந்துதான் ஏற்றுமதியாயின. இப்போதோ அவை இங்கு இறக்குமதியாகின்றன. 1814—1914 வருடங்களுக்குள் $\frac{1}{2}$ லட்சம் ரூபாய் மதிப்புக்கு இறக்குமதியான பருத்தி சாமான்கள் 66 கோடி ரூபாய் மதிப்புக்கு ஏறிவிட்டது. சர்க்கரை இறக்குமதி 23 லட்சத்திலிருந்து $15\frac{3}{4}$ கோடிக்கு ஏறிவிட்டது.

1932—33-ல் இந்தியாவில் இறக்குமதியான பொருட்களின் மதிப்பு 133 கோடி ரூபாய்.

| | | |
|---|---|---|
| அதில் பஞ்சும் பஞ்சு வஸ்திரங்களும் | 34 | கோடி ரூபாய். |
| யந்திர சாமான்கள் | 11 | ,, |
| எண்ணை | 8 | ,, |
| உலோக வகையறாக்கள் | 10 | ,, |
| சர்க்கரை | 4 | ,, |
| மோட்டார்கள் முதலியன | 4 | ,, |

இறக்குமதி 1929–30-ல் இருந்ததற்கு 100-க்கு 55 பங்குதான். இதன் காரணங்கள் பல உள. தேசிய இயக்கமும் அக்காரணங்களில் ஒன்றுதான்.

இந்தியாவில் தலைக்கு (வருடத்துக்கு) 13 கெஜம் பஞ்சுத்துணி செலவாகிறது (1913–14-ல்). 1931–32-ல் தலைக்கு 10-கெஜம்தான். இந்தப் பத்து கெஜத்தில் ¼-பாகம் இறக்குமதிச் சரக்கு. கதர் நிலவத் தொடங்கிவிட்டது. 1924-ல் ரூ. 9-லட்சம் மதிப்புக்கு நெய்யப்பட்ட கதர், 1929-ல் 53-லட்சம் ரூபாய்க்கு ஏறிவிட்டது.

இறக்குமதி விஷயமாகக் கவனிக்க வேண்டிய காரியங்கள் மூன்று. அவையாவன :—

(1) இங்கேயே செய்யக்கூடிய பஞ்சு வஸ்திரங்கள், சர்க்கரை முதலியவற்றை இறக்குமதி செய்யாதபடிக்கு வேலை நடத்தவேண்டும். இவை செய்ய தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும்.

(2) நமக்குப் போய் மீந்ததை எவ்வளவு ஏற்றுமதி செய்கிறோமோ அதன் மதிப்புக்கே இறக்குமதிச் சாக்குகளின் மதிப்பைக் குறைக்க வேண்டும்.

(3) நமது நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்படும் கைத் தொழில் பொருட்களை அந்நிய நாட்டு இறக்குமதியின்மேல் தீர்வை முதலியவற்றால் பாது காக்கவேண்டும்.

## உள்நாட்டு வியாபாரம்.

இந்தியாவின் மொத்த வியாபாரத்தில் சுமார் 100-க்கு 92-பாகம் உள்நாட்டு வியாபாரமாகத்தான் இருக்கவேண்டும் என்பதாக அனுமானிக்கப்படுகிறது. உள்நாட்டு வியாபாரம் வருடத்தில் 2,500 கோடி ரூபாயாகும்.

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களைத் தகுந்தபடி விற்பனை செய்ய வசதி கிடையாது. போரடிக்கும் களத்திலேயே, (கொல்லையிலேயே) அவை அற்பக் கிரையத்துக்கு விற்கப் படுகின்றன. ஜப்பானில் 52-களஞ்சியங்கள் சர்க்காரால் கட்டப்பட்டிருக்கின்றன. இதரக்களஞ்சியங்கள் 5000. இப்படிப்பட்ட வசதிகளிருப்பின் நமது விளை பொருட்கள் நம் நாட்டிலேயே தகுந்த லாபத்திற்கு விற்பனையாய்விடும்.

எல்லைப்புற வியாபாரம் பெர்ஷியா, ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா, துருக்கிஸ்தான், திபேத், நேப்பாளம், பூட்டான் இவற்றோடுதான். வியாபாரச் சரக்குகள் :—

எற்றுமதியாவன :— அரிசி, ஆகார வகையறாக்கள், எண்ணெய் வித்துக்கள்.

இறக்குமதியாவன :— பஞ்சுவஸ்திரம், கோதுமை, உப்பு, சர்க்கரை, தேயிலே, பெட்ரோல்.

1929–30-ல் இறக்குமதி 50 லட்சம் மணு நிறை.
,, எற்றுமதி 77 லட்சம் மணு நிறை.

## பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள வியாபாரம்.

பர்மாவிலிருந்து இங்கு இறக்குமதியானது 10 லட்சம் டன் நிறை.
மண் எண்ணே 10 கோடி காலன்.
மரம் 2 கோடி ரூபாய்.

யுத்தத்துக்கு முன் இவ்வித இறக்குமதி மொத்தம் 12 கோடி ரூபாய்.

1929-30-ல் 28 கோடி ரூபாய் இறக்குமதி.
1931-32-ல் 21 கோடி ரூபாய்.

### எற்றுமதி விவரம்.

நிலக்கரி 5 லட்சம் டன் நிறை.
பஞ்சுவஸ்திரம் 440 லட்சம் கெஜம்.
கச்சந்திப் பைகள் 500 லட்சம்.

மொத்த எற்றுமதி (வருஷத்துக்குமுன்) 8 கோடி ரூபாய்.
1929-30-ல் 14 கோடி ரூபாயானது.
1931-32-ல் 11 கோடி ரூபாயானது.

இவ்விருநாடுகளுக்குமிடையில் நடந்த இவ்வியாபாரத்தில், பர்மாவுக்கே 4-கோடி ரூபாய் லாபம் கிடைத்தது. ஐரோப்பிய யுத்தத்துக்குப்பின் பர்மாவுக்கு 14-கோடி ரூபாய் லாபம். பர்மாவுக்கு இந்தியா எப்போதும் லாபகரமான விற்பனே ஸ்தலமாகவே இருந்து வருகிறது.

## கடல் வியாபாரம்.

" சீன மிசிரம் யவனகரம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு."

பூர்வீக காலத்தில் தமிழ் மக்களின் கப்பல்கள் அந்நிய நாடுகள் சென்று கடல் வியாபாரம் செழித்தோங்கியதை முன்னமே தெளிவாக விவரித்திருக்கிறேன். ராஜராஜ சோழன் எண்ணிறந்த கப்பல் படைகளைக்குறித்து மார்க்கப் போலோ, அடர்ந்த சோலைகளில் நிரம்பிய மரங்களுக்கு ஒப்பிட்டதையும் கூறினேன். தற்காலத்தில் காரியமெப்படி? தமிழ் மக்கள் கப்பல்கள் எங்கே?

இந்தியா உலகின் மற்ற நாடுகளோடு செய்யும் வியாபாரத்தைவிட பிரிட்டனோடுதான் அதிக வியாபாரம் செய்கிறது.

1932–33-ல் பிரிட்டனிலிருந்து இறக்குமதியான சாக்குகளின் மதிப்பு 49 கோடி ரூபாய். பிரிட்டனுக்கு ஏற்றுமதி ஆனது 38-கோடி ரூபாய். பிரிட்டனோடு செய்த வியாபாரம் இந்தியாவின் மொத்த அந்நிய நாட்டு வியாபாரத்தில் 40%. இதர நாடுகள் இந்தியாவிலிருந்து அதிகமாக வாங்கி கொஞ்சமாக விற்கின்றன. இவ்வித சம்பந்தத்தால் நமக்குக்கிடைத்த லாபம் வருடத்துக்குச் சராசரி 88 கோடி ரூபாய்.

இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் நடக்கும் வியாபாரம் இந்தியாவின் மொத்தக் கடல் வியாபாரத்தில் 3-ல் 1 பங்கு.

இதனால் பிரிட்டனுக்கே எப்போதும் லாபம். இந்தியா ஒரு விவசாய நாடு. பிரிட்டன் ஒரு கைத்தொழில் நாடு. பிரிட்டனிலிருப்பவர்களுக்கு இன்றியமையாதவைகளே இந்தியாவினின்று ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று அதிகச் சார்புடையன. ஆனால் பிரிட்டன் தனக்கு வேண்டிய எல்லா மூலப் பொருட்களையும் இந்தியாவினிடமிருந்து வாங்குவதில்லை. வியாபார யுக்தி தெரிந்த நாடானதால் சகாயமான இடம் பார்த்துத்தான் பொருட்களை வாங்குகிறது.

1932-ல் பிரிட்டன் 320 லட்சம் பெறுமான சாக்கு இந்தியாவினிடம் வாங்கினது. கனடாவினிடமிருந்து 430 லட்சம் ரூபாய்க்கும், அமெரிக்காவிலிருந்து 840 லட்சம் ரூபாய்க்கும் வாங்கியிருக்கிறது. ஆனால் இந்தியாவுக்கு 360 லட்சம் ரூபாய்க்கு சாக்கு விற்றிருக்கிறது. இது அமெரிக்காவுக்கு விற்றதைவிட இரு மடங்குக்கதிகம். கனடாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் விற்ற மொத்தத்திற்குச் சமம்.

### இந்தியாவும் வியாபார மந்தமும்.

பிரிட்டனில் 4 பேருக்கு மூவர் இறக்குமதிச் சரக்குகளால் ஜீவிக்கின்றனர். மேலும் பிரிட்டனின் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப் பொருட்கள் எல்லாம் அந்நிய நாடுகளிலிருந்தே இறக்குமதியாகின்றன. கைத்தொழில் பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்வதும், செய்யப்படுபவைகளை விற்பனை செய்யத்தக்க வசதிகள் ஏற்படுத்துவதும் பிரிட்டனுக்கு முக்கியம்.

ஐக்ய நாடுகள் கைத்தொழில் நாடாகவும், விவசாய நாடாகவும் இருக்கிறது. இந்தியா எப்படியிருந்தாலும் அதன் வியாபாரம் முதலிய காரியங்களெல்லாம், இங்கிலாந்திலுள்ள இந்தியக் காரியதரிசியின் ஆதிக்கத்துக்குக் கீழ் இருக்கிறது. அவரோ அந்நியர், ஆகையால் தமது சொந்த நாடாகிய பிரிட்டனின் நன்மையைக் கோரியே எல்லாக் காரியங்களையும் முடிவு செய்வார்.

இந்தியாவின் இறக்குமதித் தீர்வையெல்லாம், வருமானத்தை நோக்கிப் போடப்பட்டதே ஒழிய இந்தியக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டன வல்ல. பாதுகாப்பு வரிகள், மொத்த இறக்குமதி வரிப்பணத்தில் 100-க்கு 5 பாகமே.

## வியாபாரத் தூதர்கள்.

இந்தியாவுக்காக மூன்று வியாபாரத் தூதர்களே உளர். ஒருவர் லண்டனிலும், மற்றொருவர் மிலானிலும், மூன்றுமவர் ஹாம்பர்க்கிலும் இருக்கின்றனர். கனடாவுக்கு 34 தூதர்கள். ஐக்கியநாடுகளுக்கு 58 வியாபாரக் காரியாலயங்கள். (வெளி நாடுகளில்) 300 ஸ்தானபதிகள். ஸ்தானபதிகள் பலர் அனுப்பப்படவேண்டும். அவர்களுடைய அறிக்கைகளை வெளியிடும் ஓர் வாரப் பத்திரிகை வேண்டும்.

பொருட்காட்சிகள் (வியாபாரப் பொருட்கள்) நகரங்களிலும் அடிக்கடி கொண்டாடப்படவேண்டும். இதற்கு மற்றத் தேசங்களைப் போல் அரசாங்க உதவி வேண்டும். பொருட்காட்சிசாலைகள் நிறுவப்படவேண்டும்.

## கலாசாலையின் வேலை.

வியாபாரத்துக்கும் கைத்தொழிலுக்கும் உபயோகமான அறிவு ஊட்டப்பட்டு, அவற்றிற்குரிய பட்டங்களும் வழங்கப் படவேண்டும். அமெரிக்காவில் கலாசாலைகள், வியாபார சங்கங்களுக்கு வருடாந்திர, மாதாந்திர அறிக்கை, பட்ஜெட் முதலியன தயாரித்துக் கொடுக்கின்றனவாம். இப்படிக் கல்லூரிகளும் வர்த்தக சங்கங்களும் ஒத்துழைத்தல் மிக அவசியம்.

## வியாபார ஒப்பந்தம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளுக்குள் வியாபார ஒப்பந்தங்கள் பண்ணும் நோக்கமாக ஒரு மகாநாடு ஒட்டாவாவில் கூட்டப்பட்டது நாமனைவரும் அறிந்த விஷயம். இந்த மகாநாட்டில், இந்தியா பிரிட்டனோடும் இதர சாம்ராஜ்ய நாடுகளோடும், மூன்று வருஷங்களுக்கு சில நிபந்தனைகளுக் குட்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில், அம்மகாநாட்டின் விவகாரங்களால் இந்திய வியாபாரம் விசேஷ விருத்தியடைய வில்லை. சில நாட்களுக்கு முன் இந்திய சட்ட சபை இந்த ஒப்பந்தத்தைத் தள்ளிவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| இந்தியா—பிரிட்டன் வியாபாரம் | 1914–18-ல் | $41\frac{1}{5}$ | 100க்கு விகிதம். |
| ,, | 1932–33-ல் | $32\frac{1}{5}$ | ,, |
| இந்தியா—சாம்ராஜ்ய நாடுகள் | 1914–18-ல் | $57\frac{1}{10}$ | ,, |
| ,, | 1932–33-ல் | $45\frac{1}{5}$ | ,, |

## இந்திய லங்காஷயர் ஒப்பந்தம்.

லங்காஷயரிலிருந்து ஏராளமாய் இறக்குமதியாகும் துணிகளுக்குப் பதிலாக, முன்னைவிட அதிகமாய் பருத்தி

இந்தியாவிடமே வாங்குவதாகவும், இந்தியப் பொருட்களை இதர சாம்ராஜ்ய நாடுகள் வாங்கும்படி செய்வதாகவும், லங்காஷயர் முதலாளிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். தான் விற்கும் சாக்குகளுக்கு ஈடு செலுத்த இதர நாடுகளையும் பந்தப்படுத்தியது எவ்வளவு சாமர்த்தியம்.

## இந்திய ஜப்பான் ஒப்பந்தம்.

ஜப்பானிடமிருந்து இந்தியா 40 கோடி கெஜம் துணி வாங்கினால் ஜப்பான் இந்தியாவிடம் 15 லட்சம் பேல் பருத்தி வாங்கவேண்டும். யுத்தத்துக்கு முன் ஜப்பான் இந்தியாவோடு செய்த வியாபாரம் அதன் மொத்த வியாபாரத்தில் நூற்றுக்கு $2\frac{1}{2}$ பங்கு. 1932–33-ல் நூற்றுக்கு $15\frac{1}{2}$ ஆகிவிட்டது. இதே வருஷத்தில் ஜப்பான் இந்தியாவுக்கனுப்பிய துணி 60 கோடி கெஜம். புது ஒப்பந்தம், அதில் $\frac{2}{3}$ பங்குக்குத்தான் இடம் கொடுக்கிறது.

இந்தியா 5 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்கிறது. 10 லட்சம் டன் எஃகு வாங்குகிறது. இந்தியாவில் ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய லோகவஸ்துக் கேணிகளை ஆராய்ச்சியாளர் மூலமாய் கண்டு உற்பத்தி செய்யவேண்டும்.

இந்தியா பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் துணி அனுப்பிக் கொண்டிருந்த காலமும் உண்டு. இப்போதோ அனுப்பாதிருக்கிறது மட்டுமல்ல வாங்கவும் செய்கிறது! வாங்கவேண்டிய அவசியமும் இல்லையென்றே சொல்லவேண்டும். சரியான பாதுகாப்புகள் சட்டப்பூர்வமாக ஏற்படின், பருத்தி சாமான்களோ, எஃகு சாமான்களோ வாங்கத் தேவையிராது. நமக்கு



காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயில். ஏகாதிபத்திய மான்புடன் ஆண்ட கரிகால் சோழ மன்னன் காலத்திற்கு முன்னே (கி. மு. முதல் நூற்றுண்டிலேயே) இது கட்டப்பட்டிருக்கவேண்டும் என்று ஊகிக்கப்படுகிறது. பெரிய கோபுரம், சோழ சிற்ப சாஸ்திர முறைப் படி உச்சி நீண்ட ஜெபசாலைபோல் முடிவு பெற்றது. கோபுரப் பக்கங்கள் பௌத்த மடங்களின் சிறிய அறைகள் பாவனையாக அடுக்கடுக்காக சுற்றி அமைக்கப் பட்டிருக்கின்றன. பக்கத்திலுள்ள குளத்தின் நடுவில் கிண்ண (உச்சி) கோபுர மண்டபம். உள்ளே 25 ஏகரா விஸ்தீரண இடமுண்டு. பின் காலத்தில் முகம்மதிய ஆங்கிலேய பட்டாளங்களை இங்கு தங்கச் செய்ததால், சிலைகள், சிற்ப சாஸ்திர வேலையமைந்த சில பாகங்கள் சேதமடைந்திருக்கின்றன.



தஞ்சாவூர் பிரஹதீஸ்வரன் கோயில், கர்ப்பக் கிரகத்திற்கெதிரிலுள்ள நந்தி அல்லது ரிஷப மண்டபம். உச்சியில் கிண்ணம் போன்ற முடியுள்ள கோபுரம், பல்லவ சிற்ப சாஸ்திர முறையைத் தழுவியது. உச்சியில் சதுரமான பெருங்கல் ஒன்று கிண்ணத்திற்கு கீழிலிருக்கின்றது. கி. பி. 985ஆம் பட்டத்திற்கு வந்த ராஜ ராஜ சோழ மன்னன் கட்டுவித்தது. சென்னை ராஜதானி முழுவதும் மைசூர், இலங்கை இவைகளில் பாகங்களும் இந்த மன்னன் ஆண்டான். கப்பல்படை கீர்த்திபெற்ற இவன் மகன் ராஜேந்திரன் பர்மாவின் ஓர்பாகத்தையும் தன் ஆட்சிக்குள் கொண்டுவந்தான்.

தேவையானதை நாமே உற்பத்தி செய்துகொள்ளக்கூடும். இதனால் வேலையில்லாமல் பட்டினியாயிருக்கும் ஏராளமான நமது மக்களுக்கு பிழைப்பும் கிடைக்கும்.

### சக்தி மூலங்கள்.

நிலக்கரி (1931-ம்) வருஷம்

| | | |
|---|---|---|
| பிரிட்டனில் | 2230 | லட்சம் டன் நிலக்கரி எடுக்கப்பட்டது. |
| ஜெர்மனியில் | 1190 | ,, |
| பிரான்சில் | 150 | ,, |
| இந்தியாவிலே | 220 | லட்சம் டன் தான். |

ஐக்கிய நாடுகளில் இந்தியாவிலும் இருபது மடங்குக்கு மேலான நிலக்கரி எடுக்கப்படுகிறது. இந்தியாவில் அதிக மான நிலக்கரி கிடையாது. என்றாலும் இருக்கிறதைக் கூட எடுக்கக்கூடிய கேணிகள் இல்லை. மேலும் காடுகள் அபரிமித மாக இருப்பதனால், நிலக்கரிக்குப் பதில் மரக்கட்டைகளையே உபயோகிக்கின்றனர்.

### எண்ணெய், பெட்ரோல்.

எண்ணெய் கேணிகள் உள்ள தேசங்கள்.

1931-ம் வருஷம்

| | | |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் | 1170 | லட்சம் டன்கள். |
| ரஷியா | 220 | ,, |
| வெனிசுலா | 170 | ,, |
| பெர்ஷியா | 60 | ,, |
| இந்தியா | 10 | ,, |

ரஷியர்கள் 1927-ல் உற்பத்தி செய்த எண்ணெயைப் பார்க்கிலும் 100-க்கு 85 மடங்கு அதிகமாக உற்பத்தி செய்ய திட்டம் செய்திருக்கின்றனர்.

இந்தியாவும் பர்மாவும் உள்பட 1930-ம் வருஷத்தில்
பெட்ரோலியம் $5\frac{1}{4}$ கோடி ரூபாய் மதிப்புக்கு
பர்மா மட்டும் $4\frac{1}{4}$ ,,

பர்மாவிடமிருந்து இந்தியா வாங்கிக்கொண்ட எண்ணெய் 3 கோடி ரூபாய் மதிப்பு. சீமை எண்ணெய் 5 கோடி ரூபாய் மதிப்பு. இதுமட்டுமல்ல, இந்தியா இதர தேசங்களிலிருந்து 2 கோடி ரூபாய்க்குப் பெட்ரோலியமும், 6 கோடி ரூபாய்க்குச் சீமை எண்ணெயும் வாங்கியிருக்கிறது.

## ஜலசக்தி.

ஜலசக்தி என்பது மலையிலிருந்து விழும் நீர் வீழ்ச்சியின் பலத்தினால் இயந்திரங்களை ஓடச் செய்வதும், மின்சாரம் உண்டாக்குவதுமே. ஜலசக்தியினால் மின்சார உற்பத்தியும், யந்திரம் ஓட்டுவதும், தற்சமயம் இந்தியாவில் அதிகமாக உண்டாக்கப் படுகிறது. நமது தேசத்தின் மலை நாடுகளில் அநேக நீர் வீழ்ச்சிகள் இருப்பதால் நமக்கு தேவையான இவ்வித ஜலசக்தி உண்டுபண்ணிவிடலாம் என்று நிபுணர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தற்சமயம் உற்பத்தி செய்யப் பட்டிருக்கும் ஜலசக்தி மொத்தம் உண்டுபண்ணக் கூடியதில் நூற்றுக்கு 3 பாகம் தான். இது விருத்தியடைய வேண்டுமானால், குடிகள் இதை அதிகமாய் உபயோகிக்கவேண்டும். கனடாவில் ஆளொன்றுக்கு செலவாகிற மின்சார அளவில் இந்தியாவில் உபயோகப்படுவது தலைக்கு $\frac{1}{450}$ தான்.

நம் நாட்டில் தற்சமயம் இருப்பவை.

I (அ) 74000 மைல்கள் நீளக் கப்பி ரோட்டுகளும் 160000 மைல்கள் கப்பிப் போடாதவையும்

(இ) 200,000 மோட்டார்கள்.

II 42000 மைல் நீள இருப்புப்பாதை.

III 9 சுதேசி கப்பல் கம்பெனிகள். மொத்தம் 20000 டன் நிறை கப்பல்கள்.

IV 24000 தபால் நிலையங்கள்.

V 13000 தந்தி நிலையங்கள். 180 லட்சம் செய்திகள்.

VI 31 ஒலிபரப்பும் நிலையங்கள்.

மேற்கண்ட சாதனங்கள், இந்தியாவின் 18 லக்ஷம் சதுரமைல் பரப்பளவையும் $35\frac{1}{4}$ கோடி ஜனத்தொகையையும் மேல் நாடுகளோடு அல்லது ஜப்பானோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு சிறு துளியளவுக்குத்தான் சமம். ஆகையால் நாம் செய்யவேண்டியவை :

1. போக்கு வரத்து சாதனங்களைக் கவனிக்கும் ஒரு அகில இந்திய சங்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். இன்னும் 5 வருடங்களுக்குள் 10 லட்சம் மைலுக்கு ரஸ்தாக்களின் நீளம் வந்துவிட வேலை செய்ய வேண்டும்.

2. மோட்டார் உற்பத்தி சாலைகள் நிர்மாணிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆயிரம் பேருக்கு 1 மோட்டார் இருக்கும்படி ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

3. இந்தியருக்கு, ரயில் வேலைகள், கேனி வேலைகள், கப்பல் தொழில், ரசாயன வேலைகள் முதலியவற்றில் பயிற்சி கொடுக்கவேண்டும்.

4. சுதேசி கப்பல்கள் இந்திய கடற்கரையிலும் பிற தேசத் துறைமுகங்களோடும் வியாபாரம் செய்ய சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

5. ஆகாய விமான இலாகா — விமான உபயோகத்தை குடிகளுக்குள் பரவச் செய்யவேண்டும். விமான ஓட்டிகளாக இந்தியருக்கே பயிற்சி யளிக்க வேண்டும்.

6. மின்சார உற்பத்திசக்தி இலாகா அதிக துரிதமாக வேலை செய்யவேண்டும்.

## ஐக்கியமும், கூட்டுறவும்.

நம்தேசம் கெட்டதற்கும், அந்நியருக்கு நாம் கீழாகி இப்பூலோகத்தில் மானிட மக்களாகிய பற்பல தேசத்தாருக்கு கடவுளால் நியமிக்கப்பட்ட சுதந்திரத்தையுமிழந்து, திகைத்து வருந்துவதற்கும் காரணம் ஐக்கியமின்மையே. மேல் நாடுகளில் தங்கள் சுயதேசத்திற்குள் ஜனங்களிற்குள் எவ்வளவு பிரிவினையிருந்தாலும், தங்கள் விவாதம் வழக்கு களைத் தீர்க்க அந்நியரிடம் ஓடி அவர்கள் அதிகாரிகளின் உதவியைத் தேடாமல், தாங்களே பார்த்துக்கொள்ளுவார்கள். அந்நிய தேசத்தாருடன் பேசும்போது தங்கள் நாட்டின் குறைகள், குழப்பங்களைப் பற்றியல்ல, அதன் நற்காரியங்களையும் மேன்மையானவைகளையும் குறித்தே பிரதான

மாகப் பேசுவார்கள். ஓர் அயல் நாட்டுக்கும் தங்கள் தேசத்திற்கும் யுத்தம் வந்துவிட்டால் தங்களுக்குள்ள பிரிவினைகளையெல்லாம் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, அவற்றை மறந்து எல்லாரும் ஏக ஐக்கியமாய்ச் சேர்ந்து வேலை செய்வார்கள். அயல் நாட்டுக் காரியத்தில் என்ன காரணத்தால் பிரவேசித்தார்களோ அது பூரணசித்தி பெறுமட்டும் தங்கள் சுதேசக் கக்ஷிகளையெல்லாமொன்றுபடுத்தி, ஒரே மன தாக்கி, தங்கள் தேசீகத் தொழில்கள், நடவடிக்கைகளையெல்லாம் தாங்கள் கருதிய நோக்கம் நிறைவேறுவதற்கான வழியிலேயே செலுத்தி ஒழுங்குபடுத்திக்கொள்வார்கள். இங்கிலாந்து தேசத்தில் பல கக்ஷிகளிருக்கின்றன. அரசியல் முறைமை, வியாபாரம், தொழில்களின் முன்னேற்றம், பின்னும் பற்பல விஷயங்களில் இக்கக்ஷிகளுக்குள் அபிப்பிராய பேதங்களுண்டு. சிற்சில வேளைகளில் பலத்த விவாதங்களும், பகை விரோதங்களும் எழும்பக் குழப்பங்களும், அடிபிடி கலகங்களும் உண்டாகிவிடும். சில வருஷங்களிற்கு முன் இங்கிலாந்தில் தொழிலாளர் சங்கத்தார் அச்சமயத்தில் அரசியல் செய்துகொண்டிருந்த தங்கள் எதிர் கக்ஷிக்காரருக்கு விரோதமாக எழும்பி அத்தேச முழுவதும் புகை வண்டிகள், மோட்டார்கள் ஓடாதபடி செய்து, வியாபாரம், ஜனங்களின் போக்குவரத்து முதலியனவற்றைத் தடுத்து வேலை நிறுத்திவிட்டார்கள். இப்படி குழப்பங்களுண்டாகும்போது ஒரு சிறிய போர் நடந்தாற்போலேயே யிருக்கும். இப்படிப்பட்ட எத்தனை பிரிவினை சண்டைச்சச்சரவிருந்தாலுமென்ன? ஓர் அயல் நாட்டுக் காரியங்களில் தலையிட்டுவிட்டால் உடனே எல்லாருமொன்றாகிவிடுகிறார்கள். இதர நாட்டுக்கும் தங்கள் நாட்டுக்கும் உள்ள

வழக்குகளில் தங்கள் ஆங்கில தேச மகிமையையும் அனு கூலத்தையும் பிரதானமாகக் கையாடுவார்கள், தங்கள் செல் வாக்கை மேலாகப் பாவிப்பார்கள். தங்கள் பிரிவினையைப் பிர தானமாக எண்ணமாட்டார்கள். சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து ஜெர்மனி தேசத்தார்கள் முதலியவர்க்குள் பயங்கர யுத்தங்கள் நடந்த காலத்தில் இது நன்கு விளங்கி யது. தங்கள் தேசத்தை அந்நியர் ஜெயித்துவிடுவார்கள், தங்கள் பூலோக கௌரவமும் பெருமையும் குன்றிவிடும், யுத்தத்தில் தோற்றுவிட்டால் தங்களைவிட ஜெர்மனி தேசத் தார் பெரிய பேரெடுத்து, வல்லமையடைந்துவிடுவார்கள், என்றவிதமாய்த் திகில் ஆங்கில நாட்டைப் பீடிக்கவும், உடனே ஆங்கில நாட்டு பற்பல கட்சிக்காரரும் தங்கள் பிரி வினைகளையெல்லாம் ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, ஒரு வர்க்கொருவர் விரோதமாயிருந்த கட்சிகளின் தலைவர்கள் தங்கள் பிரதிநிதிகளை ஐக்கிய மந்திரிகளாக தேசத்துக்கு ஏற்படுத்தி, ஜெர்மனியை எதிர்த்தார்கள். நம்முடைய தேசமாகிய இந்தியா விஷயத்திலும் இப்படியே நடந்துகொள்ளுகிறார்கள். கறுப்பு மனுஷர் விஷயமென்றால் ஆங்கில தேசத்தில் எல்லாரும் ஒரே கக்ஷிதான். தொழி லாளிகளின் கட்சி என்ற ஓர் ஆங்கிலக் கக்ஷியுண்டு. இக்கட்சிக்காரர் நமது இந்தியா தேசம் முன்னேற அநுகூலமா யிருப்பார்களென்று நம் தேசத் தலைவர்கள் அநேக வருஷங்களாய் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந் தார்கள். ஆனால் அவர்கள் ஆங்கில நாட்டில் சில வருஷங் களிற்கு முன் அதிகாரத்திற்கு வந்து மந்திரிகளாய் உத்தி யோகஞ் செய்த காலத்திலுங்கூட அவர்களால் இந்தியாவுக்கு

ஒரு நன்மையும் வாராததை நமது தலைவர்கள் திட்டமாகக் கண்டுபிடித்துவிட்டார்கள். இவர்களும் தங்களுக்கு அந்நிய ரான கறுப்பு மனுஷர் விஷயத்தில் தங்களுடைய தேசத்தி லுள்ள மற்றக் கட்சிகளையே சேர்ந்துவிட்டார்களென்று பல சம்பவங்களினால் தெளிவாகிவிட்டன. அவர்கள் அதிகார காலத்தின்கீழ் நம் தேசத்தில் நடந்த பல கொடூரங்களையும் நம் தேச பக்தரும், உத்தமரும், சிறந்தவர்களுமான மஹான் களும், பெண்மணிகளும் சிறையிருப்பில் அடைக்கப்பட் டிருந்ததையும், இன்னும் பல இடங்களில் நமது ஜனங்களுக்கு சர்க்காரால் நடந்த இம்சையையும் கவனிக்கும்போது இதெல் லாம் தெளிவாகும். ஆனாலும், நம் தேச சரித்திரத்தை கவனிக் கும்போதும், தற்காலத்தில் நமக்குள்ளிருக்கும் ஒற்றுமைக் குறைவையும், அந்நியரிடத்தில் ஓடி நமது பிரிவினைகளால் அவர்கள் தங்களுக்கே ஆதாயம் சேர்த்து நம்மைப் பின்னும் அதிகமாகப் பிரித்துவிட நாம் இடங்கொடுப்பதையும் கவ னிக்கும்போது நமக்கு எத்தனை வெட்கமும், துக்கமும், மன வேதனையுமுண்டாகிறது! ஐயோ! நான் விவரிக்கவும் கூடுமோ? ஆனாலும் நாம் மந்த புத்தியை அகற்றி காரியங்களை யெல்லாம் பெருந்தன்மையாய் நோக்கி, தீர விசாரித்து, விசால மனமுள்ளவர்களாக வேண்டுமென்று நான் வாஞ்சிக்கிறேன். அதனால், நம் பிரிவினைகளை அந்நியருக்குக் கொண்டுபோக தீவிரிப்பதினால், நமக்கு முற்காலத்திலும் இக்காலத்திலும் நிகழ்ந்திருக்கும் தீவினைகளை சரித்திரப் பிரகாரமாக விவரிக்கி றேன். தயவுசெய்து பொறுமையாய்க் கேளுங்கள்.

பாண்டிய அரசர்கள் மகிமையாய்ச் செங்கோல் செலுத் திய பிரதான நகரம் மதுரை. தலைச்சங்கம், இடைச்சங்கம்,

கடைச்சங்கம் என்று தமிழ் புலவர்கள் நம் செந்தமிழ் பாஷையை விருத்தி செய்த இடம். திருக்குறள் முதலிய கீர்த்தி பெற்ற காவியங்கள் இங்கேதான் அரங்கேற்றப்பட்டன. சிவ பக்தியிற் சிறந்த சோழ நாட்டரசனின் திருமகளும், கூன்மாற பாண்டியன் நாயகியுமாகிய மங்கையர்க்கரசி, சிவபக்தனுன கவிராய வித்துவான், திருஞான சம்பந்த மூர்த்தி தம் இனிய காவியங்களைப் பாடும்படி வரவழைத்த ஸ்தலம் மதுரை. "திருவாசகத்துக் குருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற முதுமொழிப்படி, மனிதர் உள்ளத்தைக் கரைக்கும் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் மந்திரி ஸ்தானம் வகித்த ஸ்தலம் மதுரை.

தமிழரசர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர் பொதுவாக ஐக்கியம், அன்போடுவாழ்ந்தார்கள். கொள்வினை கொடுப்பனையினுல் இணைக்கப்பட்டு பந்துக்களா யிருந்தார்கள். கல்வியிலும், வியாபாரத்திலும், சிற்ப சாஸ்திரங்களிலும், மற்றும் பலவித ஜன சமுதாய பாக்கியங்களிலும் விருத்தியடைந்து, தமிழ்நாடு சிறப்புற்றிருந்தது. அக்காலங்களிலே கட்டப்பட்டு இந்நாள் வரைக்கும் அந்நிய நாட்டாரும் புகழ்ந்து போற்றும்படியான சிற்ப மாண்புள்ள கோயில், கோபுரங்கள், மண்டபங்கள், கற்களில் வெட்டப்பட்ட சாஸனங்கள் முதலியன இதற்கு சாட்சி பகருகின்றன. ஆனுல் பிரிவினை சண்டைகள் வரக் கேடும் வந்தது. கி. பி. 1559-ம் வருஷம்போல், மதுரையில் ஆண்ட சந்திரசேகர பாண்டியனுக்கும் சோழ இராஜனுக்கும் போர்நடந்து, பாண்டியன் தோல்வியடைந்தான். பாண்டியன் வடக்கே தெலுங்கு நாட்டில் சக்ர

வர்த்தியாய் ஆண்ட விஜயநகர் அரசனைச் சோழனுக்கு விரோதமாக உதவி செய்யும்படி கேட்டான். விஜயநகர் சக்ரவர்த்தி சேனாதிபதியாகிய நாகம நாய்க்கரை பட்டாளத் தோடு அனுப்பி, சோழ இராஜனை வென்றான். ஆனால் நாகம நாய்க்கன் பாண்டியனுக்கு இராஜ்யத்தைக் கொடுக்காமல் தானே அரசனாக சிங்காசனமேறினான். எப்படித் தமிழரசர் பிரிவினையினால் பாண்டிய நாடு தெலுங்கு நாய்க்கர் வம்சத்திற் காதீனமானதோ, அப்படியே இதற்குச் சில நூற்றாண்டு களுக்குப் பின் இந்த நாய்க்க வம்சத்திலுண்டான பிரிவினை யினால் பாண்டிய நாடு மகம்மதியர் ஆதீனத்திற்குள்ளா யிற்று. நாய்க்க வம்சத்தைச் சேர்ந்த கடைசி மன்னன் விஜய ரங்க சொக்கநாத நாய்க்கர். இவர் காலத்தில்தான் தமிழ் காவி யத்தில் கீர்த்தி பெற்று விளங்கும் சிவ பக்தனாகிய தாயுமான வர் பிறந்தது. விஜயரங்க சொக்கநாத நாய்க்கர் சந்தானமில் லாமல் மரித்துவிட்டார். அவர் மனைவி மீனாக்ஷி இராணியாகப் பட்டத்திற்கு வந்து திருச்சினப்பள்ளியிலிருந்து பாண்டிய நாட்டை ஆண்டு வந்தாள். தாயுமானவர் அரண்மனையில் ராணியின் சம்பிரதியாக வேலை செய்து வந்தார். பார்வைக்கு சௌந்தரியமான வாலிபர். இராணி மீனாக்ஷி இவர்மேல் காதல்கொண்டு அவரை மணம் புரிய தனக்கிருந்த உட் கருத்தை அவருக்கு வெளிப்படுத்தினாள். பக்தனாகிய தாயு மானவரோ உடனே வேலையை விட்டுவிட்டு இராமநாதபுரத் திற்கு ஓடிப்போய் ஒளித்துக்கொண்டார்.

இராணி மீனாக்ஷி, பங்காரு திருமலை யென்ற ஓர் தத்துப் புத்திரனைத் தெரிந்துகொண்டாள். சிறிதுகாலம் மீனாக்ஷியும் பங்காரு திருமலையும் ஐக்கியமாய் அரசியல் செய்து

வந்தார்கள். பின்னாலே இருவருக்கும் சண்டை வந்து விட்டது. ஆற்காடு மகம்மதிய நவாபின் படைத் தலைவர்களாகிய சந்தா சாகிபும் மகம்மது ஆலியும் படையெடுத்து வந்து, மீனாக்ஷியைச் சிறைப்படுத்தினார்கள். அவள் நஞ்சுண்டு இறந்துபோனாள். பங்காரு திருமலையை பாண்டியநாட்டு அரசனாக்கினார்கள். பின்னே அவனையும் கொன்றுபோட்டு தாங்களே அரசியல் செய்தார்கள். எப்படி நாய்க்கர் பிரிவினையினால் மகம்மதியர் தமிழ் நாட்டை வென்றார்களோ, அப்படியே மகம்மதியருக்குள் வந்த பிரிவினையினால் தமிழ் நாடு ஆங்கிலேயர் ஆதீனமாயிற்று.

மேற்கூறிய சந்தா சாகிபுக்கும் மகம்மது ஆலிக்கும் விவாதமுண்டாகி, சண்டை தொடங்கியது. சந்தா சாகிபு மகம்மது ஆலி யிருந்த திருச்சிராப்பள்ளியை முற்றுகை போட்டான், ஆங்கிலேய சேனைத் தலைவனாகிய கிளைவ் படைகளோடு போய், ஆர்க்காட்டை முற்றுகை போட்டு, சந்தா சாகிபை ஜெயித்தான். இதைப்பற்றி நான் முன்னேயே விவரித்துவிட்டேன். இதையெல்லாம் நான் கூறுவதற்குக் காரணம், நமது பிரிவினைகளில் அந்நியர் உதவியை நாடுகிறதினால், எப்படி நாம் அந்நியருக்கு ஆளாகி சுதந்திர மிழந்து விடுகிறோம் என்பதைத் தெளிவாய் ரூபிப்பதற்கே.

இச் சம்பந்தமாக, பாஞ்சாலக்குறிச்சி, செவ்வல், என்ற திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த சில சிற்றரசுகளின் விஷயங்களைக்குறித்தும் கொஞ்சம்பேச விரும்புகிறேன். மனோதைரியத்தோடும், கையாடின நோக்கத்தை ஒருபோதும் அதைரியப்பட்டு நெகிழவிடாமல், ஊக்கத்தோடும் உயிரையும்

பாராமல் வீரியங் காட்டின சிற்றரசர்கள் பாஞ்சால நாட்டுக் கட்ட பொம்மு நாய்க்கனும், செவ்வல் பூலித்தேவரும். பாஞ்சாலக் குறிச்சி ஒட்டபிடாரத்திற்கு வடக்கே இரண்டு மைல் தூரத்திற்குள்ளிருந்தது. ஈஸ்ட் இந்தியா கம்பெனி அதிகாரிகள் தரையோடே அதைத் தகர்த்து, அழித்து விட்டார்கள். சில வருஷங்களுக்கு முன்னே நான் அதைப்பார்க்கப் போனேன். பாளையப்பட்டிற்குப் பிரதான ஊராகிய பாஞ்சாலக் குறிச்சியில் 30 வீடுகள்போல்தான் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. தரைமட்டும் இடித்துப் போடப்பட்ட வீடுகளின் அஸ்திபாரம் மட்டும் இப்பொழுதும் பார்க்கலாம். பாஞ்சாலக் குறிச்சியாரின் குல தெய்வமாகிய சக்க தேவியாரின் கோயில் அஸ்திபாரம், ஓர் விக்கிரகம், யானைக் கட்டுக்கல், அழிந்த சில சிறு தெப்பக்குளங்கள், முதலியனவை இன்றும் அங்கு பார்க்கலாம். சுற்றியிருந்த மண்கோட்டை மதில்களெல்லாம் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர் அடியோடேயழித்து ஊரையும் உழுது போட்டுவிட்டார்கள். இப்பொழுது ஒருவரும் அங்கேபோய்க் குடியேறக்கூடாது என்று சர்க்கார் உத்தரவாம். ஏறக்குறைய 50 வருஷங்களாய் இந்த சிற்றரசு மிகுந்த யுத்தாயுதங்களின் பராக்கிரமங்களை எல்லாம் அணிந்த ஆங்கில துரைத்தனத்தை எதிர்த்து, தைரியமாய்ப் போர் செய்துவந்தது. கட்ட பொம்மு நாய்க்கன், பூலித்தேவர் முதலியவருக்குப் பாண்டிய இராஜ்யத்தின் காலத்தில் பாளையக்காரரென்றுபெயர். பாண்டிய அரசனின் கீழ் இந்தப் பாளையக்காரர் அவனுக்குக் கப்பங் கட்டுகிற சிற்றரசாராக அடங்கி இருந்தார்கள். சரியானபடி பார்த்தால் இப்பாளையக்காரர் பாண்டிய மன்னனின் சேனாதிபதிகள்.

இவர்கள் தற்காலத்து மிட்டாதார்கள், ஜமீன்தார்கள் மாதிரி தங்கள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து வரி வாங்கி, குறிக்கப்பட்டத் தொகையை ஒப்பந்தப்படி பாண்டிய அரசனுக்குக் கப்பமாகச் செலுத்துவார்கள். ஏதாவது யுத்தம் நேரிட்டால் பாண்டிய அரசனின் கட்டளைப்படி இவர்கள் தங்கள் தங்கள் கீழேயிருந்த பட்டாளங்களைச் சேர்த்துக் கொண்டு அரசனின் உத்தரவின்படி போர் புரிவார்கள். இதனால்தான் இவர்களுக்குப் பாளையக்காரரென்று பெயர். செவ்வல், பாஞ்சாலக்குறிச்சி, எட்டியாபுரம், முதலிய பாளயப்பட்டுகளுண்டு. இவர்கள் பாண்டிய மன்னர் காலத்திற்குப் பின் வந்த அந்நிய இராஜாங்கத்திற்குக் கப்பங் கட்ட எப்போதும் மறுத்தே வந்தார்கள். மகம்மதியரும் ஆங்கிலரும் நான் முன் கூறியபடி ஒரு கட்சியானபின், பாண்டிய மன்னனுக்கு முன் கப்பங்கட்டிக் கொண்டிருந்த பாளையக்காரர் ஆங்கிலக் கம்பனியாகிய ஈஸ்ட் இந்திய கம்பெனிக்கு கப்பங்கட்ட வேண்டுமென்று இவர்களை ஆங்கிலர் பலவந்தஞ்செய்தார்கள். செவ்வல், பாஞ்சாலக்குறிச்சி பாளையக்காரரோ இதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் ஆங்கிலரும் மகம்மதியரும் சேர்ந்துகொண்டு, இவர்களைத் தங்கள் பட்டாளங்களினால் அடக்க முயன்றார்கள். பாஞ்சாலக்குறிச்சிச் சிற்றரசன் கட்ட பொம்மு நாய்க்கர். இவர் சேனாதிபதி ஊமை. அதனால் அவருக்கு ஊமைத்துரை யென்று பெயர். கட்ட பொம்மு நாய்க்கருக்கு மிக உதவியாகவிருந்த மந்திரி சிவ சுப்பிரமணியபிள்ளை. ஆங்கில பட்டாளத்தை எதிர்க்கு முன், ஊமைத்துரை ஒரு வைக்கோலை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு, ஒரு விதமாகக் குரலை உயர்த்தி சப்தமிட்டு, கையி

லுள்ள வைக்கோலை ஊதிவிடுவாராம். அதன் அர்த்தமென்ன வென்றால், தங்களை எதிர்க்கிற வெள்ளைப் பட்டாளங்கள் அப்படியே தோல்வியடைந்து ஓடிவிடுவார்களென்று தம் பாஞ்சாலக் குறிச்சிப் பாளையப்பட்டு வீரர்களுக்குக் காட்டு வதாம். பகலெல்லாம் யுத்தம் நடக்கும். சாயந்திரத்தில் பாஞ் சாலக்குறிச்சி பெண்கள் தங்கள் இனத்தார் யுத்தக்களத்தில் காயப்பட்டு விழுந்து கிடப்பவர்களுக்கு உ த வி செய்யப் போவார்கள். ஒரு நாள் மாலை யுத்தக்களத்தில் காயப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்த ஓர் வாலிபனை அவன் தாய் பார்த்து, உதவி செய்யக் கிட்டினாள். மிகுந்த கஷ்டமும் வேதனையும் அடைந்து குற்றுயிராய்க் கிடந்த அந்த வாலிபனோ, தாயை நோக்கி, "அம்மா, எனக்குச் சாக பயமில்லை. அதோ பார். துரை அங்கே கிடக்கிறார்கள். அவர்கள் கிட்ட போய் ஏதா வது உதவி செய்யுங்கள்," என்று தன் துயரத்தைப் பாரா மல், தன் தலைவனாகிய ஊமைத்துரையின் தேவையையே அதிகமாகப் பாராட்டி, அன்பும், தலைவர் விசுவாசமுங் காட் டினான். அப்படியே தாயும் மற்ற ஸ்திரீகளும் ஊமைத்துரை விழுந்து கிடந்த இடம் சென்று அவருக்கு வேண்டிய பரி காரஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இதற்குள்ளே ஆங்கிலக் கட் சியைச் சேர்ந்து தங்கள் சொந்த இனத்தாராகிய பாஞ்சாலக் குறிச்சியாருக்கு விரோதமாய்ப் போர்செய்த எட்டியாபுரம் சமஸ்தான சிப்பாய்கள் ஓடிவந்தார்கள். ஊமைத்துரையை சூழ்ந்திருந்த பாஞ்சாலக்குறிச்சி ஸ்திரீகளோ, அவரை ஓர் துணியினால் முற்றிலும் மூடிவிட்டு, அவர் மரித்துப் போனது போல ஓலமிட்டு அழத் தொடங்கினார்கள். எட்டியாபுரம் சிப் பாய்கள் கிட்டவும், அவர்களிடத்தில், "எங்கள் மனுஷர்

ஒருவர் இறந்துபோனர், அதற்காக அழுகிறேம்,'' என்று சொல்லவும் அந்த சிப்பாய்கள் போய்விட்டார்கள். உடனே அவர்கள் ஊமைத் துரையைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு போய் பரிகாரஞ்செய்து, சுகப்படுத்தினர்கள்.

மேலும் இந்த சண்டைகளெல்லாம் நடந்த பல வருஷங்களிலும் பல கட்சி பட்டாளங்களும் இங்குமங்கும் கிராமங்களில் ஓடித்திரிந்து செய்த கொடூரத்தால் எங்கு பார்த்தாலும் கொள்ளைப்பறி, கொலை. வயலிலறுத்த தானியம் வீடு சேராதாம்.

காட்டிலே துரத்தப் பட்டோம்
கடூரமா யடிக்கப் பட்டோம்
கேட்டுருகினவரில்லை
கேள்வி கேட்பாருமில்லை.

என்பதாய் நம் ஏழை கிராமவாசிகள் வதைந்து வருந்தி நோக நேரிட்டது. இந்நாட்களிலும் நமது ஜனங்களடைகிற இம்சை, துன்பங்களும் இவ்வாறுதானே இருக்கின்றன. தீமையைப் பார்க்கமாட்டாத பரிசுத்தக் கண்ணனுகிய நமது பரம பிதாவே, நமது ஜனங்கள் தவித்துப் பதைப்பதைக் கண்ணுற்று நோக்கி நாம் நம் சுதந்திரத்தை சீக்கிரம் அடைய அருள் புரிவாராக.

இதெல்லாம் ஏன் விவரமாய்ச் சொல்லுகிறேன்? பாஞ்சாலக் குறிச்சியை அந்நியர் ஒடுக்கி அடக்க அவர்களைக் காட்டிகொடுத்து, அவர்களுக்கு கேடு செய்தது யார்? நம்மவர்கள் தானே! இப்படி நாம் நம்முடைய பிரிவினைகளினாலேயும், அந்நியர் சகாயத்தை நாடுவதினாலுந்தான் நம்

தேசம் கெட்டுப் போகிறது. வீரருக்குப் பஞ்சமோ? தன்னை தியாகம்பண்ணி, தன் தேசத்திற்கென்று சிறையிருப்பையும், நஷ்டங்களையும், மரணத்தையுங்கூட பாராமல், உடல் பொருள் ஆவி முற்றும் தத்தம்செய்து நமக்காகப் பாடுபடும் எத்தனை தேச பக்தர், பெரியோர் நமது தேசத்திலிருக்கிறார்கள். ஆனால் ஐயோ! சாதாரண ஜனத்திரளாகிய நாமோ, நம் பிரிவினைகளைப் பெருமையாகப் பாராட்டி, விசால மனதும், பெரும் புத்தியும், தயாள குணமும் இல்லாமல், பற்பல கட்சி களாக நம்மைப் பிரித்துக்கொண்டு, அந்நியருக்கு லாப மாகவும், நமது தேச முன்னேற்றத்துக்குக் கேடாகவும், ஐக்கியமில்லாமல் நடந்துகொள்ளுகிறோம். அந்தோ! நம் தேசபக்தர், தலைவர்கள் தியாகமும், சிறை, அடி, இம்சை முதலிய நமக்காகப்படுகிற பாடுகளும் வீணாய்ப் போகச் செய்வது தகுதியோ? என் ஜனமே, கேள். அன்பும் ஐக்கியமுமே உன் வாழ்வுக்கும் சீர் பொருந்துதலுக்கும் உன்னை நடத்தும் வல்ல கருவி.

> " அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
> என்பு முரியர் பிறர்க்கு."

திருக்குறள்.

இந்த இரகசியத்தை என்றும் மறவாதே.

நம்முடைய கிராமங்களில் ஐக்கியமின்மையினால் வரும் தீமைகளைத் தெளிவாகப் பார்க்கலாம். கிராமப் பஞ்சாயத் தாருக்குள் ஐக்கியமில்லாததினால், அல்லது ஆதிதிராவிடரை நாம் இகழ்ந்து, தூர விலக்கி, அவர்கள் மனதை புண்படுத்து வதினால் கிராமப் பள்ளிக்கூடங்கள் பல இடங்களில் பாழாய்ப்

போகின்றன. ஒரு கிராமத்தில் பஞ்சாயத்தாரின் தற்பெருமை சண்டையினால் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடம் வேர்க் கடலை கொட்டும் பண்டசாலையாய்ப் போய்விட்டது. இன் னொரு கிராமத்தில் ஆதிதிராவிடருக்கும் "மேல் ஜாதி" என் னப்பட்டவருக்குமுள்ள பிரிவினையினால், கிராமப் பள்ளிக் கூடம் விருத்தியடையாமல் கிழாய்ப் போய்க்கிடைக்கிறது. ஆதிதிராவிடரும் தங்களுக்கென்று வேறொரு பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிறு கிராமத்தில் இப்படி இரண்டு கட்சிப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்தால் எவ்வளவு வீண் செலவு! தகுந்த உபாத்தி மார் கல்விக்கு வேண்டிய சாதனங்கள் முதலியன சுதாரித் துக் கொள்வது இந்தத் தரித்திர நாட்டில் இலகுவாயிருக் குமோ? ஆனால் இவ்விதம் கட்சி விவாதஞ் செய்யாமல் அந் தக் கிராம ஜனம் முழுவதும் ஐக்கியமாய், முதல்தரமான ஒரே பள்ளிக்கூடத்தை சகலருக்கும் பொதுவாக ஸ்தாபனஞ் செய்தால், பிள்ளைகளின் கல்வி எவ்வளவு தீவிரமாய் முன் னேற்றமடையும்! இப்படி ஜனங்களை ஐக்கியப்படுத்தி, நல்ல உயர்தர பள்ளிக்கூடம் ஸ்தாபித்து, சுய நலத்தை நாடாமல் பொது ஜன நன்மையையே பிரதானமாகக் கருதுகிற உத்தம தலைவருள்ள ஓர் கிராமத்தையும் நான் அறிவேன். அந்தக் கிராமத்தில் இப்பொழுது கட்டாயப் படிப்பு வந்துவிட்டது. பிள்ளைகளுக்கு கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கிறார்கள்.

கல்வியின் முக்கிய நோக்கம் வயிற்றுப் பிழைப்பல்ல, நம்முடைய மானிட தத்துவம் பூரண விருத்தியடைந்து, சர்வ நற்குணங்களிலும், தெய்வ பக்தியிலும், பொது அறி விலும் நாம் முன்னேறுவதே மெய்க்கல்வியின் நோக்கம்.



தமிழ் நாட்டின் பூர்வீக சிற்ப அமைப்பின்படி கட்டப்பட்ட
திருப்பத்தூர் ஆசிரம ஜெபாலயம்.



ஆசிரம ஜெபாலய முகத்துவாரம்.

இந்த திவ்விய இலக்கை மறந்து, கல்வியின் மூலமாய் வயிற்றுப் பிழைப்பை நாடும் தற்கால வழக்கம் சரியன்று. பண்டையக்காலங்களில் நமது நாட்டின் பெரியோர் கல்வியை பூலோக சிற்றின்ப லாபத்திற்கு ஏதுவாகக் கையாடவில்லை. கல்வியொருபக்கம், நமது நடவடிக்கை இன்னொரு பக்கம், என்றிருக்கக்கூடாது.

கற்கக் கசடறக் கற்பவை—கற்றபின்
நிற்க வதற்குத் தக திருக்குறள்.

விவசாயம், வியாபார விஷயங்களிலும் ஐக்கியமின்மையினால் நமக்கு அதிக நஷ்டமுண்டாகிறது. விவசாய அபிவிருத்திக்காக சாஸ்திர அறிவின்படி தற்காலத்தில் எத்தனையோ நூதனமான விவசாய முறைகள், யந்திரங்கள், பயிர் செழித்தோங்கி நல்ல மேனி யுண்டாகச்செய்யும் புதுவிதமான உரம், முதலியனவைகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேலும் நதி, குளங்கள் முதலிய நீர்வளமில்லா இடங்களில் நல்ல வற்றா ஊற்றுள்ள ஆழ்ந்த கிணறுகள் தோண்ட, புன்செய், நன்செய் முதலிய வயல்களுக்குத் தண்ணீர் இலகுவாய் ஓடும்படிச் செய்ய பலவித தற்கால யந்திரங்களுமுண்டு. இதற்கெல்லாம் பணம் வேண்டும். தனித்தனியாக ஓர் குடியானவன் இந்தத் தற்கால விவசாயக் கருவிகளை சுதாரித்துக் கொள்ளுவது கூடாத காரியம். ஏருக்கு அவசியமான ஒரு ஜதை நல்ல காளைகள் வாங்குவதற்கே அவனுக்கு வழி இல்லையே. இதனால் கிராம ஐக்கியமும், கூட்டுறவும் இன்றியமையா அவசியம். கடன் வாங்காமல் சிக்கன முறைமைகளைக் கையாடி பணத்தை மீத்தச் செய்து கூட்டுறவு நாணய நிதிகள் ஸ்தாபிப்பது மிக அவசியம்.

பல இடங்களில் பெய்கிற மழைத்தண்ணீர்கூட ஏரியில் சரியாய்ப் போய்ச்சேர வழியில்லாமல், ஏரிக் கால்வாய்களெல்லாம் நாகதாளி முதலிய முட் செடிகள் வளர்ந்து மூடி, பாழாய்க் கிடக்கின்றன. ஏரிக்கரைகளும் இடிந்து தவிர்ந்து, முட்செடிகளால் நிறைந்து, அநேக வருஷங்களாய் பழுது பார்ப்பவரில்லாமல், அசட்டை பண்ணப்பட்டிருக்கின்றன. சர்க்காருக்கும் இதைப்பற்றி எதுவும் அக்கரையைக் காணோம். அவர்களிடத்தில் சொல்லப்போனால் இதெல்லாம் "குடி மாராமத்து", கிராமத்தார் தாங்களே முட்செடிகளையெல்லாம் வெட்டி கால்வாய்களைச் சுத்தம் பண்ணவேண்டுமென்று சொல்லி தங்கள் கைகளைக் கழுவி விடுகிறார்கள். இரண்டு நேரம் வயிறாரக் கூழும் கீரையும் கிடைப்பதே கஷ்டமாயிருக்கும் இக்காலத்தில் "குடி மாராமத்து" என்கிற மந்திரம் சர்க்கார் ஓதிவிட்டால் காரியம் நடந்துவிடுமோ? மெய்யான உத்தம இராஜாங்கம் தன் பிரஜைகளுக்குப் பெற்ற தாய்போலிருந்து, அவர்களின் செல்வாக்கையல்லவோ பிரதானமாகக் கருதவேண்டும். ஒரு நாட்டின் ஐக்கியத்திற்கும் கூட்டுறவுக்கும் அதின் இராஜாங்கந்தானே தலையாய் நின்று கூட்டுறவின் மெய்ச் சொரூபமும் முன்மாதிரியுமாயிருக்க வேண்டும். ஜன சமுதாயக் கூட்டுறவே சத்திய அரசியல்.

வியாபாரத்திலும் ஐக்கியமுங் கூட்டுறவும் இல்லாததினால் நாம் பல விஷயங்களில் நஷ்டமடைகிறோம். மேல் நாட்டில் டென்மார்க்கு என்ற ஓர் சிறு தேசமுண்டு. அதின் ஜனத்தொகை உத்தேசம் 30 லட்சந்தான். அதாவது நமது

தமிழ் நாட்டில் ஒன்றரை ஜில்லாவுக்குத்தான் சமமாகும். எனினும், கூட்டுறவினால் அவர்கள் தங்கள் விவசாயம், வியாபாரம் முதலியவைகளில் மிகவும் விருத்தியடைந்திருக்கிறார்கள். அத்தேசத்தில் ஓர் குடியானவன் தன் வயலில் விளைந்த தானியங்களை அல்லது தன் வீட்டில் சேர்ந்த வெண்ணெ, கோழிமுட்டை முதலியனவற்றைத் தானே தனியே விற்க மாட்டான். தான் விற்க விரும்புகிற வஸ்துக்களையெல்லாம் தன் ஊருக்குப் பக்கத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தார் பண்டசாலையில் கொண்டுபோய்ச் சேர்ப்பான். அச் சங்கத் தலைவர்கள் பற்பல இடங்களிலும் உள்ள வியாபார விலைகளை நன்கு விசாரித்து எவ்வளவுக்கதிக லாபமாகப் பொருட்களை விற்கக்கூடுமோ, அவ்விதமாகத் தங்களிடத்தில் குடியானவர்களால் ஒப்புவிக்கப்பட்ட பொருள் தானியங்களை விற்று, சொந்தக்காரருக்குப் பணத்தைச் செலுத்துவார்கள். இதனாலே சமுசாரிக்கு இருவித முக்கிய அனுகூலங்களுண்டு. இடைவழித்தட்டு வியாபாரி அவசியமில்லாததால் குடியானவனுக்குண்டான லாபமெல்லாம் குறைவர அவனையே சேருகிறது. கூட்டுறவுச் சங்கத்தார் வியாபார விஷயங்களில் சாமர்த்தியமாய் நாலா பக்கமும் விசாரித்து விற்பனை செய்வதால் குடியானவன் பொருள்களுக்கும் சரியான விலை கிடைக்கிறது.

மேற்கூறியதோடு இப்பொழுது நமது கிராமங்களில் நடக்கிறதைக் கவனித்துப் பாருங்கள். வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் தாலுக்காவில் ஏராளமான வேர்க்கடலை விளைகிறது. வேர்க்கடலையை வயலில் சேகரித்தவுடனே நடுவியாபாரி வந்து விடுகிறான். ஒன்றும் தெரியாத குடியானவ

னிடத்தில் இந்த நடு வியாபாரி வேர்க்கடலையெல்லாம் உடனே வாங்கி, சேகரித்துக் கொள்ளுகிறான். அதன்பின், ஐரோப்பா தேசத்து வியாபாரிகளின் காரியஸ்தர்களாகிய ராலி பிரதர்ஸ் என்ற வியாபாரிகள், இந்த நமது நாட்டு நடு வியாபாரிகளிடம் ஏராளமான கடலைக்காயை வாங்கி, பிரான்ஸ் தேசத்துக்கு கப்பலேற்றி அனுப்பிவிடுகிறார்கள். பிரான்ஸ்தேசத்தில் அந்த வேர்க்கடலையை யந்திரங்களின் மூலமாய் எண்ணெய், பிண்ணாக்காய்ப் பிரித்துவிடுகிறார்கள். எண்ணெயிலிருந்து மோட்டார் எண்ணெய், சவுக்காரமும், பிண்ணாக்கிலிருந்து நிலத்திற்கு உரமும், வேர்க்கடலையிலிருந்து தின்பண்டங்கள் முதலியனவும் செய்து, திரும்பவும் நமது தேசத்துக்கே விற்பனையாக அனுப்பிவிடுகிறார்கள். இதினால் வரக்கூடிய லாபத்தை நாம் எப்படி இழந்து போகிறோம் என்பதை நான் விவரிக்க வேண்டியதில்லை. இப்படி விவசாயப் பொருள்களாகிய தானிய முதலியவற்றை கடைப்பொருளாக நாமே மாற்றாமல் ஏராளமாய் அன்னிய நாட்டுக்கனுப்பி தொழிலில்லாமல் நஷ்டமடைகிறோம்.

இங்கே கதரைப்பற்றி சற்று பேச விரும்புகிறேன். யந்திர ஆலைகள் பெருகி அவைகளினால் துரிதமாய் ஏராளமான நூல் நூற்கவும், வஸ்திரம் நெசவு செய்யவும் இலகுவாயிருக்கிற இக்காலத்தில், கதர் உடுத்துவது பலருக்கு மூடத்தனமாய் தோன்றலாம். ஏனென்றால் யந்திர ஆலைகளிலிருந்து (மில்களிலிருந்து) வருகிற நூலும் துணியும் விலை குறைந்திருக்கின்றன. அவ்வகைத்துணி, இராட்டினத்தில் நூற்று நெசவு செய்யப்பட்டதைப் பார்க்கிலும் பார்வைக்கும் உடுப்பதற்கும்

பிரியமாய்த் தோன்றுகின்றன. எனினும், நான் சொல்லும் சில காரியங்களை கவனித்து நிதானிக்கும்படி தாழ்மையாய்க் கோருகிறேன். யந்திரங்கள் மேல்நாடுகளிலிருந்து இங்கு விற்பனையாகின்றன. நமது நாட்டிலுள்ள நூல் நூற்கிற அல்லது நெசவு செய்கிற யந்திர சாலைகளும் அநேகமாய் அயல் நாட்டார் வசமே இருக்கின்றன. சிற்சிலதான் இந்தியர்களுக்குச் சொந்தம். இதனால் லாபமெல்லாம் அந்நியருக்கே போய் விடுகிறது. மேலும், நமது ஜனங்கள் உடுக்கிற ஏராளமான வஸ்திரங்கள், நெசவு செய்ய உபயோகப்படுத்துகிற நூல், அந்நிய நாடுகளிலிருந்தே இங்கு கொண்டுவரப்பட்டு விற்பனையாகின்றன. யந்திரங்களால் இவைகள் துரிதமாய்ச்செய்யப் படுகிறதால், நமது நாட்டில் கைத்தொழிலால் செய்யப்படுகிற நூல், வஸ்திரங்களைப் பார்க்கிலும் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. ஆனால் இவைகளுக்காக நாம் கொடுக்கிற பணமெல்லாம் அந்நிய நாட்டுக்கே போய்விடுகிறது. வருஷத்திற்கு 63 கோடி ரூபாய் நாம் வாங்குகிற வஸ்திரத்தால் நம் தேசத்திலிருந்து அந்நிய நாட்டிற்குப் போய்விடுகிறது. இதைத்தவிர நூலுக்கு நம் தேசத்தைவிட்டு போகிற பணம் வேறே. அந்நியருக்கு நம்மால் தொழிலும் பிழைப்பும் உண்டாகின்றன. வேலை இல்லாமல் தவிக்கும் நமது ஜனங்களுக்கோ தொழிலில்லாமற் போகிறது. விவசாயம் செய்பவர்கள் மழை பெய்யாத வெயில் காலங்களில், வருஷத்தில் பாதியில் அடிக்கடி வேலையில்லாமல் தரித்திரமடைகிறார்கள். இப்படிக் கஷ்டப்பட்டு வருந்துங் காலங்களில், இராட்டினம் நூற்று நெசவு செய்தால், எத்தனையோ பேருக்கு ஏதாவது பிழைப்புக்கு ஆதாவாகும்! குடியான ஜனங்கள் தங்களுக்கு

விவசாய முதலிய மற்ற வேலை இருக்கும்போது அதை அசட்டை செய்து, நூல் நூற்று நெசவு செய்யவேண்டுமென்று நான் சொல்வதில்லை. வேலையொன்றுமில்லாமல் சும்மா இருந்து வீண் நேரம் போக்கும் காலங்களில், அதற்குப் பதிலாக ஏன் நூல் நூற்க அல்லது நெசவு செய்ய முடியாது? நம்முடைய தேசத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் இப்படி வீண் நேரம் போக்குகிறார்கள். இந்தப் பெரிய ஜனத்திரள் சும்மாவிருக்கிற நேரத்தில் மாத்திரம், சிலர் நூற்கவும், சிலர் நெசவு செய்யவும், இப்படி வேலை செய்தால், எவ்வளவு நூல், எவ்வளவு வஸ்திரம் நமக்குண்டாகும். இராட்டினம் நூற்க சாவகாசம் இல்லாத வேளைகளில் தக்கிலிவைத்து நூற்கலாம். இப்படி கையால் நெசவு செய்யப்பட்ட கதர் துணிக்கு அதிக விலை கொடுத்து வாங்கினாலுங்கூட, அந்த பணம் நமது ஜனங்களுக்குள்ளேயே சுற்றி வருவதினால் நமக்கு நஷ்டமில்லை. ஓர் குடியானவன் தன் ஊர் கைத்தொழில் நெசவுக்காரனுக்குக் கொடுக்கிற பணம், அவன் தன் தானியம் முதலிய விவசாயப் பொருள்களை நெசவுக்காரனுக்கு விற்கும்போது, திரும்பவும் தன் பணம் தனக்கே வந்து சேருகிறது. அயல் நாட்டு ஆலை (மில்) துணிக்கும் கொடுக்கிற பணமோ, கடல் தாண்டித் தூர தேசம் போய்விடுகிறதினால் திரும்புகிறதில்லை. இதினால்தான் மகாத்மா காந்தி கதரைப்பற்றி அவ்வளவு உற்சாகத்தோடும் அக்கரையோடும் பிரசாரம் செய்கிறார். தற்காலத்தில் ஒரு வேளை சில இடங்களில் போதுமான கதர் துணி கிடையாமல் இருக்கலாம். அப்படியானால் நெசவுக்காரரால் இந்தியர்களுக்குச் சொந்தமான ஆலைகளில் செய்யப்பட்ட சுதேசி துணியை

மாத்திரம் வாங்கி உடுத்துங்கள். யந்திரங்களெல்லாம் நமது தேசத்திலேயே செய்யப்படும் நாள் வரும்போது, ஒரு வேளை கதர் துணி உடுத்த அவசியமிராது. ஆனால் அதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ! தற்காலத்தில் கதர் உடுக்கிறதே நாம் நமது ஏழை தேசத்தினருக்கு உதவி புரிவதாகும். கதர் கிடையாவிட்டால் உடுக்கிறதற்கு மிக அவசரமாய் வேண்டிய துணி தவிர வேறு வாங்காது உங்கள் தேவையை மட்டுப் படுத்துங்கள்.

வஸ்திரம் மாத்திரமல்ல, நம் குடும்பத்துக்குத் தேவையான சிற்சில சாதாரணப் பொருள்களைக்கூட தூர தேசங்களிலிருந்து நாம் தருவித்து வாங்குகிறோம். சிறிய கத்தி, சொக்காய்க்குத் தைக்கிற பித்தான், விளக்கு, எழுதுகோல், மை, காகிதம், விளையாட்டு சாமான்கள், பூட்டுத் தாழ்ப்பாள்கள், பாத்திரங்கள், சவுக்காரம் இப்படி எத்தனையோ நம் தேசத்திலேயே நாம் செய்யக்கூடிய சாதாரண பொருள்களெல்லாம் அந்நிய நாட்டிலிருந்து நமது நாட்டுக்கு வந்து ஏராளமாக நமக்கு விற்பனையாகின்றன. நாம் ஐக்கியமாயிருந்து, சர்க்காரும் நம்மை உற்சாகப்படுத்தி ஆதரித்து, இப்பொருட்கள் நம் நாட்டிலேயே செய்யப்பட்டு, அவற்றை நாம் உபயோகித்தால் எத்தனை ஏழை ஜனங்களுக்கு பிழைப்புண்டாக்கும். மேல் நாடுகளிலும், ஜப்பான் தேசத்திலும், கைத்தொழில் விர்த்தியடைய ராஜாங்கம் பின்னின்று பண உதவி செய்கிறது.

நம் நாட்டில் விளைகிற தேயிலை, கோக்கோ முதலியனவை கூட இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்பப்பட்டு, நன்னைக்

கவரத்தக்க விதமாய்த் தகர டப்பாக்களிலும், பல வருண காகிதங்களிலும் நன்றாக அடைத்து கட்டப்பட்டு திரும்ப வும் இங்கு கொண்டுவரப்பட்டு நமக்கே விலையாகின்றன. இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு விலையாக வருகிறபொருள் களின் நிமித்தம் வருஷம் 110½ கோடி ரூபாய் இங்கிலாந் திற்குக் கிடைப்பதால் இந்தியாவிற்கு சுயராஜ்ஜியம் கொடுத்து விட்டால் இங்கிலாந்திற்கு பெரிய நஷ்டமாகுமென்று ஓர் ஆங்கிலப் பிரபு கூறி ஆசேஷபிக்கிறார். நாம் இந்தியாவை ஆளுவது உண்மையாக நமது ஆங்கிலதேச லாபத்திற்கே யென்று ஸர் ஜாயின்ஸன் ஹிக்ஸ் என்ற ஆங்கிலத் தலைவர் கூறியிருக்கிறார்.

பெரியோர்கள், புத்திமான்கள், செல்வாக்குடையவர் கள் சிலர் எல்லாம் துறந்து, ஏழை கிராமவாசிகளாகிய உங்களுக்குச் சகாயஞ் செய்து, பிழைப்புண்டாக, உங்கள் நிமித்தமே அன்பினலேவப்பட்டு கதர் உடுத்தினலும் கூட, ஐயோ, நீங்களோ ஒன்றும் உணராத பாலகர்போல் அந்நிய நாட்டு வஸ்திரம் தரிக்கவும், தூரதேசப் பொருள்களை விரும்பி வாங்கி உங்களை நஷ்டப்படுத்திக் கொள்ளவும், இவ்விதமாக புத்தி ஈனமாய் நடந்துகொள்ளுகிறீர்கள்! இது உங்களைச் சிநேகித்து தங்களை தியாகஞ் செய்கிற தேச பக்தருக்கு எத்தனை மன வேதனை யுண்டாக்குகிற தென்பதைச் சற்று கவனியுங்கள்.

கதர் உடுத்துதல் ஒருவன் தன்னை ஏழைகளோடு ஐக்கி யப்படுத்திக் கொள்வதற்கு ஓர் சிறந்த அறிகுறி.

## வரவு செலவு முன்திட்டம்.

இந்திய சர்க்காரின் வரவு செலவு முன்திட்டம் எல்லாம் கணக்காய்த்தான் போடுகிறார்கள். ஆனால் அது பொது மக்களின் வருமானத்தோடு அனுதாபம் காட்டாமலிருக்கிறது. பாமரமக்களின் முன்னேற்றத்தைக்கருதி விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளைப் பிரதானமாகக் கையாடாமல் அதிகாரிகள் வரவு செலவு திட்டம் செய்து விடுகிறார்கள். கடந்த இரண்டு மூன்று வருஷங்களில் கிராம முன்னேற்றத்திற்கென்று சர்க்கார் சிறிய தொகை கொடுத்து வருகிறார்கள். ஆனால் உத்தியோகஸ்தர் சம்பளம், இராணுவம் முதலியன வற்றிற்கு செலவிடுவதோடு ஒப்பிட்டால் இது மிகவும் அற்பமே. ஒரு மூலைக்குக் காணாது. இது ஒன்றுதான், இதர நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உள்ள வேற்றுமை. மேற்கூறிய வேற்றுமை இருப்பின் ஒற்றுமைக்கு வழி உண்டோ?

பிரிட்டன், தான் உற்பத்தி செய்யும் கைத்தொழில் பொருட்களுக்கு ஒரு நல்ல விற்பனை ஸ்தலமாக இந்தியாவை வைக்க விரும்புகிறது. இந்தியாவோ, தனக்குரியவற்றைத் தானே தேடிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு, தன் வியாபாரப் பொருட்களுக்குப் பாதுகாப்பை நாடுகிறது. சில விஷயங்கள் நாம் கவனிக்கவேண்டியவை. நம் நாட்டின் பொருளாதார விஷயங்கள் இந்தியாக் காரியதரிசியாகிய ஆங்கில அதிபதியால் கண்காணிக்கப் படுகின்றமையால்,

(1) பணம் இந்தியர் வசம் இல்லை.

(2) ஒரு இந்தியனின் சாரசரி வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அரசாங்கச் செலவு மற்ற நாடுகளைவிட அபாரமாயிருக்கிறது.

(3) இந்திய ராணுவச் செலவு, பெரியவல்லரசான ஜப்பானின் ராணுவச் செலவிலும் அதிகமாக இருக்கிறது.

(4) அரசாங்கத்தாரால் தேச மக்களின் க்ஷேம வாழ்க்கை பெருகவில்லை.

(5) தேசக் கடன்தான் அதிகரித்துக்கொண்டே போகிறது.

1900-ல் 307 கோடி ரூபாய் கடன், 1934-லோ 1210 கோடி ரூபாய் தேசக்கடன். கிராமத்தார் கடன் மொத்தம் 950 கோடி ரூபாய். ஆளுக்கு சராசரி ரூபாய் 50 கடன். இப்படி ஏராளமாக சர்க்கார் வாங்குகிற கடன் பணமும் மக்களின் பிழைப்புக்காதாரமான வகையாகச் செலவு செய்யப் படவில்லை.

இந்தியாவின் தீர்வை வருமானம் மிகக் குறைவு என்று ஒரு சாக்கு சொல்லப்படுகிறது. ஆனால் ஒரு இந்தியனின் சராசரி வருமானத்தின்படி ஒப்பிட்டுப் பார்த்தால் இது குறை வாகுமா?

ஆங்கில தேசத்தாரோடு ஒப்பிட்டால் ஓர் இந்தியன் வரும்படி பதிமூன்றிலொன்று. அமெரிக்கனோடு ஒப்பிட்டால் இந்தியனின் வரும்படி இருபத்தைந்தில் ஒன்றுதான்! நமது தேச பாமரமக்களின் கடுந்தரித்திரத்தைப் பார்த்தால் நன்கு வாழும் இதர தேசத்தில் இப்படி வருமானம் குறைந்த தரித் திரருக்கு வரியே போடமாட்டார்கள்.

மேலும் விவசாயப் பொருட்கள் விலை குறைந்தும், நில வரி முன்போலவே யிருக்கிறது. இதினால் பயிர்த் தொழிலாளி நஷ்டமடைகிறான். உத்தியோகஸ்தருக்கு, வியாபாரிகள்

முதலியனருக்கு வருமானத்தின்பேரில் வரி. ஆனால் விவசாயிக்கோ விவசாயப் பொருள் விலை குறைந்துவிட்டதால் வருமானம் குறைந்தாலும் முன்போலவே வரி போடப்படுகிறது. இது அநியாயமல்லவோ?

# முடிவுரை.

நான் இந்தச் சிறு புஸ்தகத்தை முடிக்குமுன், நமது நாடு சீர் பொருந்த உதவியாயிருக்கும் சில காரியங்களைக் குறிப்பிட்டு சொல்லி முடிக்கிறேன்.

அடிமைச் சிந்தையினால் தோன்றும் பயத்தை அகற்றி விடுங்கள். புருஷராயிருங்கள். நம்மை நாமே, அதாவது நம்முடைய சுய ஜனத்தையே நாம் கனம் பண்ணாவிட்டால், அந்நியர் நம்மை எப்படி கனம் செய்வார்கள்? வெள்ளை நிறம் தான் அழகு; கறுப்பு நிறம் அழகல்ல; என்ற இந்த தப்பித மான எண்ணத்தை முற்றிலும் அகற்றிவிடுவோம். கறுப்பும் அழகுதானே!

"மையோ மாகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ! இவன் வடிவென்பதோராழியா வழகுடையான்"

என்று கம்பர் ராமர் நிறத்தை வருணிக்கவில்லையா?

சில வருடங்களுக்குமுன், விருந்தாளியாக வந்திருந்த எங்களுடைய ஐரோப்பிய சிநேகிதர் ஒருவரை ஒரு கிராமத்துக்குக் கூடகூட்டிக் கொண்டு போயிருந்தோம். அநேக வருஷங்களாய் கிராமவாசிகளுக்காக வைத்திய வேலை முதலியனவற்றால் நாங்கள் தொண்டு செய்து வருவ

தினுல் அவர்கள் எங்களை நன்கறிந்தும், எங்களை அவர்கள் சட்டை செய்யாமல் புதிதாய் வந்திருந்த எங்கள் ஐரோப்பிய நண்பரையே சூழ்ந்துகொண்டு மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். எங்கள் நண்பருக்கு அவர்கள் செய்த உபசாரம் எங்களுக்கு மிக சந்தோஷமே. ஆனுல், அப்படி அவர்கள் செய்ததின் உண்மையான காரணத்தை ஆழ்ந்து யோசிக்குங் கால், எங்கள் மனம் புண்ணுய் வருந்தியது. எங்களி லொருவர் இதைக் குறித்து அவர்களிடத்தில் விசாரித்த போது, அவர்கள், "அந்தத் துரையின் மேனியைப் பாருங் கள், செவ்வேறென்றிருக்கிருரே!" என்று கூறித் தாங்கள் செய்த உபசாரணைக்கு முக்கிய காரணமாயிருந்ததை வெளிப் படுத்தினுர்கள். பொதுவாக வெள்ளை மனுஷருக்குக் கறுப்பு மனுஷரென்ருல் இகழ்ச்சிதான். ஆனுல் மற்றவர்களால் இகழப்படுவதினுலல்ல. ஒருவன் தன்னைத்தானே இகழ்வதி னுல்தான் அழிந்து போகிருன். தன்னையே இகழ்பவனுக்கு விமோசனமில்லை. இவன் மனதார தன்னை அடிமையாக்கிக் கொள்கிருனே. சரீர அழகின் முக்கிய குறி உறுவமுழுவதின் அமைப்பிலேயே. வெறும் நிறத்திலல்ல.

பயத்தை உங்கள் மனதைவிட்டுத் தூர அகற்றிவிடுங்கள். நாசியிலே சுவாசத்தை வைத்திருக்கிற மனிதனுக்குப் பயப்பட வேண்டாமென்று கிறிஸ்துவ வேதமொழி கூறுகிறது. நாம் பயப்படத் தக்கவர் கடவுள் ஒருவரே. மரணமும் ஜீவனும் அவர் கையில் இருக்கிறது. அவருக்கு பயப்படுகிற பயமும் அடிமையின் நெஞ்சத்திலிருந்து சுரப்பதல்ல. தெய்வன்பினுல் ஏவப்பட்ட மனம், தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள்,

மேலுள்ள அன்பினால் எப்படி அவர்களுக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்ய அஞ்சுமோ, அவ்விதமாகவே நமக்கு அன்னை யும் அப்பனுமான ஈஸ்வரனுக்குத் துரோகஞ் செய்ய அஞ்சி நடுங்கும்.

"அன்னையப்பன் என் ஆவித்துணை",

என்றும்,

"எத்தன்மைக்குற்ற மியற்றிடினுந்தாய் பொறுக்கு
மத்தன்மை நின் அருளுமன்றோ பராபரனே".

என்றும், தாயுமானவர் கடவுளைக் குறித்து பாடியிருக் கிறாரல்லவோ? இப்படி நமது பரமபிதா தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல கருணை கூறும்போது, பேய் பிசாசின் பயம் நமக்கினியேன்?

கடவுளைப்பற்றி இப்பேர்ப்பட்ட மெய் அறிவு, நம் பிக்கை நமக்குண்டாகும்போது, மனுஷருக்குப் பயப்படுகிற பயமும் ஓடிப்போகும். கடவுள் நமது பட்சத்திலிருந்தால், மனுஷன் நமக்கு ஏது தீங்கு செய்யமுடியும்? இந்த மெய் நம்பிக்கை தெய்வ பக்தியினால்தான், உத்தம தேச பக்தர்கள், இப்பூலோக அதிகாரிகளின் யுத்தாயுதங்களின் பயங்கர வல்ல மையையும், அடி மிதிகளையும், சிறையிருப்பையும் ஒரு பொருட் டாகச் சட்டைசெய்யாமல் தைரியமாய் அநியாயத்தையும், இப்பூலோக அதிபதிகளின் மிரட்டல்களையும் வீரியமாய் எதிர்க்கிறார்கள். ஆனால் ஐயோ! நமது ஏழை கிராம ஜனங் கள், ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன், போலீஸ்காரன், அல் லது வெள்ளை மனிதரைக் கண்டால் எவ்வளவு இலகுவாய் மிரண்டு பதறுகிறார்கள். செங்கல் அறுத்துக் கொண்

டிருந்த சில கூலியாட்களை, மழை கிட்டி வருவதாய்த் தோன்றினதால் அவர்கள் முதலாளி, அறுத்த செங்கல்களை பக்கத்திலிருந்த கொட்டகையில் துரிதமாய் அடுக்கும்படி கட்டளை கொடுத்தார். அவர்கள் கேட்காமல் தாமதித்துக் கொண்டிருந்தார்கள். அவர் கூடவிருந்த ஒரு ஐரோப்பிய சிநேகிதர் மிகுந்த சாதுவானவர் சமீபத்தில் போய் மழை கிட்டி விட்டதால் செங்கல் அறுக்கிறதை அவர்கள் உடனே நிறுத்த வேண்டுமென்று சொல்லவும், கூலியாட்களெல்லாம் ஓட ஆரம்பித்தார்கள். ஏன் இப்படி ஓடுகிறீர்கள்? என்று ஒருவர் விசாரித்தபோது, "பயமாய் இருக்குது; துரை அடித்துப் போடுவார்," என்று உத்தரவு சொன்னார்கள்! எந்த நிறமுள்ளவராயினும், எந்த உத்தியோகஸ்தராயினும் மனிதர் மனிதரே. நீங்களும் மனிதர்தான். ஏன் இந்த பயம்? ஓடுகிற நாயைக் கண்டால், முடுக்குகிற நாய்க்குத் தொக்கு, என்ற பழமொழி போல், கோழை நெஞ்சனைக் கண்டால், முரடன் வீரியம் கூடுகிறது. நாம் சத்தியத்திலே நடக்கிறமட்டும் ஒரு மனுஷனுக்கும் பயப்பட வேண்டியதே இல்லை.

கல்வியைப் பிரதானமாய் நாடுங்கள். பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் கட்டாயப்படிப்பிருக்கும்படி ஒழுங்கு செய்யுங்கள். பகலில் வேலை செய்பவர்களுக்காக இராப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துங்கள். சீன தேசத்தில் உயர்தரக் கல்வி கற்கும் வாலிபர் பிரதிபலனை எதிர்பார்க்காமல் தொழிலாளிகளாகிய சாதாரண ஜனங்களுக்கு உற்சாகமாய்க் கற்றுக்கொடுக்கிறார்கள். பெண்கள் கல்வி மிக

அவசியம். தாய் கற்றிருந்ததின் அருமை தெரிந்தால்தான் பிள்ளைகள் படிக்க அக்கறை யெடுப்பாள்.

ஒளி சித்திரப் படங்கள் மூலமாய் கல்வி, பொது அறிவு சாதாரண ஜனங்களுக்குள் துரிதமாய்ப் பரவச்செய்துவிடலாம்.

உங்கள் தாய்பாஷையைக் கற்று, திருத்தமாய்ப் பேசி, அபிமானத்தோடு அதை கனம் செய்யுங்கள். ஒரு கிராமத்தில் நாங்கள் ஒருவனுடன் பேசும்போது, தினந்தோறும் மோட்டார் வண்டி காலை எட்டு மணிபோல் போரம்பட்டில் "மீட்டிங் செய்யும்" என்றான். "மீட்டிங்" என்றால் என்னவென்றதற்கு, மோட்டார் வண்டி "சார்ட்" பண்ணும் என்றான். ஏன் இப்படி ஆங்கிலேய பதங்களை தவறாய் உபயோகப்படுத்துகிறாய்? என்றதற்கு, ரெயில் வண்டியென்றால் பட்டணவாசிகள் பட்டிகாட்டானென்று இழிவாய்ப் பேசுவதால், அவர்களைப் போல் பேச "எக்கஸ்பிரஸ்" என்றும், மற்றுஞ் சில ஆங்கிலப் பதங்களையும் படித்துகொண்டதாகச் சொன்னான்! இன்னும் அநேக ஆங்கிலேய பதங்கள் தெரிந்தால் கிராமத்தாருக்குள் அவனை பட்டணக்காரனென்று சிறப்பாய் அழைப்போமென்று அவனுடனிருந்த ஒரு கிழவி சொன்னாள்!

பாடசாலைகளில் உபாத்திமாரும் பிள்ளைகளோடு ஆங்கிலேய பதங்களை உபயோகிக்க அதிக ஆசைப்படுகிறார்கள். ஒரு நாள் காலை நாங்கள் ஒரு பாடசாலைக்குள் புகுந்தவுடன் எல்லாப் பிள்ளைகளும் "குட் ஈவ்னிங் சார்" என்றார்கள்! சாதாரணமாய் உபாத்திமாரும், "ஸிட், ஸ்டாண்ட்" முதலிய ஆங்கிலேய வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். கூட்டல் கழித்தல் தெரியுமா? என்றதற்கு, உபாத்தியாயர் பெருமை

யுடன், பவுன், ஷிலிங், பென்ஸ் கூட்டல், கழித்தல் கணக்கு களும் தெரியும், என்றார்!

தாய் பாஷையே தமிழ்நாட்டிலுள்ள கச்சேரிகள், உயர் தரக் கலாசாலைகள் முதலியனவற்றிற்கும், அரசியல் காரியங் களுக்கும் பிரதான பாஷையாகும்படி ஒரேபிடியாய் முயற்சி செய்யுங்கள். இப்படியாகுமட்டும் நமது தமிழ் நாட்டில் தமிழ் பாஷை பிரயோஜனமானதும், மதிப்பிக்கப்படுவது மாகாது.

கள், சாராயக் கடைகளை அடியோடே எடுத்துவிட பிர யாசம் செய்யுங்கள். இல்லாவிட்டால் ஜனங்கள் சோதனைக் குள் தவறிவிழ ஏதுவாயிருக்கும். கள் குத்தகை எடுக்க வேண்டாம். கள் இறக்க மரங்களை குத்தகைக்கு விடவேண் டாம். கள், சாராய வியாபாரஞ் செய்யவேண்டாம். மது பானம் செய்கிறவர்களோடு அன்போடு பேசி, கெஞ்சி, கள் சாராயக் கடைகிட்டே போகாதபடி அவர்களைத் தடுங்கள். இனி மதுபானம் செய்யமாட்டோமென்று அவர்கள் வாக் குறுதி செய்யுமட்டும் விடாதேயுங்கள்.

கதர் உடுத்துங்கள். நெசவு வேலை செய்வோர் இராட் டின நூலையே உபயோகப்படுத்துங்கள். கதர் கிடையாமற் போனால் உங்கள் ஊர்ப் பக்கங்களில் கையால் நெசவு செய் யப்படுகிற துணி வாங்குங்கள். இராட்டின நூல், கையால் நெசவு செய்யப்பட்ட துணி முற்றிலும் கிடையாமற்போனால் மாத்திரம், இந்தியர்களுக்குச் சொந்தமான யந்திர ஆலைகளில் நூற்கப்பட்ட நூலால் நெசவு செய்யப்பட்ட சுதேசித் துணி மாத்திரம் உபயோகியுங்கள்.

சும்மா வீண் நேரம் போக்காமல், இராட்டினம் அல்லது தக்கிலி வைத்து நூல் நூற்கவேண்டும். அல்லது மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக ஏதாவது வேலை செய்யுங்கள்.

ஐரோப்பியர்மாதிரி உடுத்தி இருப்பவர்களையும் வெள்ளை நிறமுடையவர்களையும் மரியாதை செய்து சுதேச வஸ்திரம் தரித்தவர்களையும் கறுப்பு நிறத்தவர்களையும் இகழ்ச்சியாக எண்ணும் துர் வழக்கத்தை விட்டுவிடுங்கள்.

உங்களால் கூடியமட்டும் நமது தேசத்தில் செய்யப்பட்ட சுதேசிப் பொருட்களையே எல்லா காரியங்களுக்கும் உபயோகப்படுத்துங்கள். நமது நாடு இந்த தரித்திர ஸ்திதியிலிருக்கும்போது, அவசியமில்லாத வஸ்திரம், பொருட்களை உபயோகிக்கவேண்டாம்.

தீண்டாமையை அகற்றுங்கள். நமது சொந்த ஜனமாகிய பலரைத் தூர விலக்கி, அவர்களுக்குப் பள்ளிக்கூடம், கிணறு முதலியவை பிரத்தியேகமாய் ஏற்படுத்தி, அவர்கள் மனதைப் புண் படுத்தி, நமக்குச் சத்துருக்களாக்கிக்கொள்ளுவதால், எப்படி தேசப்பிரிவினையும், நமக்கு நஷ்டமும், அந்நியர்களுக்கு இலாபமுமாகிவிடுகிறதென்று முன்னமே விவரித்துவிட்டேன். ஆதலால் நமதுதேசத்தினர் யாவரையும் சகோதரர் சகோதரிகளாக எண்ணுவோம். "தீண்டா ஜாதி" என்று தப்பிதமாய் சொல்லப்படுகிற என் சகோதரர் சகோதரிகளே, நீங்களும் மற்றவர்களுக்கு இடையூறாயிருக்கும், தானாய் செத்த மிருகத்தை உண்ணுதல், மதுபானம் அருந்தல், முதலிய அசுசியான காரியங்களை கையாடாதிருங்கள். "மேல்ஜாதியாரென்று" புத்தியீனமாய் பெருமைபாராட்டு

பவர்களின் அற்பத் தனத்தையும், மனவிசால மனமின்மையும் பொறுத்து, அவர்களும் நீங்களும் ஒரே நாட்டிலேயே சாசுவதமாய் வாழ வேண்டும் என்கிற சத்தியத்தை மறவாதிருங்கள். ஓர் ஏக குடும்பத்தின் அங்கங்கள், அந்நியர் தங்கள் காரியங்களில் தலையிடுவதற்கு இடங் கொடாமல் தாங்கள் தாமே ஒருவரையொருவர் மன்னித்து, அன்பினாலேவப்பட்டு சமாதானம் செய்து ஐக்கியமாக வாழவேண்டும். தனக்குள் தானே பிரிந்து விரோதம் செய்யும் வீடாவது, இராஜ்யமாவது வாழ்ந்து. அது போலவே நாம் எந்த சமயத்தினராயிருந்தாலும், ஒருவரைப்பற்றி யொருவர் சந்தேகப்படாமல் நாமெல்லாரும் கடவுள் நமக்குக் கொடுத்த வெளிச்சத்தின்படி' சத்தியத்தையே தேடுகிறவர்களென்று உணர்ந்து ஒருவர் விஷயத்தில் ஒருவர் தயாள சிந்தையோடும், பரஸ்பர அனுதாபத்தோடும் நடந்து கொள்வோம். இகபர விஷயங்களில் மனிதருக்குள் அபிப்பிராய பேதங்களிருப்பது இப்பூலோகத்தில் இயல்புதானே. சமயத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு, தங்கள் தங்கள் சுய நலத்தையும், உயர்ந்த உத்தியோகம் அடைவதையும் நாடும் தன்னயக்காரத் தலைவரைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இவர்கள் உங்களுக்குள் பிரிவினையுண்டாக்கித் தங்களையே முன்னுக்குக் கொண்டுவரப் பார்க்கிறார்கள். மெய்யான தெய்வ பக்தி, ஜனசமூகப் பிரிவினையையல்ல, அன்பையும் ஐக்கியத்தையுமே உண்டு பண்ணும். இதையுணர்ந்து இந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்தவர்கள், முதலிய சகல மார்க்கத்தோராகிய நாமெல்லாரும் ஒரே தேசத்திலேயே எப்போதும் ஒன்றாய் வாழ வேண்டுமென்னும் சத்தியத்தை மறவாமல், அன்பும் ஐக்கியமாயிருப்போம்.

ஒருவர் குறைகளை யொருவர் பொறுத்து மன்னிப்போம், ஐக்கியமாய் ஜீவிப்போம். இது நமது தேச முன்னேற்றத் திற்கு இன்றியமையாத அவசியம்.

சிறு குழந்தைகளை விவாகம் செய்ய வேண்டாம். ஒரு மனுஷனுடைய எலும்புகள் சிறு பிராயத்தில் மெதுவாயிருந்து 21, 22, வயதுபோல்தான் கடினமாகி, பலனடைகின்றன. இந்த வயதாகுமட்டும் சரீரம் வளர்ந்து கொண்டிருக்கும். பருவம் முற்றுமுன் விவாகம் செய்வது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் சரீர பலஹீனத்திற்குக் காரணமாகும். பிறந்த குழந்தைகளில் ஏராளமான தொகை ஒரு வயதிற்குள் மரித்துப் போவதைக் குறித்து முன்னமே விவரித்திருக்கி றேன். குறைந்தது பெண்ணுக்கு 18 வயதும், ஆணுக்கு 22 வயதும் இருக்கவேண்டும். மேலும், ஓர் குடும்பத்திற்குச் சவாக்ஷணை செய்யத் தகுதிவருமுன் விவாகம் செய்யக் கூடாது. ஆணும் பெண்ணும் துர்நடத்தைக்கு விலகி, பகவான் கருணையால் சுத்த ஜீவியம் செய்யப் பிரயாசிக்க வேண்டும்.

சுய கண்டனம் நமது நாட்டில் மிக அவசியம். புகை வண்டி, சந்தை, வைத்தியசாலை முதலிய பொது ஸ்தாபனங் களில் நமது ஜனங்கள் ஒழுங்கில்லாமல் குழப்பங்கள் செய்து எத்துணை கேவலமாய் நடந்துகொள்ளுகிறார்கள். கிராமத்தில் ஒவ்வொருவரும் தன் இஷ்டப்படியே அடக்கமில்லாமல் தன் மூப்பாய் நடந்துகொள்வது அதிகக்கேட்டிற்கு இடமாயிருக் கிறது. பொது நன்மைக்காக நம்மை நாமே கண்டித்து அடக்கி ஒழுங்காய் நடந்துகொள்ளவேண்டும். எல்லாருக்கும்

நன்மையானதை நாடி நமது சவுகரியங்களைப் பெரிதாய்ப் பாராட்டாமலிருக்க வேண்டும். இப்படி நாடு வாழ்வதால் நாமும் வாழ்வோம்.

உங்கள் மனங்களை உயர்த்தி, இதர நாடுகளிலும் தேசங்களிலும் நடக்கும் சம்பவங்களை கவனத்தோடு படித்தறிந்து விசால புத்தியுள்ளவர்களாகுங்கள். தற்காலத்தில் எத்தனையோ வர்த்தமான பத்திரிகைகள், புஸ்தகங்கள் மூலமாய் அநேக காரியங்கள் பிரசுரமாகின்றன. வேறொன்றும் அறியாமல், ஆழ்ந்த கிணற்றில் அடைக்கப் பட்டிருக்கிற தவளையைப்போல் இராதேயுங்கள். இப்படி விசாலமனதும், பெரும் புத்தியும் உங்களுக்கு வரும்போது, "நான், எனது" என்கிற அற்ப சிந்தை போவதால், பிரிவினைகள் ஒழியும். தேசீக அன்பும், பொதுஜன அபிவிர்த்திமேல் தேட்டமும் சுரந்துவரும்.

---

விக்டோரியா பிரஸ், திருப்பத்தூர் :—36.

"RURAL LIFE IS NATIONAL LIFE": By Dr. Savarirayan Jesudasan, Kristukula Ashram, Tiruppattur. Price As. 6.

Dr. Jesudasan has an intimate understanding of rural problems. As a member of the Kristukula Ashram, he has worked in villages in the North Arcot District for the improvement of the position of the rural folk for whose welfare he has genuine concern. In the booklet under notice he surveys the problems of rural reconstruction briefly but comprehensively. He gives a mass of valuable statistics and makes helpful comparisons between conditions in this country and those in some foreign countries. We have an interesting account of what the Tiruppattur Ashram is doing in the cause of rural reconstruction.

Mr. Jesudasan's book is perhaps the best manual we have had in Tamil in recent months on the problems of rural uplift.

(*"The Hindu" 6th December 1936.*)

திருப்பத்தூர் கிறிஸ்துகுல ஆசிரம பிரசுரம்.

**Christukula Ashram, Tirupattur, N. A.**

தமிழ்ப் பாஷையில்.

| | Rs. A. P. |
|---|---|
| ஆசிரம பா மாலை (கவிராயர்களின் சரித்திர குறிப்புகளுடன்).... | 1—2—0 |
| ஆசிரம ஜெப மாலை .... | 0—3—0 |
| கிராம வாழ்வே தேச வாழ்வு .... | 0—6—0 |
| கிறிஸ்துகுல ஆசிரமம் .... | 0—6—0 |
| கிராம சுகாதார நூல் .... | 0—2—0 |
| தெய்வ பக்தியும், தேச பக்தியும் .... | 0—1—6 |
| பக்தர் அநுபவம் .... | 0—4—0 |
| சிலுவையின் தாற்பரியம் .... | 0—2—0 |
| ஜெயலில் ஜெயசீலன் (C. L. S.) .... | 0—6—0 |
| தெய்வ தற்சொரூபன் (C. L. S.) .... | 0—8—0 |
| ஆசிரமங்களும் தற்காலவாழ்க்கையும் .... | 0-10—0 |
| இரக்ஷணிய சரிதம் .... | 0—8—0 |
| எனது உலகசுற்றுப்பிரயாணம் (படங்களுடன்).... | 0-10—0 |
| மகாத்துமா வீர சூரியா .... | 0—6—0 |

## IN ENGLISH.

| | |
|---|---|
| Indigenous Expression of Christianity .... | 0—2—0 |
| Students and Villagers .... | 0—2—0 |
| Quest for Truth .... | 0—0—6 |
| Christukula Ashram .... | 0—6—0 |
| Jesus Christ and the Situation in India .... | 0—2—0 |
| Diary of a World Tour (with pictures) .... | 1—0—0 |
| Life of Colonel Werasoorya. (Salvation Army) ... | 0—6—0 |

ஒரே சமயத்தில் அதிக புத்தகம், வாங்குபவருக்கு விலை குறைத்து கொடுக்கப்படும்.